KALKI 18.12.88 ரூ. 2.

கல்கி

கலைவிழாச் சிறப்பிதழ்



இளைஞர்கள் நாடும் இசை நூலகம்


பற்களைப் பற்றிய ஒரு பெரிய உண்மை
வாய் துர்நாற்றம் என்பது பற்களைவிட அதிகம்,
ஈறுகள் சம்பந்தப்பட்டதாகும்.
மற்றுமொரு பெரிய உண்மை
போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட்டில்
உள்ள ஒப்பற்ற அஸ்ட்ரிஜென்ட் மட்டுமே ஈறுகளை
வலுவாக்கி அவற்றை ஆரோக்கியமாக வைக்கிறது.
அதனால் வாய் துர்நாற்றம் ஏற்பட வாய்ப்பே இல்லை.
நுரை வளமுள்ள
போர்ஹென்ஸ்
—நீல நிறப் பேக்கிலே.
Forhan's
Forhan's
கட்டுப்படுத்தப்பட்ட
நுரையுள்ள
—ஆரஞ்சு பேக்கிலே.
போர்ஹென்ஸ்
பராமரிப்பு
32 ஈறும் பத்திரம்
ஒரு பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்.
GM.27/88.Tm

திருவாரூரில் மும்மூர்த்திகள் விழா. அது 1986 — ஆம் வருடம். தனி ஆவர்த்தனத்தின் போது, தவுல் பழனிவேல் மெய் மறந்து வாசிக்க, ஒரு பக்கத்துத் தோல் கிழிந்து போய்விட்டது! உடனே தாமதிக்காமல், இரண்டாவது தவுலை எடுத்து வைத்துக் கொண்டு தனி ஆவர்த்தனத்தைத் தொடர்ந்தார். திடீரென ஒரு சப்தம்.... இரண்டாவது தவுலின் தோலும் கிழிந்து விட.... மூன்றாவது தவுலில் தனி ஆவர்த்தனம் தொடர... அதுவும் கிழிய, ஒரு விநாடி திகைத்துவிட்ட பழனிவேல், உடனே சமாளித்துக் கொண்டு, கிழிந்த பகுதியைத் தவுல் உறையால் மூடிவிட்டு, குச்சியை வைத்துக் கொண்டு ஒரு பக்கத்திலேயே ஆவர்த்தனத்தைத் தொடர்ந்து வாசித்து முடித்துவிட்டார்! முன் வரிசையில் அமர்ந்து, இத்தனையையும் பார்த்துக் கொண்டிருந்த பிரமுகர்கள், சகவித்வான்கள், ரசிகர்களுக்குப் பிரமிப்பு நீங்க அதிக நேரமாயிற்று!

இளவயது முதலே தவுல் வித்வான் ஹரித்வாரமங்கலம் ஏ. கே. பழனிவேல் மீது சிவவடிவேலுவுக்கு அபார மரியாதை உண்டு. எனவேதான் ''தவுல் மற்றும் தவுல் இசையின் மேம்பாட்டுக்குத் திரு. பழனிவேல் அவர்களின் தொண்டு'' என்கிற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டார் சிவவடிவேலு. அதனை பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்து எம். ஃபில் பட்டம் பெற்றார். சிவவடிவேலுவும் ஒரு தவுல் வித்வான்தான்.

தவுல் வாத்தியம் பற்றிச் சிவவடிவேலு சொல்கிறார்:



தவுல் பழனிவேல்

சிவவடிவேலு

ராவணன் உருவாக்கிய தவுல்

முன் காலத்தில், கோவில் திருவிழா சமயங்களில் கொடியேற்றத்தின் போதும், கொடி இறக்கப்படும் போதும் தவுலுக்குச் சிறப்புப் பூஜை செய்யப்படும். தவுலை உருவாக்கியது ராவணன் என்றும், இலங்கையிலும் தவுல் பூஜை வழக்கத்தில் இருந்தது என்றும் தெரிகிறது. தவுல் என்றால் ''குற்றமில்லாதது'' என்று பொருள்.

தவுலில் உள்ள உருளையான பகுதி தவுல் கட்டை. பலா மரத்தைக் கடைந்து இது செய்யப்படுகிறது. பழங்காலத்தில், இந்த மரத்தாலான பகுதியில் வெள்ளித் தகடு பொருத்துவார்கள். தஞ்சை அரண்மனையில் ஒரு தவுல் வித்வானுக்கு இப்படிப் பொருத்துவதற்காக இருபத்திரண்டு சீர் வெள்ளி கொடுக்கப்பட்டதாய் ஒரு குறிப்பு கூறுகிறது.

தவுலின் இருபுறங்களிலுமுள்ள தோலாலான பகுதிக்குத் 'தட்டு' அல்லது 'மூட்டு' என்று பெயர். இதற்குக் கன்றுக்குட்டி அல்லது ஆட்டுத் தோலைப் பயன்படுத்துகிறார்கள். தவுல் கட்டையின் திறந்த பக்கங்களில் தோலைப் பரப்பி, கட்டையில் ஒட்டி, வளையங்கள் பொருத்தப்படுகிறது. இவ்வளையங்களுக்கு 'வலை' என்று பெயர். கைவிரல்களால் வாசிக்கும் தோல் பக்கத்துக்கு 'வலந்தலை' என்றும் குச்சியால் வாசிக்கும் பக்கத்துக்கு 'இடந்தலை அல்லது தொப்பி' என்றும் பெயர். தவுல் குச்சி 'திருவாட்சி' மரத்தில் செய்யப்படுகிறது. இரு பக்கத்து வலைகளையும், எருமை மாட்டுத் தோல் கொண்டு இழுத்துக் கட்ட, தோல் பகுதியில் நல்ல டென்ஷன் இருக்கும்.

தொப்பியின் உட்புறம் நடுப்பகுதியில் கறுப்பு நிறச் சாந்து பூசப்படும். இது பதம். தவுல் மென்மையான சப்தமெழுப்ப இதுவே காரணம்.

தவுல் வாசிப்பின் போது கைவிரல்களில் அணியப்படுவது 'கூடு'. மைதா பசை அல்லது சாதத்தையும், துணியையும் கொண்டு கூடு செய்யப்படுகிறது.

— எஸ். சந்திரமௌலி.

புகைப்படம்: யோகா



சினிமா வந்தது; நாடகம் நலிந்தது; டீ.வி. வந்தது; நாடகம் நசிந்தது!

—கிரீஷ் கர்னாட் பேட்டி

கே: தாங்கள் சென்னை, கிருஷ்ண கான சபாவின் நாட்டிய கலா மகா நாட்டிற்குத் தலைமை தாங்கப் போகிறீர்கள்! நாடகத் துறையைச் சேர்ந்த உங்களுக்குத் தென்னிந்தியாவில் வேருடைய கலைகளான கர்நாடக இசை, பரதநாட்டியம் போன்றவற்றில் ஈடுபாடு உண்டா?

ப: பாரம்பரிய நாடகங்கள் இசையின் அடிப்படையில் அமைந்தவைதாம். இசை, நாட்டியம்: எல்லாவற்றையும் இணைக்கும் ஒரு பாலமாக நாடகங்கள் இருந்தன. அதனால் இசையில் எனக்கு ஆர்வம் உண்டு. மேலும் நான் சென்னையில் ஏழு ஆண்டுக் காலம் வசித்து, ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி பிரஸில் வேலை பார்த்தேன். அப்பொழுது எனக்குக் கர்நாடக சங்கீத, பரதநாட்டியக் கச்சேரிகளுக்குச் செல்வதற்கு நிறைய வாய்ப்புக்கள் கிடைத்தன. பாலசரஸ்வதியுடன் நல்ல பரிச்சயம் ஏற்பட்டது. திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியையும் ஒன்றிரண்டு முறைகள் சந்தித்திருக்கிறேன். இதனாலெல்லாம் என் கலை ஆர்வம் வளர்ந்தது.

கே: சங்கீத நாடக அகாடமியின் குறிக்கோள் என்ன? முக்கிய பணிகள் என்னென்ன?

ப: இசை, நாட்டியம், நாடகம் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களுமே அகாடமியின் பொறுப்பு என்று சொல்லலாம். பல உபயோகமான காரியங்களைச் செய்துள்ளது அகாடமி. உதாரணமாக, நாட்டின் கிழக்குப் பிரதேசங்களில் ஆடப்படும் 'சாவ்' என்ற நடனக் கலையைப் பற்றிப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு யாருமே கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். அகாடமி அதன் புகழைத் தில்லி

வரை கொண்டு வந்திருக்கிறது. அதே போல் கேரளாவைச் சேர்ந்த கூடியாட்டம் என்ற கலை வடிவம் அநேகமாக மறைந்து கொண்டு வருகிறதென்றும், அதற்காக அகாடமி ஏதாவது செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்தக் கலையைக் கற்பதற்கும், கற்றுக் கொடுப்பதற்கும் வேண்டிய பண உதவியை அகாடமி செய்வதாக இருக்கிறது. தில்லியில் கதக் கேந்திரா இம்பாலில் மணிப்பூர் அகாடமி ஆகியவை நடத்துகிறோம். தவிர, நாடெங்கிலும் உள்ள பல தனியார் கலை அமைப்புகளுக்கு மானியம் வழங்கி, அவற்றின் பணிகளுக்கு வேண்டிய உதவியளிக்கிறோம்.

கே: தாங்கள் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு அகாடமியில் வகுக்கப்பட்ட புதிய திட்டங்கள் என்ன?

ப: இந்துஸ்தானி இசையைப் பற்றியும், கர்நாடக சங்கீதத்தைப் பற்றியும் அடிப்படை அறிவைப் போதிக்கும் நோக்கத்துடன் காஸெட்டுகள் வெளியிடும் திட்டம் ஒன்றை அகாடமி வகுத்திருக்கிறது.

கே: பாரம்பரியக் கலைகளை நம்பி வாழும் கலைஞர்கள் ஏராளமாகப் பணம் சம்பாதிப்பதில்லை. சில கலைஞர்கள், வயது காலத்தில் பணக் கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். சங்கீத நாடக அகாடமி வயதான கலைஞர்களுக்குப் பென்ஷன் வழங்க வழி வகுக்க முடியாதா?

ப: அகாடமிக்கு அவ்வளவு பண வசதி இல்லை. நாடெங்கிலும் எத்தனையோ கலைஞர்கள் இருக்கிறார்கள். பென்ஷன் என்று கொடுத்தால், ஒரு கணிசமான தொகை கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அது கலைஞர்களை அவமதிப்பது போல் ஆகிவிடும். யாராவது கலைஞருக்கு ஆபரேஷனுக்கோ, அல்லது வேறு மருத்துவச் செலவிற்கோ பணம் தேவையாக இருந்தால், அதற்கு நாங்கள் உதவுகிறோம். மற்றபடி மாநில அகாடமியோ, அரசோ ஏதாவது வழி செய்யலாம்.

கே: டீ.வி. வந்த பிறகு நாடகங்களுக்கு மவுசு குறைந்து விட்டதே! இந்நிலையில் நாடகக் கலைக்கு என்ன எதிர்காலம் இருக்கிறது?

ப: நம் நாட்டில் நாடகம் (தியேட்டர்) என்பதை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று நம்முடைய கிராமப்புறங்களைச் சேர்ந்த தெருக்கூத்து, யக்ஷகானா போன்ற பாரம்பரியக் கலைகள் **(folk theatres)** இந்தத் தொன்மையான கலைகள் எப்பொழுதோ படுத்துப் போக ஆரம்பித்து விட்டன. மற்றொன்று நகரப் புறங்களில் நாடகக் கம்பெனிகள் நடத்திய நவீன நாடகங்கள். டிக்கெட் வாங்கி, அரங்கங்களில் உட்கார்ந்து நாடகம் பார்க்கும் மரபு மேற்கத்திய நாடுகளிலிருந்து நம்மிடையே உண்டான ஒரு பழக்கம். இப்படிப்பட்ட நாடகங்கள் 1916 ஆம் ஆண்டிலிருந்து நம் நாட்டில் நிறைய இடங்களில் ஆரம்பமாயின. தமிழ் நாட்டில் நவாப் ராஜமாணிக்கம், டி.கே.எஸ். சகோதரர்களின் நாடகங்கள் பிரபலமாக இருந்தன. அவை பொதுவாக இசைக்கும் காட்சியமைப்புக்கும் முக்கியத்துவம் அளித்தன. மராட்டி நாடகங்களில் பால்கந்தர்வாவின் பாட்டுகளை மட்டும் கேட்டு விட்டு, வசனம் வரும் பொழுது ஜனங்கள் வெளியே எழுந்து போய் விடுவார்கள்! இத்தகைய நாடகங்கள் மக்களுக்கு வழங்கிய இசையையும் பகட்டான ஜோடனையையும் சினிமா இன்னும் அதிக சக்தியுடன் வழங்க ஆரம்பித்து விட்டதே! ஆக, டீ. வி. வருவதற்கு முன்பே நாடகத்தின் வீழ்ச்சி ஆரம்பித்து விட்டது. டீ. வி. யினால் நிலைமை மேலும் மோசமாகி விட்டது!

கே: நாடகத் துறைக்குப் புத்துணர்ச்சியளிக்க, சங்கீத நாடக அகாடமி ஏதாவது செய்ய முடியுமா?

ப: காலத்தின் மாற்றங்களை எதிர்த்து நம்மால் அதிகம் செய்ய முடியாது. ஆனால்



ஜனாதிபதியின் தங்கப் பதக்கத்தை 'சம்ஸ்காரா' என்ற கன்னடத் திரைப்படம் 1971 — இல் பெற்றபோது இதற்கு வசனமெழுதி நடிக்கவும் செய்த கிரீஷ் கர்னாட் மிகவும் பிரபலமடைந்தார்.

தற்போது மத்திய சங்கீத நாடக அகாடமியின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள கர்னாட், யயாதி, நாகமண்டலா போன்ற பல நாடகங்களை எழுதியிருந்தாலும் இவரைப் புகழேணியின் உச்சிக்குக் கொண்டு சென்றது துக்ளக் என்ற நாடகமே.

நடிகர், இயக்குனர், வசனகர்த்தா என்ற முறைகளில் பல கன்னட, ஹிந்தி, வங்க மொழிப் படங்களுக்கு மெருகேற்றியுள்ளார் கிரீஷ் கர்னாட்.

அகாடமி இது சம்பந்தமாக் ஒரு முயற்சியைக் கையாளப் போகிறது. இதுவரையில், அகாடமி நிறைய நாடகக் குழுக்களுக்கு, நாடகங்கள் தயாரிப்பதற்கு என்று ரூ 5000, ரூ 6000 என்று மானியம் வழங்கிக் கொண்டிருந்தது. அதை விட்டு விட்டு, ஒரு சில சிறந்த நாடகக் குழுக்களைத் தேர்ந்தெடுத்து, சீரியஸான தரமான நாடகங்களைத் தயாரிக்கும் பொறுப்பை அளித்து, அக் குழுக்களின் முழுச் செலவிற்காக இரண்டு லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கலாம் என்று திட்டமிட்டுள்ளது.

கே: மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம் போன்ற சில மாநிலங்களில் மட்டும் இன்னமும் நாடகங்களுக்கு நல்ல ஆதரவு இருக்கிறதே? இதற்கு என்ன காரணம்?

ப: இதற்கு ஒரு விளக்கம் இருக்கிறது... பலர் நான் சொல்லும் இந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளாமல் போகலாம். ஆனாலும் கூறுகிறேன்... எந்தெந்த மொழிகளில் திரைப்படங்கள் அதிகமாகத் தோன்ற ஆரம்பித்தனவோ, அந்த மாநிலங்களிலெல்லாம் நாடகங்கள் படுத்துப் போயின. பம்பாய் நிறைய இந்திப் படங்களைத் தயாரித்து, எல்லா தியேட்டர்களையும் பிடித்துக் கொண்டதால் மராட்டிப் படங்கள் அதிகம் வெளிவரவில்லை. அதனால் மக்கள் மராட்டி நாடகங்களை இன்னமும் விரும்பிப் பார்க்கிறார்கள்.

கே: மேற்கு வங்காளத்தைப் பொறுத்தவரையில் தாங்கள் அப்படிச் சொல்ல முடியாதே?

ப: வங்காளத் திரைப்படத் துறை என்று எங்கு இருக்கிறது? பிரிவினைக்குப் பிறகு, 1950—ல், கிழக்கு பாகிஸ்தான் வங்காளப் படங்களின் இறக்குமதியைத் தடை செய்ததிலிருந்தே வங்காளத் திரையுலகம் மடிந்து போய் விட்டதே! அந்த சமயத்திலிருந்து வங்காள நாடகங்கள் உருவாகத் துவங்கி விட்டன. மேற்கு வங்காளத்தில் 'ஜாத்ரா' எனப்படும் கிராமியக் கலை நாடகங்கள் இன்னமும் ரொம்பப் பிரபலமாக உள்ளன.

கே: தாங்கள் எழுதிய துக்ளக் நாடகம், தங்களுக்கு ஒரு சிறந்த நாடக ஆசிரியர் என்ற பெயரையும், நல்ல புகழையும் வாங்கிக் கொடுத்தது. தங்களை துக்ளக் நாடகத்தை எழுதத் தூண்டியது எது?

ப: கீர்த்திநாத் கூர்த்கோடி என்ற புகழ் பெற்ற கன்னட நாடக விமர்சகர் 1960—ல் கன்னட நாடகங்களைப் பற்றி ஒரு புத்தகம் எழுதினார். அதில் அவர் கன்னடத்தில் எழுதப்பட்ட சரித்திர நாடகங்கள் எல்லாம் இக் காலச் சூழ்நிலைக்குச் சம்பந்தமே இல்லாத வெறும் காதல் நாடகங்கள் என்று குறிப்பிட்டிருந்தார். அவருடைய ஆதங்கம் தான் என்னை உசுப்பி விட்டது. சரித்திரப் புத்தகத்தை எடுத்து மொகஞ்சதாரோ காலத்திலிருந்து படித்துக் கொண்டே வந்தேன். முகமது பின் துக்ளக்கின் ஆட்சி காலத்தைப் பற்றிப் படித்த போது அதைப் பற்றி எழுத வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. சுமார் ஆறு மாத காலம் அது சம்பந்தமாக நிறையப் படித்து, ஆராய்ச்சி செய்து அந்த நாடகத்தை எழுதினேன்.

கே: சினிமா அல்லது டீவியில் நடிப்பதை விட, நாடகங்கள் எழுதுவது உங்களுக்கு அதிக திருப்தியை அளிக்கிறதா?

ப: நிச்சயமாக! நாடகங்களில் நடிப்பது கூட சினிமாவில் நடிப்பதை விட அதிக மனத் திருப்தியை அளிக்கிறது. படங்களில் நடிப்பது பணத்திற்காகத்தான்.

கே: பணத்திற்காக மட்டுமா? அல்லது படங்களில் நடிப்பதால் தங்களுக்கு அதிகம் விளம்பரம் கிடைக்கிறது என்பதனாலா?

ப: விளம்பரத்தைப் பற்றி நான் அதிகம் கவலைப்படவில்லை. என்னுடைய நாடகங்கள் மூலமாகவே எனக்குப் பெயர், புகழ் கிடைத்திருக்கின்றன. பணத் தேவைக்காகவே படங்களில் நடிக்கிறேன்.

பேட்டி: **ரமாமணி சுந்தர்**

படங்கள்: **செந்தில் ஆர். கணேஷ்.**



அடுத்த இதழில்...

ஈழத் தமிழரைக் காக்கப் போவது யார்?

— கவர்ஸ்டோரி

அணுமின் நிலையம் ஆபத்தானதா?

— ஓர் ஆய்வு



பிரபஞ்சன் எழுதும்

சுகபோகக் தீவுகள்

'மானுடம் என்று வெல்லும்' என்று
வினா எழுப்பும் புதுமைத் தொடர்கதை

கல்கி

15-1-89
பொங்கல் மலரில்
ஆரம்பம்






* நல்ல யோசனை



* ஜே போடுவோம்



* அரசியல்...




* ...அறிவு.



நீங்கள் கேட்டவை

— தராசு



* தண்டனைகள்



* என்ன குறி?



* அமெரிக்காவை வென்றவர்.

*** க. டி. பூவராகவன், விருத்தாசலம்.**

? 'யாசர் அராஃபத்துக்கு விசா தர அமெரிக்கா மறுத்து விட்டதே...?

! அராஃபத்துக்காகவே ஐ.நா. சபைக்கூட்டத்தை ஜெனிவாவில் நடத்துவது என்று தீர்மானமாகியிருக்கிறதே! இந்த விஷயத்தில் அமெரிக்காவின் குறுகிய நோக்குக்குத் தோல்வியும் அராஃபத்துக்கு வெற்றியும் கிடைத்து விட்டதே!

*** ஜி. ஆர். கிருஷ்ணன், தியாகதுருகம்.**

? கல்கியில் பண்ருட்டியின் பதில்கள் தங்களுக்குச் சரியாகப் பட்டதா?

! தேர்தல் நெருங்கும் சமயத்தில் பல்வேறு கட்சியினரும் தங்கள் நிலையைத் தெளிவுபடுத்த வாய்ப்புக்கள் அளிப்பதே நோக்கம். வாசகர்கள் பல்வேறு கருத்துக்களையும் அசை போட்டு நல்ல முடிவுகளுக்கு வர வேண்டும். எனது பார்வையில் பண்ருட்டியின் பதில்களில் சில சரியானவை; சில அபத்தமானவை.

*** ஏ. ஜி. கல்யாணசுந்தரம், மணியக்காரம் பாளையம்.**

? செஞ்சோற்றுக் கடன் தீர்த்ததில் சிறந்தவன் கும்பகர்ணனா? அல்லது கர்ணனா?

! செஞ்சோற்றுக் கடன் தீர்க்க ஒருவன் தர்மத்தைக் கைவிட்டான்; ஒருவன் பாசத்தைத்துறந்தான். எது கடினமானது? கௌரவருடன் நீண்ட காலம் சகோதரன் போல் பழகிவிட்ட கர்ணனுக்குத் திடுமெனப் பாண்டவரிடமும் குந்தியிடமும் ஏற்பட்ட பாசத்தை வெல்வது கடினமாக இருந்திராது. ஆனால் தர்மத்தின் பால் நம்பிக்கை கொண்ட கும்பகர்ணனுக்கு ராவணனின் அதர்மத்துக்குத் துணை போவது ரொம்பக் கஷ்டமாகவே இருந்திருக்கும். என் மதிப்பில் உயர்பவன் கும்பகர்ணனே.

நால்வர் அணியை இனி எப்படி அழைப்பது?

*** நளினி, சென்னை — 28.**

? வருஷத்துக்கு ஒருதரம் இசை விழா கொண்டாடிவிட்டு அப்புறம் மறந்து விடுவதா?

! ஒரு நல்ல டேப் ரிகார்டரில் முதலீடு செய்து விட்டால் எப்போதும் இசை விழா தான். சமீபத்தில் கேட்ட கேஸட் சந்தானத்தின் அறிமுகத்துடன் நாகை முரளியின் வயலின் இசை. தேன் தாரைதான் போங்கள்!

* எம். பஜ்ருதீன், கொடிக்கால்பாளையம்.

? கலைஞரைத் 'தமிழ் வெறியர்' என்று ராஜீவ் கூறுவது பற்றி...?

! தாய் மொழிப்பற்று என்பது வெறியல்ல. தாய்மொழிப் பற்று காரணமாக அதனைப் பிறர் மீது கட்டாயமாகத் திணிக்க முயல்வதுதான் வெறி. எனவே யார் வெறியர் என்பது ராஜீவுக்குப் புரியாவிட்டாலும் நமக்கு நன்றாகவே புரிகிறது.

* மஞ்சுதேவன், கல்கத்தா.

? கடைசியாக 'விசிட்' செய்த ஊர் பற்றி...?

! 'ரிடையர்' ஆன பிறகு இங்கே 'செட்டில்' ஆக முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று எண்ண வைத்த நகரம் பெங்களூர். இதமான சீதோஷ்ண நிலை. ஊரின் சுத்தம், மக்களின் கட்டுப்பாடு, சாலைகளின் சீர்மை இவை வெகுவாகக் கவனத்தைக் கவர்ந்த விஷயங்கள்.

* கே. வி. நாதன், நெய்வேலி.

? 'பார்லிமெண்ட் நிகழ்ச்சிகளை டீ. வி. மூலம் ஒளிபரப்ப வேண்டும்' என்று வசந்த் சாத்தே கூறியுள்ளாரே?

! நல்ல யோசனைதான். நேரடி ஒளிபரப்பு, (சென்ஸார் 'செய்யாமல்) பார்லிமெண்ட் உறுப்பினர்கள் தங்கள் பொறுப்புக்களை உணரச் செய்யும்; சுறுசுறுப்புடன் ஆனால் கண்ணியமாக இயங்க உதவும்.

* அ. முஸ்தபா, தக்கோலம்.

? இந்தியா இரண்டாவது டெஸ்டில் தோல்வியைத் தழுவியது பற்றி...?

! துரதிர்ஷ்டம்தான் என்றாலும் முதலிலும் மூன்றாவதிலும் சக்கைப் போடு போட்டு சீரிஸை வென்று விட்டதே. போதாதா? வெங்சர்க்கார் தலைமைக்கு ஒரு 'ஜே' போட்டு வைப்போம்!

* எஸ். ராம்கோபால், சென்னை — 33.

? ஒரு வாசகர் கேள்விக்கு, 'பத்திரிகைக்கு 'நஷ்டம்' என்று பெயர் வையுங்கள்' என்று சொல்லியிருக்கிறீர்கள். கல்கி நஷ்டத்தில் தான் நடத்தப்பட்டு வருகிறதா, தராசே?

! நஷ்டம் வராமல் ரொம்பக் கஷ்டப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. நஷ்டம் என்ற பெயரை மாற்றி, கஷ்டம் என்று வைத்துக் கொள்ளட்டும். ஆட்சேபணை இல்லை.

* ஆர். வேலுமணி, கடலூர் — 2. *

? தி.மு.க.வுக்குப் பிரசாரம் செய்யக் கூடிய அளவுக்கு லட்சுமிக்கும் ராதிகாவுக்கும் அரசியல் அறிவு இருக்கிறதா?

! இதென்ன கூத்து! அரசியல் பிரசாரத்துக்கு அரசியல் அறிவு தேவை என்கிறீரா! வசை பாடத் தெரிந்தால் போதும் என்றல்லவா எண்ணிக் கொண்டிருக்கிறேன்! நிற்க, இன்று பல கட்சிகளில் உள்ள பல அரசியல் பிரமுகர்களின் அரசியல் அறிவுக்கு லட்சுமி, ராதிகாவின் அரசியல் அறிவு ஒன்றும் குறைந்து போய்விடாது.

* அ. ஜமால் மொய்தீன், சென்னை.

? இப்போது தேர்தல் நடந்தால் இ. காங்கிரஸ் தோற்கும் என்று பங்காரு அடிகளார் ராஜீவுக்குக் குறி சொன்னாராமே....?

! பங்காரு அடிகளார் என்ன குறி சொன்னார் என்பது பற்றிப் பலரும் பலவிதமாகக் குறி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நானும் குறி சொல்ல விரும்பவில்லை. நம்பிக்கையும் இல்லை.

* சி. மணி, புத்தனாம்பட்டி.

? 'ஜெயலலிதாவின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தமிழகத்தின் சொத்தை விற்றால் கூட முடியாது என்று அன்பழகன் கூறுகிறாரே?

! தமிழகத்தையே விற்றாலும் முடியாது!

* கே. வி. எஸ். மணியன், குடியாத்தம்.

? நேரு நூற்றாண்டு விழாப் பேரணி என்று கூறிவிட்டு நேரு பற்றி ராஜீவ் பேசாததைக் கருணாநிதி சுட்டிக்காட்டியிருக்கிறாரே?

! பேசாததே நல்லதாய்ப் போயிற்று. தகுதி வேண்டாமா?

* எம். லேனாப்பிரியன், திருமங்கலம்.

? ரசிக்கவே முடியாதது எது? சொல்லுங்கள்!

! அரசியலில் இறையுணர்வு இருக்க வேண்டும். ஆனால் மதப்பற்று, மதவெறி இருக்கக் கூடாது. பர்னாலாவுக்கு மதத் தலைவர்களால் விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளை என்னால் ரசிக்கவே முடியவில்லை. பஞ்சாப் அரசியல் மேலும் சிக்கலாகிறது.

* அ. இராஜுதீன், வேட்டைக்காரனிருப்பு.

? நால்வர் அணியை இனி எப்படி அழைப்பது?

! இன்னும் சில காலம் பொறுங்கள். பஞ்ச பாண்டவர் என்பவர் கட்டில் காலைப் போல மூன்று பேர் என்று கூறி இரு விரல் காட்டி ஒன்று என எழுதி அதையும் அழித்த கதையாகிவிடும்.

* ரூ. 20 பரிசு பெறுபவர்:
ஆர். வேலுமணி,
74/9, கப்பராய நகர்,
கடலூர் — 2.



வட்டமேஜை

'புரிகிறது பண்ருட்டியாரே...!'

• பண்ருட்டி மனந்திறந்து பேட்டியளித்தது குறித்து மகிழ்ச்சியே என்றாலும் கருணாநிதி என்கிற தனிநபர் ஒழிப்புப் போராட்டத்திற்கு அவர் அளித்த விளக்கம் ஆரோக்கியமான அரசியல் சூழ்நிலைக்குத் தனிநபர் செல்வாக்கு மறைய வேண்டும் என்கிற அவரது அடிப் படைக் கொள்கைக்கு முரணாக அமைந்தது வருத்தத் தையே அளித்தது.

சென்னை — 28. எல். ஆர். சுந்தரராஜன்.

• பண்ருட்டியிடம் ஜெயலலிதா — எம்.ஜி.ஆர். உறவை நியாயப்படுத்தியது பற்றியும், எம்.ஜி.ஆர். தவறே செய்யவில்லையா? என்றும் நால்வர் அணியின் 'ஈர்ப்புச் சக்தி' பற்றியும் கேட்கப்பட்ட கேள்விகள், கல்கியின் அரசியல் பேட்டிகள் எவ்வளவு ஆணித்தர மாகவும், துணிச்சலாகவும் உள்ளன என்பதையே காட்டுகின்றன. சிறந்த பேட்டி! தொடரட்டும் உங்கள் பத்திரிகைப் பணி!

தஞ்சாவூர் — 7. கி. ஆதவன்.

• நல்லவேளை, கருணாநிதியை எதிர்க்க, கருணா நிதியுடன் வேண்டுமானாலும் கூட்டுச் சேருவேன் எனப் பண்ருட்டி சொல்லாமல் விட்டாரே!

திருவனந்தபுரம். எஸ். எஸ். மணி.

• பண்ருட்டி பேட்டி படித்தேன்... முரண்பாடாக வும் உண்மைக்குப் புறம்பாகவும் பேசியிருக்கிறார். முட்டாளாக இருக்கும் ஒரு தலைவனைக் கூட மன்னித்து விடலாம். ஆனால் மக்களை முட்டாளாக்க நினைப்பவரை எப்படி மன்னிப்பது? இதுபோன்ற மனிதர்களைப் புறக்கணிக்க உங்களைப் போன்ற சமுதாய உணர்வுமிக்க பத்திரிகைகள் முன்வர வேண் டும்.

மதுரை. மா. தர்மராஜ்.

• பண்ருட்டி ராமச்சந்திரனின் பேட்டியைப் படித் தால் 'நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும்' என்ற குறிக்கோளுடன் செயல்படுவதாகத் தெரிய வில்லை. கருணாநிதியை ஆட்சிக்கு வராமல் தடுக்க வேண்டும் என்பதிலேயே குறியாய் இருக்கிறார் என்பது நன்கு புரிகிறது.

சென்னை — 7. லாவண்யா ப்ரியன்.

• பெனாசிர் அவர்கள் பிரதமராகப் பதவியேற்ற இந்த மகிழ்ச்சியான வேளையில், அவரின் சுயசரிதை யின் ஒரு பகுதியை வெளியிட்டுப் பாராட்டுக்களை அள்ளிக் கொண்டீர்கள். ஓவியர் ம.செ. பெனாசிரின் உருவத்தைத் தத்ரூபமாகத் தீட்டியிருந்தார். பாராட் டுக்கள்.

இடையகோட்டை. அல்—அமீன் ஃபாரூக்.

• கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரி மாணவி களின் எழுச்சிமிக்க எண்ணங்கள் அவர்கள் வாழ் வில் ஒளிமயத்தை உண்டாக்கி மற்றவர்களையும் முன்னேற்ற வழி காண்பிக்கும்.

மேட்டுப்பாளையம். பி. ஏ. வஹாத்.

• மாணவிகளின் பிரச்னைகளைத் தீர்க்கும் 'மாண விகள் நல்வாழ்வுக் குழு' மற்ற கல்லூரி ஆசிரியர்களுக் கும் மாணவ — மாணவிகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டு. கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் உள்ளது போன்ற குழுக்கள் அனைத்துக் கல்லூரிகளிலும் இருந்தால் மாணவச் செல்வங்களின் ஒழுங்கீனங்க ளைத் தவிர்க்கலாம். மேலும் பிரச்னைகள் காரண மாக மாணவ — மாணவிகள் தற்கொலை செய்து கொள்வதையும் நாம் பார்க்கிறோம். அதனால் தற்கொலையைத் தடுக்கும் மருந்து 'மாணவிகள் நல் வாழ்வுக் குழு'.

வேலூர். பொ. பொற்செல்வன்.

• 'சூரியன் மேற்கே உதிக்குமா? நரசிம்மராவ் விரும்புவது நடக்குமா?' என்ற இரண்டு வினாக்குறி களுக்கு விடை தேடும் தங்கள் தலையங்கம் அற்புத மானதோர் ஆய்வரங்கமாகவே திகழ்ந்தது. ஈழப் பிரச்னையின் நுணுக்கமான பகுதிகளை மறந்து விட்டுப் பேசி வருகிற நமது வெளியுறவுத் துறை அமைச்சருக்கு அவற்றை நுட்பமாக விளக்கியிருக் கிறது தலையங்கம். குறிப்பாக, 'ஒரு புதை சேற்றில் ராஜீவ் இந்தியாவையும் இந்திய ராணுவத்தையும் சிக்க வைத்திருக்கிறார்' என்ற வரிக்குள் புதைந்து கிடக்கும் அர்த்தங்கள் ஆயிரம். 'எத்தனை சீக்கிரம் மீண்டு வருகிறோமோ, நல்லது' என்பது கல்கியின் கருத்து மட்டுமல்ல. இந்தியாவின் நலனையும், கௌரவத் தையும் வேண்டுகின்ற அத்தனை பேரின் ஒருமித்த கருத்துமாகும்.

திருக்குவளை. வெற்றிப்பேரொளி.

• கடைசிப் பக்கச் செய்திகள் அனைத்துமே படு சுவாரசியம்! இது போன்ற புதுமையான, விநோத மான செய்திகள் தொடர்ந்தால் தேவலை.

திருச்சி — 16. எஸ். ராஜகோபால்.

• விதியின் வலிமையை முரளி, அவன் தாய், லாட்டரிச் சீட்டு — இவற்றைக் கொண்டு எளிமையாய்ச் சொல்லி விட்டார் பாரதி வீரராகவன்! வந்த அதிர்ஷ் டம் போனதை எண்ணி, அவர்களை விட எங்களுக் குத்தான் அதிக வருத்தம்! கதைக்கு ஓவியம், கூடுத லாய்ச் சோகத்தைச் சேர்த்தது.

குத்தாலம். எஸ். ராஜா.

• 'ரம்யா ஏன் பொய் சொன்னாள்?' இதை இருப தாம் நூற்றாண்டின் சிறுகதையென்று ஒப்புக் கொள்ள முடியுமா? எந்த மருமகள் இப்படி கேட்காமலேயே பத்தாயிரம் ரூபாய் வரை மாமனாருக்குக் கொடுக்க முன் வருகிறாள்? வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான்!


திருச்சி — 2. ஆற்காடு எழிலன்.

• கோரிக்கைகளின் நியாயங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதை விட, அவை வெளிப்படுத்தப்படும் விதங் களின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும், நடைமுறை நிலையை ஆராய்ந்த எம். எஸ். உதயமூர்த்தியின் கட்டுரை — அபாரம்! 'போராட்டங்களே வெற்றிக்கு வழி' — என்பது உறுதிசெய்யப்பட்டால், நியாயமற்ற கோரிக்கைகளைக் கூட, போராட்ட வழியில் நிறை வேற்ற முற்படுகின்ற அபாயத்தை, நாடு எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதை, 'போராட்ட ஜனநாய கம்' — என்ற சொற்றொடரின் மூலம், அழகாய்ச் சுட்டிக்காட்டியிருந்தார்!

வேலாயுதம்பாளையம். எம். சம்பத்.

இந்த வருடம்

செம்மங்குடி — சதாபிஷேகம்



பீம் சென் ஜோஷி — வடக்கை விரும்போருக்கு





மாத்யூ — அமெரிக்காவிலிருந்து......

நமது பழங்கலைகளின் அருமை பெருமைகளை வெளி நாட்டவர் வந்து விண்டுரைக்கக் கேட்பதில் நமக்கு ஓர் அலாதி சந்தோஷம் இருக்கத்தான் செய்கிறது. மியூசிக் அகாடமியில் இந்த வருடம் நியூயார்க்கிலிருந்து மாத்யூ என்கிறவர் வந்து, பரதநாட்டியத் தத்துவம் பற்றிப் பேசப் போகிறார். சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக அமெரிக்காவில் பரத நாட்டியம் கற்றுக் கொடுத்து வருகிறாராம் மாத்யூ. (இவர் நடனம் கற்றது இந்தியாவில்தான் — குரு எல்லப்பா, ராகினி தேவி என்று பலர்).

இது மியூசிக் அகாடமியின் வைர விழா: வழக்கத்தில் இருந்து ஏதாவது ஒரு மாற்றம் செய்ய வேண்டாமா? அதனால், வழக்க மான முதல் நாள் நடன நிகழ்ச்சிக்குப் பதில், மகாராஜபுரம் சந்தானம் பாடுகிறார். (அன்றைக்குத்தான் பாட முடியும் என்று சொல்லி விட்டாராம்; ஆகா, அப்படியே என்று அகாடமியும் ஒப்புக் கொண்டு விட்டதாம்.) முதல் நாளன்று நடன நிகழ்ச்சி மூலம் வரக்கூடிய கணிசமான நன்கொடை அகாடமிக்கு நஷ்டமில்லையோ என்று கேட்கலாம். அதற்கெல்லாம் வேறு வழி கண்டுபிடிக்காமலா அகாடமி இந்த மாற்றத்தைச் செய் திருக்கும்?

- போன வருடம் சீசனிலே பாடவே போவதில்லை என்று அறிவித்த மகாராஜபுரம் சந்தானம், ரசிகர்கள் வற்புறுத்தலுக் குத் தலை வணங்கி, சபா காரியதரிசிகள் யார் கேட்டாலும் ஒப்புக் கொண்டு அவர்களிடம் நல்ல பிள்ளை பட்டம் வாங்கிக் கொண்டிருக்கிறார். ('கலாநிதி'யை அடுத்த வருடம் வாங்கிக் கொண்டால் போகிறது!)

- மோகன் கோகர், சங்கீத நாடக அகாடமியின் நடனப் பகுதிக்குத் துணைச் செயலர். அவர் மனைவி எம். கே. சரோஜா, தேவார, திவ்யப் பிரபந்தப் பாடல்களில் நவரசம் பற்றிய நடன நிகழ்ச்சிகளை வழங்குகிறார்.

- சுவாமி சின்மயானந்தா தொடங்கி, இப்போது பலரும் ஆங்கிலத்தில் பகவத் கீதை விளக்கச் சொற்பொழிவு செய்வது வழக்கமாகி விட்டது. தில்லி ஆஷா நாத், ஒருபடி மேலே போய், ஆங்கிலச் சொற்பொழிவோடு, கூடவே இந்துஸ்தானி இசை யில் பாடல்களும் பாடி ஒரு காலை நேர நிகழ்ச்சி வழங்குகிறார்.

- ரிஷிவேலி பள்ளிக்கூட மாணவிகள் வழங்கும் சமஸ்கிருத நாட்டிய நாடகம் 'சாகுந்தல'த்துக்கு, இசை அமைத்திருப்பவர் எம்.எல்.வி.

- ஹைதராபாத் இசைப் பேராசிரியை ரேவதி ரத்தின சுவாமி (சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் மகள்), சுவாதித் திருநாள் இயற்றிய பஜனைப் பாடல்கள் பற்றி ஒரு நிகழ்ச்சி வழங்கு கிறார்.

- ஓர் அறக்கட்டளையின் சார்பில், ராமலிங்க சுவாமிகள் எழுதிய கர்நாடக இசைப் பாடல்கள் பற்றிப் பேசி, பாடவும் போகிறார் பிரமிளா குருமூர்த்தி. (அன்றைக்கு மட்டும் தொழி லதிபர் என். மகாலிங்கம் சிறப்பு விருந்தினராம்.)

- சதஸ் அன்று பாலமுரளிதான் டி. விசுவநாதனுக்கு விருது வழங்கப் போகிறார். (வழங்குகிறவரை விட, வாங்கிக் கொள் கிறவருக்கு வயது அதிகம்!)

என்ன ஸ்பெஷல்?

○ வடக்கத்தி வித்துவான்கள் யாரும் கிடையாதா என்று கேட்கிறவர்களுக்கு ஒரு செய்தி: பீம்சென் ஜோஷி பாடுகிறார். (சன்மானம் எவ்வளவு, விமான டிக்கட், ஓட்டல் செலவு எல்லாம் எதில அடக்கம் — என்றெல்லாம் கேட்கப் போவதில்லை.)

○ ஜனவரி முதல் தேதியன்று ஒரு வி. வி. ஸ்பெஷல் நிகழ்ச்சி... அன்று 'தனம்மாள் தினம்' கொண்டாடுகிறது அகாடமி. ஒரே மேடையில் டி: பிருந்தா வீணை வாசிக்க, முக்தா பாட, விஸ்வா புல்லாங்குழல் வாசிப்பார்.

○ தமிழிசைச் சங்கத்தில் இந்த வருடம் சீர்காழியின் மறைவினால் உண்டாகியுள்ள வெற்றிடம் எல்லாருக்கும் நிச்சயம் நினைவுக்கு வரும். ஆனாலும் டாக்டர் சிவசிதம்பரம் ஓரளவுக்கு அதை நிரப்பி விடுவார் என்று எதிர்பார்க்கலாம். அப்பாவின் பக்கவாத்தியங்கள் தப்பாமல் உண்டு இவருக்கும்.

○ ' மதுரை டி. என். சேஷகோபாலன் கம்பராமாயணப் பாடல்களை வைத்து ஒரு முழு நேரக் கச்சேரி செய்கிறார் என்பது புதுமைதான். ஆனால் முற்றிலும் புதுமை அல்ல: ஏற்கெனவே ஓரிரு நிகழ்ச்சிகள் தந்திருக்கிறார் சேஷகோபாலன்.

○ எல்லா சபாக்காரர்களும் இரவு ஒன்பதரை மணிக்குள் நிகழ்ச்சிகளையே முடிக்க வேண்டும் என்று தலையைப் பிய்த்துக் கொள்ளும் போது, தமிழிசைச் சங்கத்தினர் மட்டும், இரவு கடைசி நிகழ்ச்சியை ஒன்பதரைக்குத்தான் ஆரம்பிக்கிறார்கள். வட சென்னையில், வெகு சில ரசிகர்களே இந்தக் கடைசி நிகழ்ச்சிக்கு வருகிறார்கள் என்று கண்கூடாகக் கண்ட பிறகும், இதைத் தொடருவதில் யாருக்குப் புண்ணியம்?

○ கிருஷ்ணகான சபாவில், விருது வழங்குகிறவர் (கிரிஷ் கர்நார்ட்), விருது வாங்கிக் கொள்கிறவர் (யாமினி கிருஷ்ணமூர்த்தி) இருவரும் தில்லிக்காரர்கள்! கிரீஷின் ஆங்கில உரை, நிச்சயம் சங்கீதமாக இருக்கப் போகிறது. (ஆங்கில மேடை நாடகங்களில் புதுமை செய்தவராயிற்றே!) வாணி கமல், சாரி—வாணி கணபதி பரத நாட்டியத்துடன் இங்கே நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. நாட்டியக் கலை மாநாடு என்பதால் ஏராளமான நடன நிகழ்ச்சிகள். டிசம்பரில் பெரிய நடனமணிகள் என்றால், ஜனவரியில் இளம் நடனக் கலைஞர்கள் பங்கு பெறுகிறார்கள். மாலைக் கச்சேரிகள் வழக்கம் போல. காலை லெக்சர் — டெமான்ஸ்ட்ரேஷன்களில் ஒன்று — நடனக் கலைஞர்களுக்கு ஏற்படும் காயங்கள் பற்றிய டாக்டர் அலி இரானி சொற்பொழிவு. (அடி, உதை காயங்கள் அல்ல.) பத்மா சுப்ரமணியம் புதிதாக 'புரந்தர பக்தி' என்ற நாட்டிய நாடகம் வழங்குகிறார். (போன வருடம் மாதிரி இசை ரஷ்ய இசையா, இந்திய இசைதானா என்று தெரியவில்லை.)

○ போன வருடம் லால்குடியின் 50-ஆவது கச்சேரிக்கு முன்னால், பளபளவென்று ஒரு பாராட்டு விழா நடத்திய மாதிரி, இந்த வருடமும் ஒரு நிகழ்ச்சி: செம்மங்குடியின் கச்சேரிக்கு முன்பு அவருக்கு சதாபிஷேகப் பாராட்டு விழா. எப்படியோ, யக்ஞராமனுக்கு எல்லா வருடமும், விழா நடத்த ஏதாவது ஒன்று கிடைத்து விடுகிறது!

○ இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைடியினர், முன்பு வாணி மகாலிலிருந்து சங்கரதாஸ் கலையரங்குக்கு மாறினார்

' சேஷகோபாலன் — ராமாயணக் கச்சேரி.



' சீர்காழி கோவிந்தராஜன் — இவர் இடத்தை....



' சிவசிதம்பரம் — ... ஓரளவு நிரப்ப......





ஃபால்குனி மித்ரா — 'துருபதி'ன் பக்க



ஆஷா நாத் — இந்துஸ்தானி பகவத் கீதை



எம்., கே. சரோஜா — நவரச நடனம்.

கள். இந்த வருடம் முதல் பால மந்திரின் ஜெர்மன் ஹாலுக்கு மாறியிருக்கிறார்கள். இடப் பெயர்ச்சி இவர்களுக்கு நல்ல பலன் களை அளிக்கட்டும் என்று பிரார்த்திப்போம்!

○ இங்கேயும் காலை நிகழ்ச்சிகளில் சில சுவாரசியமானவை. இந்துஸ்தானி இசையில் ராகங்களை எப்படி வழங்குவது என்று, தில்லி பல்கலைக் கழக இசைத் துறை டீன், அகர்வாலின் நிகழ்ச்சியும்; சாஸ்த்ரீய இசையில் 'துருபதி'ன் இடம் பற்றி ஃபால்குனி மித்ராவின் நிகழ்ச்சியும்; ஒரு மாறுதலாக, தியாக ராஜரின் சிவபக்தி பற்றி பாலகிருஷ்ண சாஸ்திரிகளின் இசைச் சொற்பொழிவும்; கமகம் பற்றி வீணை பாலசந்தரின் நிகழ்ச்சி யும் முக்கியமானவை என்று குறிப்பிடலாம்.

○ இவை தவிர, மயிலாப்பூர் ஃபைன் ஆர்டஸ், கலா ரசனா, கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ், பாரத் கலாசார், தியாகப்பிரம்ம கான சபா, கபாலி ஃபைன் ஆர்ட்ஸ், வழுவூரார் நாட்டியக் கலை விழா என்று பலரும் டிசம்பர் சங்கீத சீசனைப் போட்டி போட்டுக் கொண்டு நடத்தப் போகிறார்கள். இவர்கள் காலை நேர லெக்சர் — டெமான்ஸ்ட்ரேஷன்கள் எதுவும் வைக்கா விட்டாலும், மாலை நேர இசை நிகழ்ச்சிகளில், சோடை போகாத சீனியர் வித்துவான்களையும் நம்பிக்கையூட்டும் இளைய கலைஞர்களையும் விட்டு வைக்கவில்லை.

○ சுவாமிமலை ராஜரத்தினம் எப்போதுமே பிஸி நட்டு வனார். இந்த சீசனில் மட்டும், அவர் நட்டுவாங்கம் செய்யும் நிகழ்ச்சிகள் எத்தனை தெரியுமோ? இருபதாம்! போகிற போக்கைப் பார்த்தால் கின்னஸ் புத்தகத்தில்கூடப் பெயர் வந்து விடும் போலிருக்கிறது!

○ 'கலா ரசனா' தவிர மற்ற எல்லா சபாக்களிலுமே நிகழ்ச்சி களைத் தொழில் நிறுவனங்கள்தாம் 'ஸ்பான்சர்' செய்திருக் கின்றன. அரசன் கைவிட்டு, அரகம் கைவிட்டு, இப்போது தொழிலதிபர்கள் கலை விழாக்களுக்கு ஆதரவு அளிக்க வந்திருக்கின்றனர்.

வாழ்க தொழில் நிறுவனங்கள்!

— நமது நிருபர்

''பாகவதருக்குக் கிரிக்கெட்டில் ரொம்ப இன்ட்ரஸ்ட்டுன்னு நீங்க சொன் னது சரியாத்தானிருக்கு...

''பாருங்களேன், ஹிர்வானி ராகத் திலே சொந்த சாகித்யம் பாடறார்!''



''பரவாயில்லையே, சிஷ்யன் உங்க ளைப் போலவே ஜோராப் பாட றானே!''

''நீங்க ஒண்ணு, அவன் மிமிக்ரி பண் றான், அவ்வளவுதான்!''



சென்னை சாந்தி A/c அபிராமி A/c கமலா A/c
தினசரி 3 காட்சிகள் மற்றும் தென்னுடெங்கும்

RMV
வழங்கும்

டாக்டர் சிவாஜி கணேசனின் 275 வது படம்

சத்யா மூவீஸ்

புதிய வானம்

சினிமாஸ்கோப்

A





திரைக்கதை, வசனம், டைரக்ஷன் :
R.V. உதயகுமார் B.Sc. D.F.Tech.

இசை அம்சலேகா
ஒளிப்பதிவு ரவியாதவ் D.F.Tech
K.R. கிருஷ்ணன், சுந்தரம் விக்ரம் தர்மா

தயாரிப்பு :
G.தியாகராஜன்
V.தமிழழகன்

ELEGANT



சிதம்பரம்
இது செணம்! வேற மாட்டை விட்றேன்!
லோக்பால் மசோதா
போவ், டபாய்க்காதே! வேற மாடு எதுக்கு? இந்த மாட்டுக்கு மூக்கணாங்கயித்தை எடுத்து வுடுய்யா!..
ஊழல்
மக்கள்
தனித்துப் போட்டி! தனித்தே போட்டி!
நாற்காலி கொடுத்தால் கூட்டு!
தனித்துப் போட்டி! தனித்தே போட்டி!
நாற்காலி கொடுத்தால் கூட்டு!
தனித்துப் போட்டி! தனித்தே போட்டி!
நாற்காலி கொடுத்தால் கூட்டு!
தனித்துப் போட்டி! தனித்தே போட்டி!
நாற்காலி கொடுத்தால் கூட்டு!
உமாபதி
எப்டி? சவாரி ஜாலியா இருக்கா?



கல்கி

1988 டிசம்பர் 18
மலர் 47 இதழ் 20
விபவ மார்கழி 3



ஊழல் வில்லனும் ஊதாரித்தன குண்டனும்!

நாடாளுமன்றத்தில் நடக்க வேண்டிய ஒரு விஷயம் நடக்காமல் போனதும் நடக்கக் கூடாத ஒன்று நடந்தேறியதும் நம்மை விசனத்தில் ஆழ்த்துகின்றன.

பட்ஜெட்டில் ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட தொகைகள் போதாது என்று மேலும் பல இனங்களுக்குக் கூடுதல் தொகை ஒதுக்க நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. இவற்றில் பெரும்பாலானவை உற்பத்திக்கு உதவாத இனங்களில் ஏற்படும் செலவுகள். பணவீக்கத்துக்கும் விலைவாசி உயர்வுக்கும் புதிய வரி விதிப்புக்கும் வழி வகுக்கும் செலவினங்கள். அதாவது, மக்களைப் பல முனைகளில் வருத்தி எடுக்கப் போகும் செலவினங்கள்.

87 — 88 — ஆம் ஆண்டில் உற்பத்திக்கு உதவாத — அதாவது, திட்டத்துக்கு அப்பாற்பட்ட செலவினங்கள், பட்ஜெட் மதிப்பீட்டை விடவும் ரூ. 4489 கோடி அதிகரித்து விட்டது என்பது இப்போது உறுதியாகத் தெரிய வந்திருக்கிறது. நடப்பு ஆண்டில் பட்ஜெட் மதிப்பீட்டை விடவும் இந்த வகைச் செலவினங்கள் எவ்வளவு அதிகரிக்குமோ, எங்கே போய் முடியுமோ ஆண்டவனுக்கே வெளிச்சம்! ஏனெனில் ஆட்சியில் உள்ள யாரும் ஊதாரிச் செலவினங்கள் பற்றிய உணர்வோ, அதில் உள்ள அபாயங்கள் பற்றிய கவலையோ கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. நிதி அமைச்சர் மட்டும் ஒரே ஒருமுறை பல்வேறு மந்திரிசபைகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்து அநாவசியச் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று பலவீனமான குரல் எழுப்பினார். அத்துடன் முடிந்தது கதை! நடவடிக்கை எடுப்பதற்கான துணிவோ, திறமையோ, அதிகாரமோ அவருக்கு இருப்பதாகத் தோன்றவில்லை. பிள்ளையார் சுழி யார் போடுவது என்றால் பிரதமரிடமிருந்துதான் சிக்கனம் ஆரம்பமாக வேண்டும். ஆனால் அவரோ ஆடம்பரப் பிரியராக இருக்கிறார். அதனால் மற்றவர்களைக் கட்டுப்படுத்தக் கூடிய தார்மீக சக்தியை இழந்து நிற்கிறார். மேலும் திட்டத்துக்கு அப்பாற்பட்ட இனங்களில் சிக்கனம் காட்டுவது, ஏன், கஞ்சத்தனமாகவே நடந்து கொள்வது என்பது ஒரு கொள்கையாக உருவாகி முற்றிலுமாக அமுல்படுத்தப்பட்டால்தான் உண்டு. இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சம் என்று மிச்சம் பிடிப்பதனால் பலன் ஏதும் உண்டாகாது. ஆனால், அரசோ இதற்கு நேர்மாறான கொள்கையையே அமுல்படுத்துகிறது. உற்பத்திக்கு உதவாத இனங்களில் மத்திய மாநில அரசுகளின் செலவு 1984 — 85 — இல் ரூ. 24,750 கோடியாக இருந்தது. நடப்பு ஆண்டிலோ, இது ரூ. 44,000 கோடியாக உயரும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்குப் பதில் ஊதாரித்தனமே அதிகரிக்கிறது. 'திட்டத்துக்கு அப்பாற்பட்ட இனங்களில் செலவு செய்யப்படும் தொகையும் மக்களின் மேம்பாட்டுக்குத்தானே? அது பொருளாதாரத்துக்கு உதவத்தானே வேண்டும்' என்று வாதிடுவோர் உண்டு. ஆனால், இது ஓரளவுதான் உண்மை. இவ்வகைச் செலவு வரம்புமீறி அதிகரிக்கும் போதும், எதற்காக ஒதுக்கப்படுகிறதோ அதற்குச் செலவாகாமல் விரயமாகும் போதும், சில பலரது பாக்கெட்டுக்களை நிரப்ப உதவிடும் போதும் பொருளாதாரம் சீரழிய, மக்கள்தான் கடைசியில் சொல்லொணாத் துன்பத்துக்கு ஆளாகின்றனர்.

லோக்பால் என்ற உயர் விசாரணை மன்றம் நிறுவி, அமைச்சர்கள் மீது பொதுமக்கள் கொண்டு வரும் ஊழல் புகார்களை உடனுக்குடன் விசாரித்து நீதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. 1968 — இல் இதற்காக ஒரு மசோதா முதன் முதலாகத் தாக்கல் செய்யப்பட்டது. அன்று முதல் 'இதோ, அதோ' கதைதானேயொழிய, மசோதா சட்டமாகவில்லை. இப்போது மசோதாவையே வாபஸ் பெற்றுக் கொண்டதன் மூலம் லோக்பால் அமைப்பைச் சவப்பெட்டியில் அடைத்து ஆணி அறைந்து விட்டார் ப. சிதம்பரம். மசோதாவில் குறைகள் இருந்தன என்பது உண்மைதான். அவற்றில் ஒன்று பிரதமரை விசாரிக்கும் அதிகாரம் லோக்பாலுக்குத் தரப்படவில்லை என்பது. இதுபோன்ற வேறு சில குறைகளையும் நீக்கி, மசோதாவைச் சட்டமாக்குவதற்குப் பதில், வாபஸ் பெற்றதற்குக் காரணம், போஃபோர்ஸ், நீர்மூழ்கி, ஹெலிகாப்டர் பேரங்களில் பயங்கர ஊழல்கள் நடந்திருப்பதுதான் என்று எதிர்க்கட்சியினர் நியாயமான குற்றம் சாட்ட இடமளித்து விட்டார் சிதம்பரம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

7

இன்று இறப்பு விழா

ராஜேஷ்குமார்

இருக்கையினின்றும் நெட்டுக்குத்தலாய் எழுந்து நின்றார் கமிஷனர் ஹில். தலையை அண்ணாந்து ரிஸீவரில் கத்தினார்.

"டாக்ஸியை ட்ரேஸ் அவுட் செய்து விட்டீர்களா?"

"ஆமாம் ஸார்."

"எந்த இடத்தில்...?"

"பாந்த்ரா விளையாட்டு மைதானத்தில்... அந்த டாக்ஸி அநாதையாய் நின்றிருந்தது. உ... உ... உள்ளே ஒரு பெண் பிணம்... ஓர் ஆண் பிணம்..."

"மை குட்னஸ்...!" ஹில்லின் கையிலிருந்த ரிஸீவர் மெலிதாய் நடுங்கியது. "ஆட்கள் யாரையாவது பிடித்தீர்களா?"

"நாங்கள் போன போது அந்த இடத்தில் வேறு யாரும் இல்லை ஸார்."

"உங்களுக்கு எப்படித் தகவல் கிடைத்தது?"

"மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த பையன்கள் ஸ்டேஷனுக்கு வந்து தகவல் சொன்னார்கள்."

"டாக்ஸிக்குப் பக்கத்தில் யாரையும் போக விடாதீர்கள். இரண்டு பிணங்களும் டாக்ஸிக்குள் தானே இருக்கின்றன...?"

"ஆமாம்..."

"நான் ஸ்தலத்திற்கு வரும் வரை... யாரும் எதையும் தொட வேண்டாம். ஃபாரன்ஸிக் ஆட்களுக்கு டெலிபோன் செய்து விட்டீர்களா?"

"இன்னும் இல்லை..."

"செய்து விடுங்கள்: போலீஸ் நாய் 'பின்னி'யும் — நான் வருவதற்குள் ஸ்தலத்தில் இருக்கட்டும்."

"எஸ்... ஸார்."

கமிஷனர் ஹில் பாந்த்ரா விளையாட்டு மைதானம் போய்ச் சேர்ந்தபோது — அந்தப் பகுதி முழுவதும் தீப்பற்றிக் கொண்ட மாதிரி பதற்றமாய் இருந்தது. மைதானத்தைச் சுற்றிலும் கட்டப்பட்டிருந்த ஹவுஸிங் யூனிட் வீடுகளின் — நூற்றுக்கணக்கான ஜன்னல்களில் மனித முகங்கள் முளைத்திருந்தன. டாக்ஸி மைதானத்தின் வட கோடியில் நிறுத்தப்பட்டிருக்க — கும்பலின் அடர்த்தி அங்கே அதிகம் தெரிந்தது. கான்ஸ்டபிள்கள் — வளையமாய் நின்று — லத்திகளைத் தலைக்கு மேல் சுழற்றி — டாக்ஸியை நெருங்கி — உள்ளே பார்க்க முயன்றவர்களை விரட்டிக் கொண்டிருந்தார்கள்.

கமிஷனர் ஹில்லை விறைப்பான சல்யூட்களோடு எதிர்கொண்டார்கள், அங்கே காத்திருந்த போலீஸ் அதிகாரிகள். 'டாக் ட்ரெய்னர்' வில்லியம் — நாய் பின்னியோடு ஓரமாய் நின்றிருந்தார். இன்ஸ்ட்ரக்ஷனுக்காகக் காத்திருந்தார்.

ஹில் வேகமான நடையில் டாக்ஸியை நெருங்கி — உள்ளே எட்டிப் பார்த்தார். அதிர்ச்சி நரம்புகளில் மூண்டியடித்தது.

முன் சீட்டில் டாக்ஸி டிரைவரும் — பின் சீட்டில் நாட்டியாவும் ரத்தச் சகதியில் மல்லாந்து தெரிந்தார்கள்.

ஹில் கர்சீப்பை உபயோகப்படுத்தி — டாக்ஸியின் கதவைத் திறந்தார். ரத்தம் டாக்ஸியின் மேற்கூரை, டாஷ் போர்டு, ஸ்டீயரிங், பின்பக்கக் கண்ணாடி என்று சகல விதமான இடங்களிலும் சிதறி உறைந்து போயிருந்தது.

ஹில் திரும்பித் தம் அருகே இருந்த அதிகாரியிடம் கேட்டார். "டெட்பாடீஸைப் பார்த்த அந்த பாய்ஸ் யாரு...?"

அதிகாரி நகர்ந்து போய் — அந்த இரண்டு பையன்களைக் கூட்டிக் கொண்டு வந்தார். மேலுதட்டில் மீசை அரும்பி — முகங்களில் நிறைய பரு வைத்திருந்த இரண்டு பேரும் ஹில்லைப் பயத்துடன் ஏறிட்டபடி வந்தார்கள்.

ஹில் கேட்டார்.

"பாடியை எப்பப் பார்த்தீங்க?"

"ஒரு அரைமணி நேரத்துக்கு முந்தி ஸார்."

"எப்படிப் பார்த்தீங்க...?"

"க்ரௌண்ட்லே கிரிக்கெட் விளையாடிக்கிட்டிருந்தோம்... சிக்ஸர் அடிச்ச பந்து இந்தப்... பக்கமா வந்து விழுந்தது. பந்தை எடுக்க வந்தப்பதான் இந்த டாக்ஸியைப் பார்த்தோம்."

"டாக்ஸி எவ்வளவு நேரமா இங்கே நின்னுட்டிருக்கு...?"

"தெரியலை... நாங்க க்ரௌண்டுக்கு வர்றதுக்கு முந்தியே இந்த டாக்ஸி இங்கே தான் நின்னுட்டிருந்தது."

"இந்த டாக்ஸிக்குப் பக்கத்தில் யாராவது நடமாடிட்டிருந்ததைப் பார்த்தீங்களா?"

"பார்க்கலை..."

ஹில் திரும்பி டாக் ட்ரெயினரைக் கூப்பிட்டார்.

"மிஸ்டர் வில்லியம்!"

"ஸார்..."

அவர் நாய் பின்னியோடு ஓடி வந்தார்.

"பின்னியை ஸ்மெல் பண்ண விடுங்க..."

காண்ஸ்டபிள்கள் டாக்ஸியின் நான்கு பக்கக் கதவுகளையும் விரியத் திறந்து வைக்க — காப்பித்தூள் நிறத்தில் நான்கடி உயரத்திற்குத் திண்ணென்று வளர்ந்திருந்த போலீஸ் நாய் பின்னியை, வில்லியம் அதன் கழுத்தைத் தடவி, உசுப்பி, டாக்ஸிக்குள் ஏவி விட்டார். பின்னி தயக்கமாய் டாக்ஸிக்குள் தாவி — நாட்டியாவின் உடம்பையும் — டாக்ஸி டிரைவரின் உடம்பையும் உத்தியோக தோரணையோடு முகர்ந்தது.

அரை நிமிஷ நேரம்தான்.

பின்னி டாக்ஸிக்கு வெளியே தாவி ஓடியது.

ஹில் தமக்கு அருகே நின்றிருந்த அதிகாரியைக் கூப்பிட்டார்.

''மிஸ்டர் பவார்!''

''ஸார்...''

''பின்னியை 'சேஸ்' பண்ணுங்க... அது யாரைக் கவ்வினாலும் சரி ஸ்பாட்லேயே அரஸ்ட் பண்ணுங்க...''

''எஸ்.. ஸார்.''

பவார் தொப்பையைத் தூக்கிக் கொண்டு — பின்னியின் பின்னால் ஓடினார். பின்னி மைதானத்தைக் குறுக்காய்க் கடந்து — ஒரு ஜன நெரிசலான சுல்லிக்குள் நுழைந்து, அந்தக் கல்லி இணையும் ஒரு மெயின் ரோட்டின் சந்திப்பில் போய் நின்று கொண்டு குரைத்தது. வாலைச் சுருட்டிப் பின்னங்கால்களால் குத்திட்டு உட்கார்ந்து ட்ரெய்னர் வில்லியமின் முகத்தைப் பார்த்தது.

வில்லியம் பவாரிடம் சொன்னார்.

''கொலையாளிகள் இதுவரை வந்திருக்காங்க ஸார்.''

பவார் சுற்றும் முற்றும் பார்த்தார். பின்னி உட்கார்ந்திருந்த இடத்துக்கு வலது பக்கமாய் ஒரு பானிபூரி ஸ்டால். இடது பக்கம் ராதேஷ்யாம் முரளீதர் நவந்தர் காபட் கேந்த்ரா — என்ற நீளமான — இந்தி பாஷையில் போர்டு தெரிய ஒரு துணிக் கடை. காலை கும்பல் பின்னியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க பவார் அந்தத் துணிக் கடைக்குள் நுழைந்தார். கறுப்புத் தொப்பி அணிந்து — கல்லாவில் உட்கார்ந்திருந்த அந்த வெண்ணெய் நிற குஜராத்திப் பேர்வழி — தயக்கமாய் எழுந்து நின்றார்.

''ஆயியே சாப்.''

பவார் சொன்னார். ''பாந்த்ரா விளையாட்டு மைதானத்தில் ஒரு டாக்ஸியில் இரண்டு பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களைக் கொலை செய்த தாய்க் கருதப்படும் மூன்று பேர் மைதானத்திலிருந்து இந்தக் கல்லி வழியாக ஓடி வந்து — இந்த ரோட்டின் சந்திப்பில் நின்றிருக்கிறார்கள். சம்பவம் சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன்பாக நடந்திருக்கலாம். நீங்கள் கடந்த ஒரு மணி நேரமாய் இதே இடத்தில்தானே இருந்தீர்கள்?''

''ஆமாம்...'' அவர் தொப்பியை உருவி— முன் வழுக்கையில் பூத்திருந்த வியர்வையைக் கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டார்.

''சந்தேகத்துக்கு இடமளிக்கிற வகையில் யாராவது மூன்று பேரை இந்த மெயின் ரோட்டின் சந்திப்பில் பார்த்தீர்களா?''

அவர் யோசித்து விட்டுச் சொன்னார்.

''அப்படி யாரையும் நான் பார்க்க வில்லை.''

''கார் ஏதாவது நின்றிருந்ததா...?''





''புழலேரியிலே தண்ணீர் மட்டம் கிடு கிடுன்னு குறைஞ்சுக்கிட்டே வருதாம், பேப்பர்லே போட்டிருக்கான்!''

''பின்னே, சிசன்ல தலைக்குத் தலை எல்லாப் பாடகாளும் அமிர்தவர்ஷிணி பாடிக் கொலை பண்ணறாங்களே!''

''என்னது, ஒண்ணும் புரியலையே, எதுக்கு பாகவதர் எடுத்த எடுப்பிலேயே, மங்களம் பாடறார்?



''கவனிக்கவில்லை...''

பவார் பானிபூரி ஸ்டாலுக்குப் போனார். அழுக்கு குர்தாவோடு சப்பாத்தி மாவைப் பிசைந்து கொண்டிருந்தவனிடம் மேற்கண்ட கேள்விகளையே கேட்க அவன் உதட்டைப் பிதுக்கினான். பக்கத்திலிருந்த ஒரு மளிகைக் கடை, ஒரு ட்ரை கிளீனர்ஸ் கடை, வீடியோ காஸெட் கடை, பழக்கடை, நடைபாதை கடைகளிடம் விசாரணை நடத்தி விட்டு, ஏமாற்றத்துடன் பாந்த்ரா விளையாட்டு மைதானத்திற்குத் திரும்பினார் பவார். கீழே கிடத்தப்பட்டிருந்த டெட்பாடிகளைப் பார்த்துக் கொண்டிருந்த ஹில் கேட்டார்.

''எனி ஃப்ருட்ஃபுல் ரிசல்ட்?''

''நோ ஸார்... வால்சந்த் சௌக் வரைக்கும் கொலையாளிகள் போயிருக்கிறார்கள்.''

''பின்னி யாரையும் பிடிக்கவில்லையா?''

''இல்லை...''

ஹில் கவலையாய் நெற்றியைத் தேய்த்துக் கொண்ட விநாடி ஃபாரன்ஸிக் பிரிவைச் சேர்ந்த ஒருவர் சிகரெட் ஸைஸில் சுருட்டப்பட்ட பேப்பர் ஒன்றைக் கொண்டு வந்து நீட்டினார். ''ஸார்... இது அந்தப் பெண்ணின் உள்ளங்கையில் திணிக்கப்பட்டிருந்தது.''

ஹில் வாங்கினார்.

நீளமான பேப்பரை ஒரு சிகரெட் மாதிரி சுற்றியிருக்க, உள்ளே டைப் அடித்த ஹிந்தி வாசகங்கள். பிரித்துப் படித்தார் ஹில்: -

''ஸ்தலத்தில் குழுமியிருக்கும் அத்தனை போலீஸ் அதிகாரிகளுக்கும் இந்த இந்தியக் கழுகுகளின் தலைசாய்த்த வணக்கங்கள். கடந்த இரண்டு நாட்களில் போலீஸ் துறைக்கு நிறைய சிரமங்களைக் கொடுத்து விட்டோம். இதுவரை ஐந்து பேரை போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்பியிருக்கிறோம். இதில் கோர்டே, நாட்டியா, டாக்ஸி டிரைவரின் கொலைகள் எங்கள் லிஸ்டில் இடம் பெறாதவை. எங்களுடைய குறியெல்லாம் ஒலிம்பிக் வீரர்களும் வீராங்கனைகளும்தான். வீடியோ கவரேஜ் காஸெட்டைக் கைப்பற்றுவதற்காக கோர்டேயையும் எங்களை அடையாளம் கண்டு கொண்ட பாவத்திற்காக நாட்டியாவையும் டாக்ஸி டிரைவரையும் கொல்ல வேண்டிய கட்டாயம். எக்ஸ்ட்ரா கொலைகளுக்காக வருந்துகிறோம். இனிமேல் இந்த எக்ஸ்ட்ரா கொலைகளைத் தவிர்க்க முயல்கிறோம். இனி நம் விஷயத்திற்கு வருவோம். நாங்கள் விடுத்த கோரிக்கை பற்றி நீங்கள் என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள்? எந்த மத்திய மந்திரி இங்கே வந்து உட்கார்ந்தாலும் சரி... எப்பேர்ப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை நீங்கள் செய்தாலும் சரி.. நாங்கள் குறி வைத்தவர்களைத் தீர்க்காமல் விட மாட்டோம். விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளைப் புறக்கணிக்க வேண்டும்.

பாராளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும். இந்த இரு கோரிக்கைகளுக்கும் அரசு தலையாட்டாத பட்சத்தில் அநேக தலைகள் இந்த பம்பாய் மண்ணில் உருளும் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்

துக் கொள்கிறோம். ராத்திரி ஒன்பது மணியோடு நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கெடு முடிகிறது என்பதை மீண்டும் நினைவு படுத்தி விடை பெறுகிறோம். இப்படிக்கு.. இந்தியக் கழுகுகள்.''

அமைச்சர் காமோத் உதவியாளர் நீட்டிய 'பான்' ஒன்றை வாங்கித் தம் வாயில் திணித்துக் கொண்டே அந்தக் கடிதத்தை அசிரத்தையாய்ப் படித்து விட்டு மேபாயின் மேல் எறிந்தார்.

''வெத்து மிரட்டல்.''

எதிரே நின்றிருந்த கமிஷனர் ஹில் குறுக்கிட்டுச் சொன்னார்.

''இதுவரை ஐந்து பேர் அந்த இந்தியக் கழுகுகளுக்குப் பலியாகியிருக்கிறார்கள்.''

''அதில் விளையாட்டுக் குழுவைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர்தானே? பாதுகாப்பு அரணைப் பலப்படுத்துங்கள். ஸ்பெஷல் ப்ரொடக்ஷன் க்ரூப்பையும், நேஷனல் செக்யூரிடி கார்ட்ஸையும் இந்தப் பணிக்காக அமர்த்திக் கொள்ளுங்கள். இண்டலிஜென்ஸ் பீரோவையும், ரிசர்ச் அண்ட் அனாலிஸிஸ் விங்கையும் இந்தியக் கழுகுகளைப் பிடிப்பதற்காக நாம் உபயோகித்துக் கொள்ளலாம்.''

அதிகாரிகளில் ஒருவர் குறுக்கிட்டார் பதற்றமான குரலில். ''ஸார் அவர்கள் மிகவும் மூர்க்கமாய் இருக்கிறார்கள்... அவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஆத்திரத்தை வரவழைக்கலாம்.''

அமைச்சர் காமோத் 'பானை'க் கடைவாயில் அரைத்துக் கொண்டு கோபமாய் ஏறிட்டார்.

''சரி... பாராளுமன்றத்தைக் கலைத்து விடலாமா?''

''ஸாரி... ஸார்...! எதிரிகளின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டு விடக் கூடாது என்பதற்காகச் சொன்னேன்..''

''அவர்கள் கொடுத்த கெடு எத்தனை மணிக்கு முடிகிறது?''

''ஒன்பது மணிக்கு.''

''அதற்கு முன்னதாக அவர்களை நாம் பிடிக்கிறோம்...'' அமைச்சர் சொன்ன அதே விநாடி எதிரே மேபாயின் மேலிருந்த இண்டர்காம் சிணுங்கியது.

ஹில் ரிஸீவரை எடுத்தார்.

''எஸ்...''

''மிஸ்டர் ஹில்?''

''ஸ்பீக்கிங்...''

''நான் பூபேஷ் பேசுகிறேன் ஸார்.''

''சொல்லுங்கள்.''

''ஓட்டல் ஒபராய் டவர்ஸுக்கு உடனே நீங்கள் வர வேண்டும்.''

''என்ன விஷயம்?''

''ஹெப்டாத்லேன் போட்டியில் கலந்து கொள்ளவிருந்த கயல்விழியைக் கடந்த ஒரு மணி நேரமாய்க் காணோம்...''

(தொடரும்)




அருள்வாக்கு

வெண்ணெய் பரப்பிரம்மம் மாதிரி. சுத்த ஸத்வ வெளுப்பாக இருப்பது துனி உருக்கினால் அந்த வெளுப்பும் போய் ஸ்படிகம் மாதிரி Colourless ஆகி விடுகிறது. வெண்ணெய் என்பதில் 'வெண்' என்கிற அடையாளமும் போய் 'நெய்' மாத்திரம் நிற்கிற நிலை. எந்தக் கலரிலும் அது சேராது. அதன் ருசியும் இப்படித்தான். மதுரம் மதுரம் என்று சொன்னாலும் வெண்ணெய் வாஸ்தவத்தில் தித்திப்பு இல்லை — சர்க்கரை, தேன் மாதிரி இல்லை. ஷட்ரஸம் என்கிற ஆறு சுவைகளில் அது எதுவும் இல்லை. அதன் கலர், ருசி எல்லாம் சாந்தம் என்றுதான் சொல்ல வேண்டும். ஸம்ஸார ஆட்டம் போக, எதிர்த்திசையில் பலவிதமான ஸாதனைகளில் அழுகை, மயிர்க்கூச்சு, பாட்டு, நர்த்தனம் என்று ஒரே ஆட்டமாக ஆடிச் சிலுப்பிய பின் உண்டாகிற இந்தப் பரம சாந்தத்தை நாம் அடைகிறபோது நம்மைத் தனக்குள்ளேயே கொண்டு போய் வைத்துக் கொள்கிற பரமாத்மாதான் கிருஷ்ணன்.

வெண்ணெய் ஜலத்திலிருந்து கொண்டே அதில் ஒட்டாமலிருக்கிற மாதிரி — பால் ஜலத்தோடு அப்படியே கலந்து விடும்; அப்படியில்லாமல் வெண்ணெய் தனியாக மிதக்கிறதே. அந்த மாதிரி — நாம் லோகத்திலிருந்து கொண்டே அதில் ஒட்டாமலிருந்தால் நம்மை அவன் எடுத்து அப்படியே முழுங்கித் தனக்குள் வைத்துக் கொண்டு விடுவான். ஆக நம் உள்ளம்தான் அவனுக்கு வேண்டிய வெண்ணெய். 'நவநீத சோர்,' 'சித்த சோர்' என்று இரண்டு விதமாயும் அவனையே சொல்வதால் என்ன ஏற்படுகிறது? நம் சித்தம்தான் அவன் அபஹரிக்கக் கூடிய நவநீதமாக மாற வேண்டும் என்றே ஏற்படுகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



அலங்காரம்

அலங்காரம் பிரமாதமாக இருந்தது. கூடம் முழுதும் மாக்கோலம். நிலையில் எல்லாம் பூச்சரம். தளமும் சுவரும் சந்திக்கும் மடக்கு நெடுகவும் காவிப் பட்டை. ஓரமாய் ஒரு மேடை. மேலே பட்டுக் கம்பளம். பூண் பிடித்த ரோஸ்வுட் மண்டபத்தில் சரஸ்வதி. சற்றே காலை மடக்கி, கையில் வீணை ஏந்தி, தலை நிமிர்ந்த சரஸ்வதி. அருகில் ஆளுயரத்திற்கு மி ஙு மி ஙு வென்று இரண்டு குத்து விளக்குகள். விளக்கின் தலையில் அன்னப் பட்சி. மேடைக்கு இரண்டு புறமும் தொம்பை. துதிக்கை போல் தொங்கும் காற்றுப் பை. சிவப்பு, நீலம், பச்சை, தங்கம் என்று வர்ணமிழைத்த பட்டுப் பை. அலங்காரம் பிரமாதமாகத்தான் இருந்தது.


விழியைச் சுழற்றி ஒவ்வொன்றாய்ப் பார்த்தான் மேத்தா. "ஒண்டர்ஃபுல்! எத்தனை ரசனை மிகுந்த அலங்காரம்!" என்றான் வியந்து. வைத்தி முறுவலித்தார். பெருமை துலங்கும் முறுவல்.

வைத்தியின் ரசனை ஊரறிந்தது. முறுக வார்த்த தோசை, செட்டி நாட்டு வாசற்கால், மழைக்கு முன் எழுகிற மண் வாசனை, மசி துடைத்த தாளில் விழுகிற நிழற்படம், நீலமும் பச்சையுமாய் ஜாலம் காட்டும் மயில் கழுத்து, மழையில் எழுந்த கானான், தென்னங்குருத்தை நறுக்கி மடக்கி விரித்த கிளி, என்று சின்னதும் பெரிதுமாகப் பார்த்துக் குதூகலிக்கிற மனம் அவருடையது. தாம் மட்டும் ரசித்து ஓய்ந்து விடுகிறவர் அல்ல. நாலு பேருக்கு எடுத்துச் சொல்லி, அவர்கள் கண்ணையும் மனத்தையும் திறந்து விடுகிற மனிதர் அவர்.

பதினைந்து வருடம் டெல்லியிலும், இருபது வருடம் வாஷிங்டனிலும் உத்தியோகம் பார்த்து ஓய்ந்திருந்தாலும், அவர் மனத்தில் தஞ்சாவூர் ஊறிக் கிடந்தது. காவேரித் தண்ணீரோடு சேர்த்துப் பருகிய கர்நாடக சங்கீதம் அலைமோதிக் கொண்டு இருந்தது. அந்த ரசனையும் அந்த அனுபவமும் சேர்ந்து உந்த, வீட்டிற்குள்ளேயே ஒருபுறமாய் இந்தக் கட்டடத்தை எழுப்பினார். எண்ணெயும், கிரீசும், வழுக்கை டயர்களுமாக இறைந்து கிடந்த பூர்வீகக் கார் கொட்டகையை இடித்துத் தள்ளி, ஒரு கலை மண்டபமாக இதைக் கட்டினார்.

இங்கே வாரம் ஒரு கச்சேரி நடக்கும். பிரபலங்கள், சிறியவர்கள், வெளிநாட்டுக்காரர்கள் என்று யாராவது வந்து பாடி விட்டுப் போவார்கள். வந்தவர்கள் யாரும் வெறுமனே திரும்பிப் போனதில்லை. விருந்துச் சாப்பாடு, ஜரிகைத் துண்டு, வெள்ளிக் காசு என்ற உபசாரங்களுடன் திரும்புவார்கள்.

திரும்பியவர்கள் சும்மா இருந்து விடவில்லை. இப்படியோர் ஆத்மார்த்தமான ரசிகன் இருப்பதை ஊருக்குச் சொன்னார்கள். மேடை போட்டுப் பேச அழைத்தார்கள். வைத்தி, 'நாயகி'க்கும் 'தர்பாரு'க்கும் இடையே இருக்கிற சின்னச் சின்ன வித்தியாசங்களை விளக்கி ஒரு மணி நேரம் பேசி



மாலன்

னார். ஷைக்காவஸ்க்கியையும், மொசார்ட்டையும் ஒப்பு நோக்கி ஒரு பேச்சு. இந்தப் பேச்சையெல்லாம் கேட்டு வியந்து, பேச அழைத்த மற்றோர் இடத்தில், இட்லியின் கலையம்சம் குறித்துப் பேசி, கூட்டத்தைத் திகைக்க வைத்தார். இட்டிலிப் பேச்சைக் கேட்டுப் பண்டிதர்கள் முகம் சுளித்தார்கள். பெண்மணிகள் விழுந்து சிரித்தார்கள். சிரிப்பு சுளிப்பு எல்லாம் தாண்டி அவர் மேல் ரசிகன் என்று முத்திரை விழுந்தது.

இந்தியாவுக்கு வந்த நவீன் மேத்தா சென்னைக்கும் வர சம்மதித்ததும், இந்த ரசிகர்தான் கமிட்டிக்காரர்கள் நினைவுக்கு வந்தார். அவரது வீட்டிலேயே தங்கல், அவரது வீட்டிலேயே விருந்து என்று அவரை முன்னிறுத்தி ஏற்பாடுகள் நடந்தன. அவரது மண்டபத்திலேயே ஒரு கச்சேரிக்கும் ஏற்பாடாயிற்று.

வைத்திய நாதன், ஏற்கெனவே அமெரிக்காவில் நவீன் மேத்தாவின் கச்சேரியைக் கேட்டிருக்கிறார். கச்சேரி என்றால் நம்மூர் கச்சேரி இல்லை. நவீன் மேத்தா அரை இந்தியன். அற்புதமாக வயலின் வாசிப்பான் என்று அச்சிட்ட பிரசுரம் சொன்னது. அவன் அன்று வில்லைத் தொடவில்லை. ஒரு வாத்தியத்தையும் தொடவில்லை. ஏழெட்டு வயலின்கள், ஒரு பியானோ, இரண்டு புல்லாங்குழல், மேளம் என்று வாத்தியக்காரர்களை வைத்துக் கொண்டு, கையசைப்பில் ஓர் இசைச் சித்திரத்தை உருவாக்கினான். கெண்டியை வைத்துக் கொண்டு சுண்ணாம்புக் கோலம் போடுவது மாதிரி ஒரு லாகவம். கேட்கக் கேட்க மனசு காகிதமாகி மேலே மேலே பறந்தது. சொன்னது கொஞ்சம், சொல்லாமல் விட்டது அனந்தம் என்கிற மாதிரி நம் கற்பனை விரிந்து, அந்த இசைச் சித்திரத்தை நாம் பூர்த்தி பண்ணிவிட வேண்டும் என்று மனசும் பொங்கிய நேரத்தில், அவன் அந்தக் 'காம்போசிஷனை' முடித்துக் கொண்டு சபையைப் பார்த்துத் திரும்பி வணங்கி நின்றான். வைத்திக்குத் தாங்க முடியவில்லை.

நிகழ்ச்சி முடிந்து ஒப்பனை அறையில் மேத்தாவுடன் அரை மணி பேசினார் வைத்தி. பின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நாலைந்து கடிதங்கள் எழுதினார். ஆபீஸ் வேலையாக ஸ்விட்சர்லாந்து போன போது, ஜெர்மெனிக்குப் போய் அவனை

யும் பார்த்து வந்தார்.

இன்று அவனுக்காக ஸ்பெஷல் கச்சேரி. பிரசன்னா பாட இருக்கிறாள். பிரசன்னாவிற்கு நல்ல சாரீரம். அம்மா கொடுத்த தொண்டை. குருவினுடைய அனுக்கிரகமாக நல்ல பாடாந்தரம். சூழலும் நன்றாக அமைந்தால் கச்சேரி களைகட்டி விடும் என்பது வைத்தியநாதன் கணக்கு.

பிரசன்னா 'வாதாபி கணபதிம்'இல் ஆரம்பித்தாள். பின்னர் தோடியை எடுத்து ஆலாபனை செய்து அதில் ஒரு கீர்த்தனை பாடினாள். 'புவனி தாஸுடனி'யை பாவம், குழைவு, கமறல் எதுவுமில்லாமல் சுருக்கமாகப் பாடினாள். அப்புறம் பாரதியார், பாபநாசம் சிவன் என்று இரண்டு தமிழ்ப் பாட்டு. கடைசியில் 'தஸரிமா...மா' என்று சாமா ராகத்தில் புகுந்து 'சாந்த முலேகா'வில் கச்சேரி முடிந்தது.

ஒவ்வொரு பாட்டையும் கூட்டம் கும்மாளி போட்டு ரசித்தது. ரசனையில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர் அல்ல என்று காண்பித்துக் கொண்டிருந்தார்கள். மேத்தா ஓர் அரை புன்சிரிப்போடு உட்கார்ந்திருந்தான். அது கூடப் புன்சிரிப்பா, மரியாதைக்குச் சிரிக்கிற பொய்ச் சிரிப்பா என்று தெரியாத சந்தேகச் சிரிப்பாக இருந்தது.

கச்சேரி முடிந்ததும் வைத்தி மேடையேறி, நவீன் மேத்தா இரண்டு வார்த்தைகள் பேச வேண்டும் என்று மேடைக்கு இழுத்தார். அதில்தான் எல்லாம் ஆரம்பம் ஆயிற்று.

நவீன் மேத்தா சம்பிரதாயமாகத்தான் பேச ஆரம்பித்தான்.

"இந்த மாலைப் பொழுதிற்கு வைத்திக்கும், பிரசன்னாவிற்கும் நன்றி சொல்லிக் கொள்கிறேன். இங்கே கேட்ட சங்கீதம், இந்த அரங்கத்தைப் போல அழகாக இருந்தது. இந்த ஊர் பட்டுத் துணியைப் போல, மென்மையும், பளபளப்பும், மினுக்கும், பழைமையின் மெல்லிய ஞாபகமும் கொண்டதாக இருந்தது. இனிமையாக இருந்தது. காதுக்கு இதமாக இருந்தது.

ஆனால், இசையின் நோக்கமும், பயனும், அது இனிமையாக இருப்பது மட்டும் தானா? வெறும் செவிக்குணவாக இருப்பது மட்டும்தானா...? உங்கள் முன்னோர்கள் இசையை அப்படித்தான் கருதினார்களா? அப்படித்தான் கையாண்டார்களா? நாலு பேரைக் குஷிப்படுத்தத்தான் சங்கீதம், ரசனை இன்பத்திற்குத்தான் சங்கீதம் என்று அவர்கள் கருதியிருந்தால், சரபோஜியின் அரண்மனையிலேயே தங்கியிருந்திருப்பார்கள். காவிரியைத் தாண்டி எதையோ தேடிக் கொண்டு புறப்பட்டிருக்க மாட்டார்கள்.

ஆம், அவர்களுக்கு ஒரு தேடல் இருந்தது. சங்கீதம் அவர்களது தேடலுக்கு உதவுகிற யோகமாக இருந்தது. தங்களை வெளிப்படுத்திக் கொள்கிற சாதனமாக இருந்தது. ஆனால் ஒருபோதும் பொழுதுபோக்காக இருந்ததில்லை.

இந்த மூன்று மாதங்களில் முப்பது கச்சேரிகள் கேட்டு விட்டேன். எல்லாம் இன்றையக் கச்சேரி போல்தான். ஒன்று சங்கீதம், உங்கள் முன்னோர்களுடையதைப் போல, ஆத்மாவைக் கடைவதாக இருக்க வேண்டும். அல்லது, வெள்ளைக்காரர்களுடையதைப் போல, உணர்ச்சியைச் சிலுப்புவதாக இருக்க வேண்டும். இன்று இங்கே சங்கீதம் வெறும் ஒப்பனையாக இருக்கிறது.

இந்த மாறுதல் உங்களுக்கு மாத்திரம் நேர்ந்து விட்ட சோகம் அல்ல. ஒரு காலத்தில் ஜெர்மெனியின் மீதும் இந்தச் சாபம் விழுந்தது. மேல்நாட்டு சங்கீதங்கள் எல்லாம் அநேகமாக ஜெர்மன் சங்கீதத்தைத் தழுவியதுதான். எங்களுடைய ஆதிகர்த்தாக்கள், சாகித்தியத்தையும், சங்கீதத்தையும் இணைத்து, ஸ்வரம் பிரித்து, பியானோவில் வாசித்து, எழுதியும் வைத்தார்கள். ஆனால் அந்த சங்கீதம், இங்கிலீஷ் கால்வாயைக் கடந்த போது, அதில் பொங்கிய உணர்ச்சி, கொப்புளித்த உற்சாகம், அதிலிருந்த தேடல் எல்லாம் ஜெர்மன் மண்ணிலேயே தங்கி விட்டது. அதனால் ஆங்கில சங்கீதம் என்பது உணர்ச்சியற்ற, அர்த்தமும் அற்ற வெறும் கேளிக்கூத்தாக முடிந்தது. இந்திய சங்கீதமும் இதை நோக்கிப் போய்க் கொண்டு இருக்கிறதோ என்று நான் கவலைப்படுகிறேன். அப்படியெல்லாம் நான் கவலைப்பட அவசியமில்லை என்று ஆதாரத்தோடு எனக்குச் சொல்லுங்கள். மகிழ்ச்சியடைவேன்."

வைத்திக்கும் பிரசன்னாவிற்கும் மட்டுமல்ல, வந்திருந்த அத்தனை பேருக்கும் முதுகில் சவுக்கு சொடுக்கிற்று. முகம் வெளிறிப் போயிற்று. விருந்துக்குப் பாதிப் பேர் கூடத் தங்கவில்லை.

"கர்நாடக இசையின் ஆதிகர்த்தாக்கள் எல்லாம் பெரியவர்கள். ஜெயண்ட்ஸ். நாமெல்லோரும் பிக்மிகள். குள்ளர்கள்.

"என்ன அப்படிப் பார்க்கிறீங்க! இலேசுப்பட்டவ இல்லே இந்தப் பொண்ணு! அமெரிக்கப் பல்கலைக் கழகத்திலே நாலு வருஷம் தங்கி ஹரிகதையிலே ஸ்பெஷலைஸ் பண்ணியிருக்கா! காலத்துக்கு ஏற்பக் கொஞ்சம் புதுமை புகுத்திப் புத்துயிர் கொடுத்திருக்கா!"





"தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கிற நேரத்திலே சங்கீத சீசன் வந்தது பெரிய ரோதனையாப் போச்சு! ஆளுக்கு ஆள் தேர்தலை நினைச்சுக்கிட்டே கச்சேரி பண்ணிச் சின்னம் காட்டுறாங்க!"

நாங்கள் அவர்களை நகலெடுக்க முடியும். ஆனால் அவர்களாகவே ஆகி விட முடியாது..." என்றார் வைத்தி.

"ஒரு நிமிஷம்" என்று மறித்து நிறுத்தினான் மேத்தா. "பெரியவர்களை அப்படியே நகலெடுத்துப் பாடுவதை ஒரு கிராமபோன் ரெகார்ட் செய்து விடும். மனிதக் குரலைப் போல் இசைக்க இன்று எலக்ட்ரானிக் சிந்தசைசர்கள் வந்து விட்டன. இவை குறித்து நாம் பெருமைப்படலாம். ஆனால் போற்ற முடியாது. அவை மனிதர்களுடையது அல்ல என்ற ஒரு காரணத்தினாலே போற்ற முடியாது. மானுஷ்யமாக இல்லாத எதுவும் போற்றுதலுக்கு உரியது அல்ல!"

"மேலை நாட்டு சங்கீதம் மானுஷ்யமானதாக இருக்கலாம். இருக்கிறது. ஆனால் சங்கீதம் தெய்வீகமானது என்று நம்புகிறவர்கள் நாங்கள்."

"நம்பிக்கை என்று சொன்னதற்குப் பிறகு அது குறித்து நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை. நம்பிக்கைகள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவை. கடவுள் போல. கற்பு போல. தங்களுடைய நம்பிக்கைகள் உயர்ந்தவையா, மூடத்தனமானவையா என்று நம்புகிறவர்கள்தான் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அப்படித் தீர்மானித்துக் கொண்ட பிறகே அவர்கள் நம்பவும் நிராகரிக்கவும் தலைப்பட வேண்டும். அதுவே நேர்மையானது. ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவில் எல்லாக் கலைகளும் காலங் காலமாக மதத்தோடு பிணைக்கப்பட்டவை. இன்றைக்கு இங்கே மதம் என்பதே வெறும் சடங்குகளாகக் குறுகிப் போயிற்று. நீங்கள் சொல்கிற நம்பிக்கையாகக் கூட அல்ல. பிறப்பினால் நேர்ந்த தொடர்ச்சியின் காரணமாகவே இவர்கள் இந்துக்களாகவும், கிறிஸ்துவர்களாகவும், இஸ்லாமியராகவும் இருக்கிறார்கள். சுயமாகச் சிந்தித்துத் தீர்மானித்துக் கொண்ட நம்பிக்கையினால் அல்ல. ஸ்தாபனங்களாக விளங்கிய மதங்கள் சடங்குகளாகக் குறுகிய போது, அவை போஷித்த கலைகளும் தேக்கமடைந்து விட்டதிலே உங்களுக்கு என்ன ஆச்சரியம் வைத்தி?"

"ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. நீங்கள் சொல்வது நிஜம் என்றால் வருத்தப்பட நிறைய உண்டு."

"வருத்தப்பட வேண்டியது இது மாத்திரமல்ல, வைத்தி. இங்கே சங்கீதம் உயிரற்றுப் போய் விட்டது என்பது ஒரு துயரம். ஆனால், உயிர் அற்றது, உயிர் உள்ளது என்று பகுத்து அறிந்து கொள்ளும் திறம் வெகு ஜனங்களுக்கு இல்லாது போயிற்று என்பது அல்லவா பெரும் சோகம்?"

"சினிமா சங்கீதமே வெகு ஜனங்களின் சங்கீதம். அவர்கள் கர்னாடக சங்கீதம் பற்றிக் கவலை கொள்வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?"

"ரசனையினால் அல்ல, பழக்கத்தினாலே இவர்கள் சினிமா சங்கீதத்தை ரசிக்கிறார்கள். சினிமா பார்க்கும் பழக்கத்தினாலே ஏற்பட்டது இது. சினிமாவோடு சேர்ந்து வழங்கப்படும் இசையை மறுபடி வேறு இடத்தில் கேட்கும் போது, அவர்கள் முன்னே சினிமா விரிகிறது. அந்தச் சூழ்நிலை உருவாகிறது. அதனையே அவர்கள் ரசிக்கிறார்கள். சங்கீதத்தை அல்ல."

"எல்லாவற்றிற்கும் பதில்கள் வைத்திருக்கிறீர்கள்..."

"இல்லை வைத்தி. மூன்று மாதமாக, இங்கு வந்து இறங்கியதில் இருந்து, இதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். யோசிக்க யோசிக்க எனக்குக் கேள்விகளே மிஞ்சுகின்றன. பதில்கள் அல்ல..."

"என்னதான் செய்ய வேண்டும் என்கிறீர்கள்?"

"கலைகளில் மாத்திரம் அல்ல. வாழ்வின் எல்லா அம்சங்களிலும் இங்கு தேக்கம் நேர்ந்திருக்கிறது. இதிலிருந்து விடுபட வேண்டுமானால் இந்தியா ஒரு கருத்துப் புரட்சிக்குத் தயாராக வேண்டும். ஆம்! தயாராக வேண்டும். ஏனெனில் புதிய மாற்றங்கள் வலுக்கட்டாயமாக வாழ்க்கையில் புகுந்தால் பயன் தராது. அப்போது அவை வெறும் அலங்காரமாகவே இருக்கும். அவை ஒரு நெறிமுறையாக — ETHICS ஆக உருவம் பெறும் போதே நம் முரண்பாடுகள் தீரும். உங்கள் ரசனை அதற்கு உதவ முடியும். கலைகளைப் போஷிக்காத ரசனையால் எதற்கு, யாருக்குப் பிரயோசனம்? என் படைப்பாற்றல் அதற்கு உதவ முடியும். சமூகத்தைப் போஷிக்காத படைப்பாற்றலால் யாருக்கு எதற்குப் பிரயோசனம்? நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய முடியும்? சொல்லுங்களேன்."

வைத்தி பதில் சொல்லவில்லை. ஆனால் அவரது மண்டபத்தில் வாராந்திரக் கச்சேரி அன்றோடு நின்று போயிற்று!



ரேவதி ராமச்சந்திரன்


'சுத்த நிருத்தம்' எனப்படும் pure dance பாணியில் நிபுணர் ரேவதி ராமச்சந்திரன். பாட்டு இல்லாமல், தாள வாத்தியங்களின் வாசிப்புக்கு மட்டுமே ஆடும் இப்பாணி இவருக்கு அனாயாசமாக வருகிறது. ரேவதியின் நடனநிகழ்ச்சிகளின் போது, மேடையில் நடராஜர் சிலைக்குக் கீழே, குரு மாங்குடி துரைராஜ அய்யரின் படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டுக் காணப்படும்.

நாட்டியம் கற்றுக் கொண்டு நிகழ்ச்சிகள் வழங்குவதுடன் நிறுத்திக் கொள்ளாமல், ரேவதி பரதம் பற்றி ஆழமான ஆராய்ச்சியும் செய்துள்ளார். கலா பீடம் என்ற அமைப்பில் நட்டுவாங்கம் செய்யும் பயிற்சியும் பெற்றிருக்கிறார். வீணை வாசிப்பும் தெரியும். தற்போது லட்சுமி விசுவநாதனிடம் நாட்டியத்தில் சிறப்புப் பயிற்சி பெற்று வருகிறார்.

ஸ்ரீவித்யா நடராஜன்

சமீபத்தில் மியூசிக் அகாடமி — ஸ்பிக் மகேயின் ஆதரவில் அகாடமியில் நடனமாடினார் ஸ்ரீவித்யா நடராஜன். இந்நிகழ்ச்சியின் முடிவில் ஸ்ரீவித்யா தமது குரு கே. பி. கிட்டப்பா பிள்ளையை வணங்கி எழுந்த போது, அகாடமி அரங்கமே கைதட்டலில் அதிர்ந்தது. ரசிகர்களின் ஆதரவையும், குருவின் போற்றுதற்குரிய பாராட்டையும் ஒருங்கே பெற்றுள்ள இக்கலைஞரின் திறமையை முழுமையாக உணர்ந்து, அதை மேலும் வளர்த்துக் கொள்ள இவரது பெற்றோர் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறார்கள்.

பெயருக்கேற்ப, கலைமகளின் அருள் பார்வையைத் தாராளமாகவே பெற்றுள்ளார் ஸ்ரீவித்யா. ஆங்கில இலக்கியப் பட்டதாரியான இவர், ஓவியங்களும் வரைவார். டி. பிருந்தாவிடம் இசை பயின்று வருகிறார். பிருந்தா பாணியின் மெருகேறிய பாவம் இவரது நாட்டியத்துக்கு உதவியாக இருப்பது கண்கூடு.



வண்ணப்படம்: பி. எஸ். ராவ்.



சத்யஜித் தனஞ்சயன்

சத்யஜித்தைப் பார்த்தால் இவ்வளவு சின்ன பையனாக இருக்கிறானே — இவனால் எப்படி மேடையை ஆக்கிரமித்து ஆட முடியும் என்ற சந்தேகம் எழும். ஆனால் மேடையேறிவிட்டால் பம்பரம் போலத்தான் சுழல்கிறான் இவன். தனஞ்சயன் — சாந்தாவின் இரண்டாவது மகனான சத்யஜித்தின் விறைப்பான, திருத்தமான பிடிகளும் அடவுகளும் அவன் ஒரு சிறந்த சாஸ்த்ரீய பாணியில் ஊறி, புடம் போட்டு வெளிவந்துள்ளதைக் காட்டுகின்றன. ஒன்பதாம் வகுப்பில் படித்து வரும் இவனுக்குப் பரதத்துக்கான மத்திய அரசின் உதவிச் சம்பளம் கிடைத்துள்ளது.

ருட்யார்ட் கிப்ளிங்கின் 'மௌக்லி' கதாபாத்திரமாகக் குட்டிப் பையன் சத்யஜித் சில வருடங்களுக்கு முன் நடித்ததைப் பார்த்தவர்கள், அதை மறக்கவே முடியாது என்கிறார்கள்.

நாட்டிய உலகின் நம்பிக்கை நட்சத்திரங்கள்

சசிகலா

குச்சிப்புடி நடனக் கலையின் மறுமலர்ச்சிக்குக் காரணமான வேம்பட்டி சின்ன சத்தியத்தின் மூத்த மாணவி சசிகலா. பதின்மூன்று வருடக் கடும் உழைப்பு, சசிகலாவின் நடனத்திற்கு இயல்பான நளினத்தைக் கொடுத்திருக்கிறது. ஸ்ரீநிவாச கல்யாணம், கிருஷ்ண பாரிஜாதம் முதலிய நடன நாடகங்களில் சசிகலாவுக்குக் கதாநாயகி பாத்திரம் இல்லாமல் போகாது. பல முறை வெளிநாடுகளுக்குச் சென்று நடன நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறார். இவருக்கும் மத்திய அரசின் ஸ்காலர்ஷிப் கிடைத்திருக்கிறது.

— சித்தார்த்.


வண்ணப்படம்: சிவநாராயணன்.



BONNY MIX®


The new instant porridge. With the goodness of cereals, fruits and nuts.

Bonny Mix is a nourishing, easy-to-digest porridge made from wheat, corn, rice, coconut, apples, dates, raisins and cashewnut. It's good for the whole family at breakfast or in the evening after school or office. Also for elderly people and convalescents.



Ready in minutes

Bonny Mix is so quick and easy to prepare.
All you do is:



1. Put the required quantity of Bonny Mix into a bowl.
2. Add enough pre-boiled milk.
3. Mix into a smooth porridge.
4. Your family will love every delicious spoonful.

Bonny Mix®

For the first time in India!



From Glindia Ltd (formerly Glaxo)

The most trusted name in family foods.

GL/2/88



அத்தியாயம் 7
வாலில்லாக் குரங்கு

மணிமேகலை சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தாள். தான் சற்று முன் கண்ட தோற்றம் வெறும் பிரமை தானா? அல்லது கனவில் கண்ட தோற்றமா? கனவாக இருந்தால் தான் தூங்கிக்கொண்டல்லவா இருக்க வேண்டும்? தன்னைத் தானே தொட்டுப் பார்த்துக் கொண்டாள். இல்லை; தான் தூங்கவில்லை. பழுவூர் இளைய ராணிக்காக ஆயத்தமாகியிருக்கும் அந்தப்புர அறை அல்லவா இது? பளிங்குக் கண்ணாடியில் தன் முகம் இதோ நன்றாகத் தெரிகிறது. அதோ குத்துவிளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. கண்ணாடிக்கு எதிரே சுவரை உற்றுப் பார்த்தாள். அங்கே ஒரு இரகசிய வாசல் இருப்பது அவளுக்குத் தெரியும். அதை வெளியிலிருந்தும் திறக்கலாம்; உள்ளிருந்தும் திறக்கலாம். மணிமேகலை அந்த இடத்தில் வந்து சுவர் ஓரமாக நின்று காதைச் சுவரோடு ஒட்டி வைத்து உற்றுக் கேட்டாள். அவ்விடத்தில் சுவரோடு சுவராக இருந்த இரகசியக் கதவு மரத்தினால் ஆனதுதான். ஆகையால் உள்ளே வேட்டை மண்டபத்தில் ஏதோ ஓசைப்பட்டது போல் கேட்டது.

மணிமேகலை மெதுவாக இரகசியக் கதவைத் திறந்தாள். வேட்டை மண்டபத்தில் எட்டிப் பார்த்தாள். அந்த மண்டபத்தில் பெரும் பகுதியில் இருள் சூழ்ந்திருந்தது. ஒரு மூலையில் சிறிய அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. திடீரென்று அச்சிறிய விளக்கின் ஒளி மங்கிற்று. அடுத்த கணம் முன் போல் பிரகாசித்தது. ஏதோ ஓர் உருவம் அவ்விளக்கின் முன்புறமாகக் குறுக்கே சென்றது போலிருந்தது. அக்காரணத்தினால் தான் விளக்கு ஒரு கணம் மறைந்து அடுத்த கணம் பிரகாசித்திருக்க வேண்டும். அப்படி விளக்கை ஒரு கணம் மறைத்த உருவம் — அதன் முகம் — தான் சற்று முன் கண்ணாடியில் கண்ட முகம்தானா? அல்லது இதுவும் தன் சித்தக் கோளாறுதானா?

மணிமேகலை எட்டிப் பார்த்தபடியே கையைத் தட்டினாள். "யார் அங்கே?" என்று மெல்லிய குரலில் கேட்டாள். பதிலுக்கு ஒரு கனைப்புக் குரல் கேட்டது. வௌவால் ஒன்று.

அமரர் கல்கி

தான் மேல் கூரையில் தொங்கிய இடத்திலிருந்து கிளம்பி 'ஜிவ்'வென்று பறந்து போய், கூரையில் இன்னொரு இடத்தைப் பற்றிக் கொண்டு தொங்கிற்று. மறுபடியும் மிக மிக இலேசான இருமல் சத்தம்.

மணிமேகலை அவ்வாசற்படியில் நின்றபடியே "அடியே! சந்திரமதி!" என்று உரத்த குரலில் கூவினாள்.

"ஏன் அம்மா!" என்ற பதில் வந்தது.

"கை விளக்கு எடுத்துக் கொண்டு உடனே இங்கு வா!" என்றாள் மணிமேகலை.

சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு பணிப் பெண் கையில் விளக்குடன் வந்தாள்,

"இங்கேதான் நன்றாக விளக்கு எரிகிறதே? எதற்கு அம்மா, விளக்கு?"

"வேட்டை மண்டபத்துக்குள்ளே போய்ப் பார்க்க வேண்டும். ஏதோ ஓசை கேட்டது."

"வௌவால் இறகை அடித்துக் கொண்டிருக்கும், அம்மா! வேறு என்ன இருக்கப் போகிறது?"

"இல்லையடி! சற்று முன் இந்தப் பளிங்குக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று என் முகத்துக்குப் பக்கத்தில் இன்னொரு முகம் தெரிந்ததடி!"

"அந்த முகம் எப்படி இருந்தது? மன்மதன் முகம் போல் இருந்ததா? அர்ச்சுனன் முகம் போல் இருந்ததா?" என்று கூறிவிட்டுப் பணிப் பெண் சிரித்தாள்.

"என்னடி, சந்திரமதி! பரிகாசமா செய்கிறாய்?"

"இல்லை, அம்மா, இல்லை! நீங்கள் அடிக்கடி கனவில் காண்பதாகச் சொல்வீர்களே? அவர்தான் இப்போது கண்ணாடியில் தோன்றினாரோ?"

"ஆமாமடி, சந்திரமதி! ஆனால் ரொம்ப ரொம்ப நிஜம் போலிருந்தது."

"எல்லாப் பெண்களுக்கும் இப்படித்தான் ஒரு சமயம் சித்தப் பிரமை பிடிக்கும். உங்களுக்கு இன்னும் இரண்டொரு நாள்தான் அப்படி இருக்கும். நாளைக்குக் காஞ்சியிலிருந்து வரும் இளவரசரைப் பார்த்துவிட்டீர்களானால், அந்தப் பழைய முகம் அடியோடு மறந்து போய் விடும்."

"அது இருக்கட்டுமடி! இப்போது இந்த வேட்டை மண்டபத்துக்குள் போய்ப் பார்க்கலாம், வா!"

"வீண் வேலை, அம்மா! வேட்டை மண்டபத்தில் ஒரே தூசியும் துப்புமாக இருக்கும். சேலை வீணாய்ப் போய் விடும்."

"போனால் போகட்டுமடி!"

"இருமலும் தும்மலும் வரும். நாளைக்கு எல்லோரும் வரும் சமயத்தில்....."

"சும்மா வரட்டும்! வேட்டை மண்டபத்தை இப்போது சோதித்துப் பார்த்தேயாக வேண்டும். விளக்கை அசைத்து அணைத்து விடாமல் எடுத்து வா!"

இவ்விதம் கூறிக் கொண்டே மணிமேகலை வேட்டை மண்டபத்துக்குள் பிரவேசித்தாள். தோழியும் விளக்குடன் அவளைத் தொடர்ந்து வந்தாள்.

இருவரும் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தார்கள். சந்திரமதி கையிலிருந்த தீபத்துக்கு மேலாக நோக்கி உயிர் அற்ற மிருகங்களை மட்டும் பார்த்துக் கொண்டே வந்தாள். மணிமேகலையோ சில சமயம் தரையிலும் பார்த்தாள். தரையில் படிந்திருந்த புழுதியில் அங்குமிங்கும் கால் சுவடுகள் இருந்ததைக் கவனித்துக் கொண்டாள்.

"அம்மா! அதோ!" என்றாள் சந்திரமதி.

"என்னடி இப்படிப் பதறுகிறாய்?"

"அதோ அந்த வாலில்லாக் குரங்கு அசைந்தது போலிருந்தது!"

"உன்னைப் பார்த்து அதன் சந்தோஷத்தைத் தெரியப்படுத்தியதாக்கும்?"

"என்ன, அம்மா, என்னைக் கேலி செய்கிறீர்களே?"

"நான் பிரமை பிடித்து அலைகிறேன் என்று நீ மட்டும் என்னைப் பரிகாசம் செய்யவில்லையா?"

"ஒருவேளை உங்கள் கண்ணாடியில் தெரிந்த முகம் அந்தக் குரங்கின்

முகம்தானோ என்னமோ! நாம் வந்த வாசலுக்கு நேரே இருக்கிறது, பாருங்கள்!.... குரங்கு மறுபடியும் அசைகிறது!''

''சீச்சீ! உன் விளக்கின் நிழலடி! விளக்கின் நிழல் அசையும் போது அப்படிக் குரங்கு அசைவது போலத் தெரிகிறது. வா, போகலாம்! இங்கே ஒருவரையும் காணோம்!''

''அப்படியானால் அந்தக் குரங்கு முகம்தான் கண்ணாடியில் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் அதோ மேலே உட்கார்ந்திருக்கிறதே, அந்த ஆந்தையின் முகமாக இருக்கலாம். அது நம்மைப் பார்த்து எப்படி விழிக்கிறது, பாருங்கள்!''

''என்னை ஏன் சேர்த்துக் கொள்கிறாய்? உன் அழகைப் பார்த்துச் சொக்கிப் போய்த்தான் அந்த ஆந்தை அப்படிக் கண் கொட்டாமல் பார்க்கிறது!''

''பின்னே, தங்களைக் கண்ணாடியில் எட்டிப் பார்த்த முகம் யாருடைய முகமாயிருக்கும்?''

''அடியே! எனக்குத்தான் சித்தப்பிரமை என்று நீ முடிவு கட்டி விட்டாயே? என் கனவில் அடிக்கடி தோன்றும் முகம் கண்ணாடியிலும் தோன்றியிருக்கலாம். அந்தச் சுந்தர முகத்தைப் பார்த்த கண்ணால் இந்தக் குரங்கையும் ஆந்தையையும் பார்க்க வேண்டி வந்ததே என்று எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. வாடி, போகலாம்! கண்ணாடியில் இன்னொரு தடவை அந்த முகம் தெரியுமா என்று பார்க்கிறேன்!....''

இரண்டு பெண்களும் மறுபடியும் வந்த வழியே புகுந்து அந்தப்புர அறைக்குள்ளே போனார்கள்.

வாலில்லாக் குரங்குக்குப் பின்னாலிருந்து வந்தியத்தேவன் வெளியில் வந்தான். இரண்டு மூன்று தடவை தும்மி மூக்கில் புகுந்திருந்த தூசி துப்பைகளைப் போக்கிக் கொண்டான்.

தன்னை அவ்வளவு நன்றாகமறைத்திருந்த வாலில்லாக் குரங்குக்குத் தனது நன்றியைச் செலுத்தினான்.

''ஏ குரங்கே! நீ வாழ்க! அந்தப் பணிப் பெண் என் முகத்தை உன் முகத்தோடு ஒப்பிட்டாள். அப்போது எனக்குக் கோபமாய்த்தான் இருந்தது. வெளியில் வந்து விடலாமா என்று கூட எண்ணினேன். நல்ல வேளையாய்ப் போயிற்று. மனத்தை அடக்கிக் கொண்டேன். நீ மட்டும் இங்கே ஆள் உயரத்துக்கு நின்றிரா விட்டால் என் கதி என்ன ஆகியிருக்கும்? அந்தப் பெண்களிடம் அகப்பட்டுக் கொண்டிருப்பேன்! குரங்கே! நீ நன்றாயிருக்க வேணும்!''

இப்படிச் சொல்லி முடிக்கும் போதே, அந்தப் பெண்களிடம் அகப்பட்டுக் கொண்டிருந்தாலும் அப்படி ஒன்றும் விபரீதமாகப் போயிராது என்ற எண்ணம் அவன் மனத்தில் தோன்றியது. அவர்கள் யார் என்பதை முன்னமே ஊகித்துக் கொண்டிருந்தான்.

அவர்கள் பேசிய வார்த்தைகள் யாவும் அவன் காதில் நன்றாய் விழுந்தன. அதிலும் மணிமேகலை உரத்த குரலில் கணீர் என்று பேசினாள். கனவில் கண்ட முகத்தைப் பற்றியும் கண்ணாடியில் பார்த்த முகத்தைப் பற்றியும் அவள் ஏதோ பேசினாளே, அது என்ன? பழைய சம்பவங்கள் அவனுக்கு நினைவு வந்தன. கந்தமாறன் அடிக்கடி இவளிடம் தன்னைப் பற்றிப் பேசியிருப்பதாகச் சொல்லியிருக்கிறான். முன் தடவை இந்த மாளிகைக்கு வந்திருந்த போது அவனை அரை குறையாகப் பார்த்துச் சென்றதும், கந்தமாறன் அவளை வேறு பெரிய இடத்தில் மணம் செய்து கொடுக்கப் போவதாகச் சொன்னதும் ஞாபகத்துக்கு வந்தன. இந்தப் பேதைப் பெண் ஒருவேளை அவனுடைய மனத்தை மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறாளா, என்ன....?

அதைப் பற்றி யோசிப்பதற்கு இப்போது நேரம் இல்லை. வெளியேறும் வழியைப்பார்க்கவேண்டும். யானைத் தந்தப் பிடியுள்ள வழி அந்தப்புரத்துக்குள் போகிறது. ஆகையால் அது தனக்குப் பயன்படாது. தான் வந்த

வழியைத் தான் தேடிப் பிடிக்க வேண்டும். இரகசிய வழிகளின் கதவுகளை உள்ளேயிருந்து திறப்பதற்கும் வெளியிலிருந்து திறப்பதற்கும் வெவ்வேறு முறைகள் உண்டு என்பது அவனுக்குத் தெரிந்ததே. திறப்பது எப்படி என்று கஷ்டப்பட்டுக் கண்டு பிடிக்கலாம். ஆனால் இரகசிய வழி எங்கே இருக்கிறது என்று தெரிந்தால் அல்லவா திறப்பதற்கு வழி கண்டு பிடிக்கலாம்? சுவரை எவ்வளவு உற்று உற்றுப் பார்த்தாலும் ஒன்றும் தெரியவில்லை. வெளிச்சமும் போதவில்லை. தான் புகுந்த இடத்துக்குப் பக்கத்தில் முதலை ஒன்று கிடந்தது என்பது அவன் நினைவுக்கு வந்தது. அங்கே போய் அருகிலுள்ள சுவர்ப் பகுதியையெல்லாம் தடவிப் பார்த்தால், ஒருவேளை வெளியேறும் வழி புலப்படலாம்.

இவ்வாறு நினைத்து முதலைக்கு அருகில் சென்று சுற்றுப் பக்கத்துச் சுவரையெல்லாம் தடவித் தடவிப் பார்த்தான். ஒன்றும் பயன்படவில்லை. நேரமாக ஆகக் கவலை அதிகரித்து வந்தது. இது என்ன தொல்லை? நன்றாக இந்தச் சிறைச் சாலையில் அகப்பட்டுக் கொண்டோமே? கடவுளே! அந்தப்புரத்துக்குள் புகுவதைத் தவிர வேறு வழி இல்லை போலிருக்கிறதே! அப்படி அந்தப்புரத்துக்குள் புகுந்தால் அதில் எத்தனை அபாயங்கள்! ஒருவேளை மணிமேகலை தன்னிடம் அனுதாபம் காட்டலாம். ஆயினும் அவளிடம் தான் இங்கே இப்படி இரகசியமாக வந்ததற்கு என்ன காரணம் சொல்வது? "உன்னிடம் கொண்ட காதலினால் வந்தேன்!" என்று சொல்லலாமா? அது எவ்வளவு கொடூரமான பொய்யாயிருக்கும்? துணிந்து அத்தகைய பொய் சொன்னாலும் அவள் நம்புவாளா? மணிமேகலை மட்டும் தனியாக இருப்பாள் என்பது என்ன நிச்சயம்? மற்றப் பெண் பிள்ளைகளுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டால்?.... சம்புவரையர் அறிந்தால் கட்டாயம் தன்னைக் கொன்றே போடுவார்!

மறுபடியும் வந்தியத்தேவனுடைய கவனம் தரையில் கிடந்த முதலையின் மீது சென்றது. அதன் பேரில் அவனுக்குக் கோபமும் வந்தது. "முதலையே! எதற்காக இப்படி வாயைப் பிளந்து கொண்டே இருக்கிறாய்!" என்று சொல்லிக் கொண்டே அதை ஓங்கி ஒரு உதை உதைத்தான். உதைத்த போது முதலை கொஞ்சம் நகர்ந்தது. அதே சமயத்தில் சுவர் ஓரமாகத் தரையில் ஒரு சிறிய பிளவு தெரிந்தது!

"ஆகா! நீதானா வழியை அடைத்துக் கொண்டிருக்கிறாய்? முட்டாள் முதலையே! முன்னாலேயே சொல்வதற்கு என்ன?" என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் குனிந்து முதலையைப் பிடித்து நகர்த்தினான். முதலை நகர நகரச் சுவர் ஓரத்தில் துவாரம் பெரிதாகி வந்தது. கீழே படிகளும் தெரிந்தன.

அத்தியாயம் 8
இருட்டில் இரு கரங்கள்!

கடம்பூர் அரண்மனையில் இரகசிய வழிகளின் வாசல்கள் எவ்வளவு சாமர்த்தியமாக அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணி வந்தியத்தேவன் வியந்தான். அரை குறையாக அவற்றைக் குறித்து அறிந்தவன் அவசரமாக இறங்கவோ ஏறவோ முயன்றால் அபாயம் நேரலாம். பாதிப் படிகளில் இறங்கும் போது முதலை நகர்ந்து விட்டால் சுவர் இடுக்கில் அகப்பட்டுக் கொண்டு திண்டாட வேண்டியதாகும்.

முதலை அசையாமல் நிற்கிறதா என்று நிதானித்துப் பார்த்து விட்டு, வந்தியத்தேவன் துவாரத்தண்டை

வந்து கீழே கால் வைக்கப போனான். ஆ! அது என்ன? பில வழியில் காலடிச் சத்தம் கேட்கிறதே! வருகிறது யார்! ஒருவேளை ஆழ்வார்க்கடியானாயிருக்குமோ? தன்னைத் தேடி வருகிறானோ? அவன் இங்கு வந்து சேராமல் தடுத்து விடுவதே நல்லது. இல்லை, இல்லை! வருகிறவன் ஒருவன் இல்லை. ஐந்தாறு பேர் வருவது போல் காலடிச் சத்தம் கேட்கிறது. அப்படியானால், இடும்பன்காரியும் அவனுடைய கூட்டாளிகளுமாயிருக்கலாம். வந்தியத்தேவன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சென்று மறுபடியும் வாலில்லாக் குரங்கின் பின்னால் மறைந்து கொண்டான். ஆகா! இரகசிய வழியைத் திறந்து வைத்து விட்டு வந்து விட்டோமே? அதனால் ஏதேனும் சந்தேகம் ஏற்படுமோ? இல்லை, இல்லை! நாம் வரும் போது அந்த வழி திறந்துதானிருந்தது. நாம் மேற்படியில் ஏறிய பிறகுதான் வழி மூடிக் கொண்டது! ஆகையால் திறந்திருப்பதே நல்லதாய்ப் போயிற்று. அதோ, துவாரத்தின் வழியாகத் தலை ஒன்று தெரிகிறது. இடும்பன்காரியின் தலைதான்! இதோ மேற்படியில் ஒரு காலை வைத்து நின்று சுற்று முற்றும் அவன் பார்க்கிறான். ஒரு கால் மட்டும் கீழே இருக்கிறது. துவாரம் தானாக மூடிக் கொள்ளாமல் இருக்கும் பொருட்டு அப்படி அவன் ஒரு காலைக் கீழ்ப்படியில் வைத்துக் கொண்டிருக்கிறான் போலும்!

அடடே! இந்தப் பக்கத்தில் என்ன வெளிச்சம்! சுவரில் யானை முகம் இருந்த இடத்தை விட்டுப் பெயர்கிறதே! அந்தப்புர வழி புலப்படுகிறதே! அந்த வாசல் வழியாக வருகிறது யார்? அதோ மணிமேகலையல்லவா தானே கையில் விளக்கு ஏந்திக் கொண்டு வருகிறாள்?

இடும்பன்காரி ஒரே பாய்ச்சலில் மேலேறி வருகிறான். அவன் வந்த வழி மூடிக் கொள்கிறது. இடும்பன்காரி தன் தலைப்பாகைத் துணியை எடுத்துக் கொண்டு அருகிலேயிருந்த புலியின் மேலுள்ள தூசை அவசரமாகத் தட்டத் தொடங்குகிறான்! இந்த நாடகத்தின் முடிவுதான் என்ன?

மணிமேகலை கை விளக்கைத் தூக்கிப் பிடித்து நாலுபுறமும் பார்த்தாள். இடும்பன்காரியின் மீது அவள் பார்வை விழுந்ததும் அவனை அதிசயத்துடன் நோக்கினாள்.

இடும்பன்காரி தூசு தட்டுவதை நிறுத்தி விட்டுப் பதிலுக்கு மணிமேகலையை வியப்புடன் பார்த்தான்.

"தாயே! இது என்ன? இந்த வேளையில் இங்கு எதற்காக வந்தது?" என்றான்.

"இடும்பா! நீதானா? என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று மணிமேகலை வினவினாள்.

"அம்மா! நாளை வருகிற விருந்தாளிகளை இந்த வேட்டை மண்டபத்துக்கு அழைத்து வந்து காட்ட வேண்டியிருக்குமல்லவா? அதற்காகச் சுத்தம் செய்து கொண்டிருக்கிறேன். சின்ன எஜமான் காஞ்சிக்குப் போகும் போது அவ்விதம் கட்டளையிட்டுச் சென்றார்கள்."

"ஆம், இடும்பா! இந்த அரண்மனையிலேயே சின்ன எஜமானுக்கு உன்னிடமும் என்னிடமுந்தான் நம்பிக்கை. பழுவூர் ராணியம்மாள் தங்கப் போகிற அறையில் ஏற்பாடு சரியாயிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது இங்கே என்னமோ சத்தம் கேட்டது. நீயாகத்தான் இருக்கும் என்று நினைத்தேன். வேறு யாருக்கு இந்த அரண்மனையின் இரகசிய வழிகள் தெரியும்? எத்தனை நேரமாக நீ இங்கே வேலை செய்து கொண்டிருக்கிறாய்?"

"ஒரு நாழிகைக்கு மேலே இருக்கும், தாயே! இன்னும் ஒரு நாழிகை வேலை இருக்கிறது. தாங்கள் தனியாகவா இங்கே வந்தீர்கள்? அந்த வாயாடிப் பெண் சந்திரமதி எங்கே?"

"ஏதோ சத்தம் கேட்கிறது என்று நான் அவளைப் போய்த் தந்தையை அழைத்துவரச்சொன்னேன். நீதானே இங்கு இருக்கிறாய்? நான் போய் அவளைத் தடுத்து நிறுத்தி விடுகிறேன்."

இவ்விதம் சொல்லிக் கொண்டே மணிமேகலை விளக்கைத் தூக்கிப் பிடித்து இடும்பன் காரியின் முக மாறுதலைக் கவனித்தாள். அடுத்தாற் போல், வாலில்லாக் குரங்கை நோக்கினாள். முன்னொரு தடவை அசைந்தது போல் அது அசைந்ததையும் பார்த்துக் கொண்டாள்.

"ஆம், தாயே! எஜமானுக்கு இன்று எவ்வளவோ அலுவல். தாங்கள் போய் அவரைக் கூப்பிட வேண்டாம் என்று சொல்லி விட்டு நிம்மதியாகப் படுத்துக் கொள்ளுங்கள். எல்லா வேலைகளையும் நானே பார்த்துக் கொள்கிறேன்" என்றான் இடும்பன்காரி.

மணிமேகலை மறுபடியும் வந்த வழியே உள்ளே போனாள். இரகசியக் கதவு மூடிக் கொண்டது.



இடும்பன்காரி யானை முகத்தின் அருகில் சென்று சற்று நேரம் சுவரண்டை காது கொடுத்து உற்றுக் கேட்டான். அடுத்த அறையில் சத்தம் ஒன்றும் இல்லை என்று நிச்சயம் அடைந்த பிறகு திரும்பி வந்தான். பிலத் துவாரத்தைத் திறந்து வைத்துக் கொண்டு இடுப்பு வரை கீழே படிகளில் இறங்கி நின்று கொண்டான்.

பிலத்துவாரத்தின் உட்புறமிருந்து ஆந்தையின் குரல் கேட்டது. பதிலுக்கு இடும்பன்காரி ஆந்தைக் குரல் ஒன்று கொடுத்தான்.

பில வழியில் ஆட்கள் நடந்து வரும் சத்தம் கேட்டது.

பின்னர் காரியங்கள் வெகு துரிதமாக நடைபெற்றன.

வௌவால் ஒன்று சடசடவென்று சிறகை அடித்துக் கொண்டு பறந்தது.

இடும்பன்காரி அதைப் பார்த்தான்.

பின்னாலிருந்து அவன் பேரில் வாலில்லாக் குரங்கு தடால் என்று விழுந்தது.

அது திடீரென்று விழுந்த வேகத்தினால் இடும்பன்காரியின் முழங்கால்கள் மடிந்து அவன் தடுமாறினான். அதனால் இன்னும் இரண்டு படிகள் அவன் கீழே இறங்கவேண்டியதாயிற்று.

தன்பேரில் விழுந்தது இன்னதென்று முதலில் இடும்பன்காரிக்குத் தெரியாமையால் அவன் உளறி அடித்துக் கொண்டு கைகளை வீசி உதறினான்.

பிறகு, உயிரற்ற வாலில்லாக் குரங்கு எப்படியோ தவறித் தன் பேரில் விழுந்திருக்கிறது என்று தெரிந்தது. மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு அதைத் தூக்கி நிறுத்தப் பார்த்தான்.

இதற்குள் உயிருள்ள மனிதனுடைய கரங்கள் போன்ற இரண்டு கரங்கள் மேலேயிருந்து துவாரத்துக்குள் வந்து அவனை இன்னும் கீழே தள்ளி அமுக்கின.

இடும்பன்காரியினால் அதை நம்பவே முடியவில்லை. ஒரு கணம் அவனைப் பெரும்பீதி பிடித்துக்

கொண்டது.


மறுபடியும் மேலும் கீழும் பார்த்தான்.

வாலில்லாக் குரங்கு தலைகீழாகத் துவார வழியில் இறங்கியிருப்பதையும், அதன் பாதி உடம்பு வரையில் கீழே வந்த பிறகு துவாரக் கதவு நெருங்கி வந்திருப்பதையும் கவனித்தான்.

இரண்டு மனிதக் கரங்களாகத் தோன்றியவை தன்னுடைய மனப் பிராந்தியாகத்தான் இருக்க வேண்டும் என்று நிச்சயம் செய்து கொண்டான்.

இதற்குள் பிலத்துவாரத்தில் வந்தவர்கள் நெருங்கி வந்து விட்டார்கள். முன்னால் வந்த ரவிதாஸன், "அப்பனே! என்ன இது? எதற்காக இப்படி உளறி அடித்துக் கொண்டு அலறினாய்? அபாயம் ஏதேனும் உண்டா? நாங்கள் திரும்பிப் போகவா?" என்று கேட்டான்.

"வேண்டாம், வேண்டாம்! அபாயம் ஒன்றுமில்லை. பிலத் துவாரக் கதவைத் திறக்கும் போது, இந்த ராட்சதக் குரங்கு எப்படியோ இடம் பெயர்ந்து என் தலையில் விழுந்து விட்டது! ஒரு கணம் நானும் பீதி அடைந்து விட்டேன். இப்போது இந்தக் குரங்கு மேலேயும் போகாமல் கீழேயும் வராமல் வழியை அடைத்துக் கொண்டிருக்கிறது. கொஞ்சம் பொறுங்கள்; இந்தக் குரங்கை அகற்றி வழியைச் சரிப்படுத்தி விடுகிறேன்" என்றான் இடும்பன்காரி.



திடுமாறி விழுந்த இடும்பன் காரியை மேலேயிருந்து அமுக்கித் தள்ளிய கரங்கள் யாருடைய கரங்கள் என்பதை நேயர்கள் ஊகித்திருப்பார்கள். வந்தியத்தேவனுடைய அதிர்ஷ்டம் இச்சந்தர்ப்பத்திலும் அவன் பக்கம் இருந்தது. சரியான சமயத்தில் அவனுக்குச் சரியான யுக்தி தோன்றியது. இடும்பன்காரி பிலத் துவாரத்தின் படிகளில் நின்றபடி வௌவாலைப் பார்த்த தருணத்தில் அவன் தலைமீது வாலில்லாக் குரங்கைத் தள்ளினான். பிறகு அவன் தன்னுடைய முகத்தைப் பார்க்க முடியாதபடி நின்று கொண்டு கைகளினால் அவனைப் பிடித்துக் கீழே அமுக்கினான். அதன் பின்னர் வாலில்லாக் குரங்கையும் தலை கீழாகத் துவாரத்தினுள் தள்ளினான். கடைசியாக, முதலையையும் நகர்த்தி விட்டான்.

இவ்வளவையும் சில கண நேரத்தில் செய்து முடித்துவிட்டு வந்தியத்தேவன் யானை முகத்தண்டை ஓடினான். யானைத் தந்தங்களைப் பிடித்துத் தன் பலங்கொண்ட மட்டும் அழுத்தித் திருப்பினான்.

சுவரில் வழி உண்டாயிற்று. ஆனால் மணிமேகலை உள்ளிருந்து வந்தது போன்ற விசாலமான வழி அல்ல. வட்ட வடிவமான குறுகலான வழி. அது கதவுக்குள் கதவாயிருக்கலாம். முழுக் கதவையும் திறப்பது எப்படி என்று யோசிக்க அது சமயம் அல்ல. அதற்குள் சதிகாரக் கூட்டம் வேட்டை மண்டபத்துக்குள் புகுந்து

விடலாம். பிறகு தான் தப்புவது துர்லபமாகிவிடும்.

ஆகவே, திறந்த வழி குறுகலான வழியாக இருந்தாலும், அதற்குள் புகுந்துவிட வேண்டியதுதான்.

தீர்மானித்தபடியே காரியத்தை நிறைவேற்றத் துணிந்து அந்த வட்ட வடிவமான துவாரத்தில் வந்தியத்தேவன் புகுந்தான். அவனுடைய தலையும் கைகளும் பாதி உடம்பும் உள்ளே வந்து விட்டன. மிச்சம் பாதி உடம்பு உள்ளே புகுவது பிரயாசையாயிருந்தது. கைகளினால் தாவிப் பிடித்துக் கொள்ள ஒன்றும் அகப்படவில்லை. இச்சமயத்தில் உள்ளேயிருந்த தீபம் அணைந்து இருள் சூழ்ந்தது.

வந்தியத்தேவன் அபயம் கேட்கும் குரலில் ''சந்திரமதி! சந்திரமதி! என்னைக் காப்பாற்று!'' என்றான்.

கலகலவென்று சிரிக்கும் பெண்ணின் குரல் கேட்டது.

''சந்திரமதி! நீ இங்கே இருந்து கொண்டுதானா வேடிக்கை பார்க்கிறாய்? இது நன்றாயிருக்கிறதா?''

அதற்குப் பதிலாக, மறுபடியும் சிரிப்பு. அதைத் தொடர்ந்து ''நீ இப்படி அந்தப்புரத்தில் திருட்டுத்தனமாக நுழைவது மட்டும் நன்றாயிருக்கிறதா?'' என்று ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

அது மணிமேகலையின் குரல் என்று வந்தியத்தேவன் தெரிந்து கொண்டான்.

ஆயினும் வேண்டுமென்றே ''சந்திரமதி! நீ வரச் சொன்னதினால் தானே வந்தேன்! பின்னால் ஆட்கள் வருகிறார்கள். சீக்கிரம் என்னை எடுத்து விடு. இல்லாவிட்டால் விபரீதம் வரும்!'' என்றான்.

''சந்திரமதி இவ்வளவு கெட்டிக்காரியா? இருக்கட்டும்; உனக்கும் அவளுக்கும் சேர்த்துப் புத்தி கற்பிக்கிறேன்!''

''ஓஹோ! தாங்கள் இளவரசி மணிமேகலையா? அம்மணி! இந்த ஒரு தடவை மட்டும் என்னை மன்னித்துக் காப்பாற்றி விடுங்கள்! இனிமேல் இம்மாதிரி தப்புக் காரியம் செய்ய மாட்டேன்! உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு!'' என்று கெஞ்சினான் வந்தியத்தேவன்.

இருளில் இரு மெல்லிய கரங்கள் வந்தியத்தேவனுடைய தோள்களைப் பிடித்துத் தாங்கி மெள்ள மெள்ளக் கீழே தரையில் இறக்கி விட்டன. சுவரில் தோன்றிய துவாரம் மூடிக் கொண்டது.

''இளவரசி! உங்களுக்கு அனந்த கோடி வந்தனம்!'' என்றான்.

''கொஞ்சம் பொறு! நான் உன்னை என்ன செய்யப் போகிறேன் என்று தெரிந்து கொண்டு வந்தனம் செலுத்து!''

''தாங்கள் என்னை என்ன செய்தாலும் சரிதான்! கொலைகாரர்களிடமிருந்து என்னைத் தப்புவித்தீர்களே, அதுவே போதும்! அந்த அரக்கர் கைகளினால் சாவதைக் காட்டிலும் தங்களுடைய மணிக் கரத்தினால் சாகும்படி நேர்ந்தால் அது என்னுடைய பாக்கியந்தான்!''

''அடே அப்பா! பெரிய வீராதி வீரனாயிருக்கிறாயே? அப்படி உன்னைத் தேடி வரும் கொலைகாரர்கள் யார்? கொஞ்சம் பொறு! முதலில் விளக்கு ஏற்றி உன் முகம் எப்படியிருக்கிறது என்று பார்க்கிறேன்.''

''அம்மணி! என் முகத்தை மறுபடியும் பார்க்க வேண்டுமா? தாங்கள் கண்ணாடியில் பார்த்துக் கொண்ட போது பின்னால் நின்று பார்த்த குரங்கு முகந்தான் என் முகம்! சந்திரமதிதான் வர்ணித்தாளே!'' என்றான் வந்தியத்தேவன்.

இருட்டில் சிரிப்பின் ஒலியும் கைவளைகள் குலுங்கும் ஓசையும் கேட்டன.

வந்தியத்தேவன் அந்த அறைக்குள் தலையை நீட்டிய போது அந்த அறையில் எரிந்து கொண்டிருந்த விளக்கை மணிமேகலை மூடி விட்டாள். அதனால் இருட்டாயிற்று. இப்போது அதன் மூடியை அகற்றியதும் தீபம் சுடர் விட்டு ஒளிர்ந்தது. அதன் ஒளியில் வந்தியத்தேவனுடைய முகத்தைப் பார்த்த வண்ணம் மணிமேகலை மெய்மறந்து நின்றாள்.

பக்கத்து வேட்டை மண்டபத்திற்குள் தடதடவென்று பலர் பிரவேசிக்கும் சத்தம் அச்சமயம் கேட்டது.

(தொடரும்)

நேரத்தை பொன்னாகக் கருதும் புத்திசாலி பெண்மணிக்காக...

நேரத்தையும்,
எரிபொருளையும் மிச்சப்படுத்தி,
உங்கள் சமையல் திறனின்
தனிச்சிறப்பை மேன்மைப்படுத்தும்
இணையில்லா செம்பு (காப்பர்)
அடிப்பாகம் கொண்ட
சமையல் பாத்திரம்.



காப்பர் - பாட்டம்

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
சமையல் பாத்திரம்.

விரைவாகவும், சமமாகவும் சூடு பரவுகிறது. உணவுப் பொருட்கள் தீய்ந்து போகாது.

தரமான பொருட்களுக்கான இந்திய அரசின் தேசிய விருதினை முதலில் பெற்றது.

ஸாஸ்பான், ஸ்டூபான், வாணலிகள், தோசைக்கல், அடுக்குகள், ஸ்கில்லெட்ஸ், ஸ்டீம் குக்கர்கள், இட்லி குக்கர்கள் என பலவித ரகங்கள். இல்லத்தரசிகளின் நம்பிக்கையைப் பெற்ற சிறந்த சமையல் பாத்திரங்கள்.

காளி

காளி-சிறந்த சமையல் பாத்திரங்கள்,
அன்றும் இன்றும் என்றுமே உங்களுக்காக.

சில்லறை விற்பனை நிலையம்: ஸ்ரீ எம்.வி.எம்.ஸ்டோர்ஸ், கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம் 612001. போன்: 20136. விற்பனை ஏஜெண்ட்: ஸ்ரீ வித்யா ஏஜென்சீஸ், கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம் 612001. போன்: 20136. வட்டார ஏஜெண்ட்: சம்மு & Co. த. பெ. எண் 3622, எம்.ஜி. ரோட், எர்ணாகுளம், கொச்சின் 682035. போன்: 361139. • விக்டரி மெட்டல்ஸ், 101, கேட்வாடி மெயின் ரோட், பம்பாய் 400 004. போன்: 354507/380075. • தினேஷ் எண்டர்பிரைசஸ், 41/1942, நைவாலா, கரோல்பாக், புது டெல்லி 110 005. போன்: 5716923.

Imageads 2665

வெறும் பாசத்தினால் மட்டுமே இவர்களின் மருத்துவக் கட்டணங்களை செலுத்த முடியாது



மெடிக்ளைம் உதவியால் செலுத்த முடியும்

ஆம், மெடிக்ளைம்—ஒரு ஹாஸ்பிடலைசேஷன் மற்றும் டொமிசிலியரி ஹாஸ்பிடலைசேஷன் பெனிஃபிட் பாலிஸி, இது உங்கள் குடும்பத்தினர்க்கு ஒரு வரப்பிரசாதம்.

நீங்கள் எத்தனை அன்பு செலுத்தினாலும் சரி... உங்கள் கம்பெனி எத்தனை மருத்துவத் திட்டம் வழங்கினாலும் சரி... அவை உங்களுக்கு ஏற்படும் பெரிய நோய்கள், அறுவை சிகிச்சைகள், விபத்துகள் போன்றவைகளுக்குத் தேவைப்படும் மருத்துவ பராமரிப்புக்கு ஆகும் கட்டணங்களை செலுத்திவிட முடியாது.

ஆகவே உங்களுக்குத் தேவை மெடிக்ளைம்.

உங்களுடைய தேவைகளுக்கு ஏற்ப - பலரக மருத்துவ வசதிகளை வழங்குகிறது மெடிக்ளைம்.

வீட்டில் இருந்து கொண்டே மருத்துவமனையில் பெறும் சிகிச்சை வசதிகளுக்கும் கூட பாதுகாப்பளிக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் குடும்பத்தினர் அனைவருக்கும் பாதுகாப்பு செய்து கொண்டால், பிரிமியத்தில் தள்ளுபடியும், வரிவிலக்கும் கிடைக்கும்.

பாசத்தின் பிரதிபலிப்பாக உங்கள் குடும்பத்தினர்களுக்கு, மெடிக்ளைம் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு செய்து கொள்ளுங்கள்.

இதற்கு ஆகும் செலவோ மிகச் சொற்பம். உங்களுக்கு இதன் மூலம் கிட்டும் பலனோ மிக்க அதிகம்.

இத்திட்டம் உங்கள்பால் மிக்க அக்கறை காட்டுகிறது.

ஆண்டொன்றுக்கு பிரிமியம் ரூ.	ஹாஸ்பிடலைசேஷன் ரூ.	டொமிசிலியரி ஹாஸ்பிடலைசேஷன் ரூ.
200	10,500	3,100
250	17,600	—
350	25,500	—
600*	37,750	5,250
840*	52,750	7,400
1300*	82,500	11,500

வயது வரம்பு: 5-70 ஆண்டுகள்

* கூடுதல் பிரிமியம் செலுத்துவதின் பேரில் பர்சனல் ஆக்ஸிடெண்ட் காப்பு கிடைக்கும்.

MED+CLAIM

மெடிக்ளைம் வழங்குவோர் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

NEW INDIA ASSURANCE

A subsidiary of the General Insurance Corpn of India

எந்த விபத்திற்கும் நாங்கள் பாதுகாப்பு அளிக்கிறோம்!

CONTOUR ADS-NIA-278E/87



துடிப்பும் துணிவும் மிக்க கலைஞர்!

சென்னை, கிருஷ்ண கான சபா இவ்வாண்டின் நிருத்திய சூடாமணி விருதை யாமினி கிருஷ்ணமூர்த்திக்கு வழங்குகிறது.


சிறுமி யாமினி கலாக்ஷேத்ராவில் பயின்று கொண்டிருந்த நாட்களில் அவரது அடர்த்தியான கருங்கூந்தலை இரட்டைப் பின்னலிட்டுப் பள்ளிக்கு அனுப்புவார் அவரது அம்மா. கலையோடு கட்டுப்பாட்டையும் வலியுறுத்திய கலாக்ஷேத்ராவிலோ இரட்டைப் பின்னல் அணிந்துவர அனுமதி கிடையாது! பள்ளிக்குச் சென்றதும் யாமினியின் இரட்டைப் பின்னலை ஒற்றைப் பின்னலாக்கி விடுவாராம் ஆசிரியை! இந்தச் சம்பவம் திரும்பத் திரும்ப நிகழ்ந்ததால் பள்ளி நுழைவாயிலை அடைந்ததும், யாமினி தாமே இரட்டைப் பின்னலை ஒற்றைப் பின்னலாக மாற்றிக் கொள்ள ஆரம்பித்தார்...

யாமினியின் வீட்டில் இரட்டைப் பின்னல் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவரது குடும்பத்தார் இதர பல கட்டுப்பாடுகள் விதிப்பதில் எந்தவிதத்திலும் குறைந்து விடவில்லை. அதீத கட்டுப்பாடுகளுக்கிடையே வளர்ந்ததாலோ என்னவோ யாமினி கிருஷ்ணமூர்த்தி துணிச்சலுடன் மரபுகளை மீறி, புதிய பாணிகளையும் யுக்திகளையும் தாராளமாகக் கையாளும் நடனக் கலைஞராக உருவாகியிருக்கிறார்.

பரதநாட்டியம், குச்சிப்புடி, ஒடிஸி என்று விதவிதமாகக் கற்றுத் தமக்கென்று ஒரு பாணியை உருவாக்கிக் கொண்டுள்ள யாமினி, எல்லப்பா, கிட்டப்பா பிள்ளை போன்ற முதுபெரும் கலைஞர்களிடம் நேரடிப் பயிற்சி பெற்றவர்; கௌரி அம்மாளிடம் அபிநயம் பயின்றவர்.


யாமினியுடைய சுவபாவத்தில் உள்ள தீவிரமும் துணிவும் அவரது நாட்டியத்தில் அப்பட்டமாகப் பிரதிபலிப்பதைப் பல விமர்சகர்கள் கடுமையாகத் தாக்கியதுண்டு. ஆனால் இதையெல்லாம் பொருட்படுத்துபவர் அல்ல யாமினி கிருஷ்ணமூர்த்தி. "நான் என்ன உணர்கிறேனோ அதனை மேடையில் அரங்கேற்றுகிறேன். என்னைப் பின்பற்ற விரும்பும் கலைஞர்கள் தைரியமாகவும் வில்லின் நாண் போல் துடிப்புடனும் விளங்க வேண்டும்" என்கிறார்.

ஆதாரம்: **கருதி**. வண்ணப்படம்: அவினாஷ் பஸ்ரிசா.


துப்பறியும்
சூர்யா — கிரண்
நவீன் பிரதாப் முல்லிக்.
இந்தியத் தலைவர்களாக உருமாறியுள்ள இவர்கள், அராஜகம் விளைவிப்பார்கள். உடனே இந்திய அரசுக்குத் தகவல் தெரிவிக்கணும்.
எல்லாரும் நீர்மூழ்கிக் கப்பலில் ஏறிவிட்டார்கள். ஹெலிகாப்டர் பைலட் மட்டும் திரும்பி வந்தான்.
அவனுக்கு முன்னால் மின்னலெனப் பாய்ந்து கிரண் ஹெலிகாப்டரை அடைந்தாள்.
அதைக் கிளப்பினாள்.
அவளுக்கு அநுபவம் போதவில்லை. ஹெலிகாப்டர் தாறுமாறாகப் பறந்தது.
விழுந்து நொறுங்கும் எனத் தோன்றியது.
கிரண் சுற்றுமுற்றும் பார்த்தாள்.
சக்தி வாய்ந்த ரேடியோ.
ஒரு பாராசூட்.
ரேடியோ உபகரணத்தை எடுத்துக் கொண்டு பாராசூட்டைப் பற்றியபடி குதித்தாள்.
ஹெலிகாப்டர் தீப்பற்றியது. குட்டிக்கரணமடித்தது......
20
(தொடரும்)

"யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் தான் எவ்வளவு நல்லவர், என் வீட்டில், சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கு நவீன முறைகளை அறிமுகப்படுத்திய இனிய நண்பர் அவர்தான்"

திருமதி. அர்ச்சனா கம்பாளி, பம்பாய்



வரும் நாட்கள் ஏதேனும் ஒன்றில் யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி, அடையாளச்சீட்டுடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வார்.

அவர் பேச்சில்தன்னம்பிக்கை தொனிக்கும் – இதில் வியப்பேதும் இல்லை. ஏனெனில், இவர் இந்தியாவிலே இது போன்ற நிறுவனங்களில் மிகப் பெரியதும் வெற்றி வாகை சூடியதுமாகிய விற்பனை நிறுவனத்தின் அங்கத்தினர் ஆவார். இந்நிறுவனம் விற்பனைக்குப் பின் நம்பகமான சேவை புரியும் பின்னணி கொண்டது.

தூசு, சூழ்நிலை அசுத்தம், அசுத்தமான நீர் மற்றும் வீட்டு வேலைகளில் உதவியின்மை போன்ற இன்றைய பிரச்சினைகளை சமாளிப்பதற்கென நவீன வீட்டுபயோக சாதனங்களை அவர் உங்களுக்கு அறிமுகப்படுத்துவார்.

செயல்முறை விளக்கத்திற்கு இவரிடம் இரண்டு இணையற்ற தயாரிப்புகள் உள்ளன: யூரோக்ளீன் – அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம். இது வேக்குவம் க்ளீனரை விட சிறந்தது. மற்றும் அக்வாகார்ட் – நீர் பைப்பிலேயே பொருத்தக் கூடிய வாட்டர் ஃபில்டர் கம் ப்யூரிஃபையர்.

யூரோக்ளீன் – உங்கள் வீட்டில் உள்ள தூசு மற்றும் சிறு துரும்புகளையும்கூட சிரமமின்றி எளிதில் அகற்றுகிறது. கண்ணிற்கு புலப்படாத தூசுகள்கூட அகன்று விடும். அக்வாகார்ட் – ஒரு ஸ்விட்சை இயக்கி, குழாயைத் திறந்தால், கிருமிகள் அற்ற பாதுகாப்பான, சுத்தமான குடிநீரை உங்கள் குழாயிலேயே நீங்கள் பெறலாம்.

உங்கள் குடும்பத்திற்கு, சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கான நவீன முறைகளை இத்தயாரிப்புகள் எவ்விதம் வழங்குகின்றன என்பதை யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டிலேயே உபயோகித்து விளக்குவார். அதன் மூலம் உங்களைச் சுற்றிலும் சுத்தமும் சுகாதாரமும் நிறைந்த உலகம் உருவாகும்.

அவர் உங்கள் வீட்டிற்கு வரும் நாள் வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம். விரைவில் வருகை புரிய கீழ்க்காணும் யூரேகா ஃபோர்ப்ஸ் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றில் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது இம் முகவரிக்கு எழுதுங்கள்: யூரேகா ஃபோர்ப்ஸ், பி.ஓ. பாக்ஸ் 936, ஜி.பி.ஓ. பம்பாய்- 400 001.

யூரோக்ளீன்

அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம் – வேக்குவம் க்ளீனரை விட சிறந்தது.

அக்வாகார்ட்

நீர் பைப்பில் பொருத்தக் கூடிய வாட்டர் ஃபில்டர் கம் ப்யூரிஃபையர்.

யூரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட்

நவீன முறை சுத்தம் சுகாதாரத்தின் முன்னோடிகள்.

87/EFL/552-tm



20

"**பு**னிதா" என்றான் பிருத்விராஜ் திகைப்புடன்.

"என்ன பொண்ணு இவ? கொஞ்சம் கூட வெக்கமில்லாம நேரடியா இப்படி வந்து கேக்கறாளேன்னு நெனைக்கறீங்க இல்ல?"

"இல்ல புனிதா!"

"எப்படி இருந்தாலும் நான் கேட்டது உங்களுக்கு ஒரு மாதிரியாத்தான் இருக்கும்.. நான் அப்படிக் கேட்டிருக்கக் கூடாது. ஆனா அண்ணன் உங்ககிட்டே கேக்கறதுக்குத் தயங்கறார்னு தெரிஞ்சுது. நீங்க என்ன பதில் சொல்லுவீங்களோன்னு அவருக்கு ஒரு பக்கம் மனசு அடிச்சிக்கும். நான் என்ன சொல்லப் போறேனோன்னு இன்னொரு பக்கம் நெனைச்சிருப்பாரு. ரெண்டையும் யோசிச்சுப் பார்த்தேன். எனக்கு இதில் ஒண்ணும் தப்பா இருக்கிற மாதிரி தோணலை. அதான் நானே கேட்டேன்."

"நான் என்ன சொல்றேன்னா புனிதா...

"நீங்க இப்ப எதுவும் சொல்ல வேணாம் பிருத்வி. நான் உங்க மனசை ஒரு கலக்கு கலக்கிட்டேன்னு எனக்குத் தெரியும். நாலு நாள் சமைச்சுப் போட்டுட்டுப் பணம் எங்கேன்னு கேக்கறதுக்குப் பதிலா இப்படி ஒரு கேள்வி கேட்டுட்டாளேன்னு... ப்ளீஸ்.. எதுவும் பேச வேணாம். உங்க நெலைமையில நான் இருந்திருந்தாலும் அப்படித்தான் நெனைச்சுப்பேன். அதனால சட்னு எதுவும் சொல்லாதீங்க. நீங்க உங்க கதையைப் பத்தி யோசிங்க. ஒரு நல்ல முடிவுக்கு வாங்க. அப்புறமா நான் கேட்டதைப் பத்தி யோசிங்க. ஒரு முடிவுக்கு வாங்க. அப்புறம் எங்கிட்ட அதுபத்திப் பேசுங்க. அது வரைக்கும் உங்ககிட்ட இந்த மாதிரி ஒரு கேள்வி கேட்டேன்னு கூட நான் அண்ணன்கிட்ட சொல்லப் போறதில்ல. அண்ணனும் படத்தைப் பத்தின டென்ஷன்ல இருக்கிறதால இதைப் பத்தி எதுவும் உங்ககிட்ட பேசுவார்னு தோணலை. சரியா?"

பிருத்விராஜ் தலையை மட்டும் அசைத்தான். பேச்சு வரவில்லை.

"தன்னைச் சாப்பிட வர பெரிய மீன் கிட்டேயிருந்து, சின்ன மீன் எப்படித் தப்பிக்கும் பிருத்வி?"

"தெரியலையே..." என்றான் பிருத்விராஜ் கம்மிப் போன குரலில்.

"நீந்தித்தான்... குட்நைட்!" என்றாள் புனிதா.

அவள் அந்த அறையை விட்டு வெளியேறிய பின்பு "குட் நைட்" என்றான் பிருத்விராஜ் மெல்லிய குரலில்.

ரிகார்டிங் தியேட்டரின் ஏ.஁ஸி. குளிருக்கு இடையில் பிருத்விராஜ் உட்கார்ந்திருந்தான். ஸ்ரீநாத் ரிகார்டிங் கான்ஸோலுக்கு அருகில் நின்றிருந்தான். மியூஸிக் டைரக்டர் கண்ணாடித் தடுப்புக்கு உள்ளே இருந்தார். உள்ளே ஒரு தபலா தட்டப்படும் இசை வெளியே குளிரில் வழிந்தது. வயலின் ஒரு சன்னமான ராகம் இழுத்தது. புல்லாங்குழல் திடீரென்று இடையில் புகுந்து வளைந்து வளைந்து ஒரு சாம்பின் பிட்டை நழுவ விட்டு மௌனமானது. உள்ளே கிடாரின் ஜி. ஸ்ட்ரிங்கை ஒருவர் நிமிண்டிக் கொண்டிருக்க, அந்த வாத்தியக் கலைஞர்களுக்குச் சற்றுத் தள்ளி, ஒரு தனி கண்ணாடி அறையில், தலையில் மாட்டப்

சுபா



பட்ட ஹெட்போனுடன் பின்னணிப் பாடகி காத்திருந்தாள்.

''இங்க சிகரெட் பிடிக்காதய்யா... ஏ.ஸி. ரூமுன்னு தெரியலை... வெளியே போய்யா...''

''காமிராமேன் மாத்திரம் புடிக்கலாம்.. நான் புடிக்கக் கூடாது... என்னா நியாயம்பா இது...''

''என்னய்யா முணுமுணுக்கறே... காப்பி, இங்க வா... எனக்கொரு அரை கப் குடு. டிஃபன் என்ன.. ஊத்தப்பமா.. பொங்கலா?''

''உப்புமாங்க.''

''சரியான உப்புமா கம்பெனிதான்யா..''

ஸ்ரீநாத்தை இந்த சம்பாஷணை எட்டவே இல்லை.

மாஸ்டர் கன்ட்ரோலுக்கு அருகே உட்கார்ந்து கொண்டு ஃபேடர்களை அட்ஜஸ்ட் செய்து கொண்டிருந்த அஸிஸ்டென்ட் மியூஸிக் டைரக்டரின் செயல்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அஸிஸ்டென்ட் ''பேஸ் மியூஸிக்'' என்று ஒரு மைக்ரஃபோனின் ஸ்விட்சை ஆன் செய்து விட்டுக் குரல் கொடுக்க, உள்ளே மியூஸிக் டைரக்டர் ''ஒன்... டூ... த்ரீ.. ஃபோர்'' என்று காற்றைக் கைகளால் கிழிக்க,

'ஜூம் ஜூம் ஜூம்' என்று சங்கீதம் தொடங்கியது.


''ஓ.கே?''

''ஓ.கே.. பிஜிஎம் ப்ளீஸ்!''

இப்போது வேறு ஒரு சங்கீதம்.

ஓ.கே... ஏ.ஏ. புரொடக்ஷன்ஸ் நீரில் மிதக்கும் நிலா... ஸாங் நம்பர் ஃபைவ்.





"நான் ஒண்ணும் உன் வீட்டுக்குத் திருட வரலே... நேற்று நீ பண்ணின கச்சேரியின் டேப்தான் பாட வைச்சிருக்கேன், கேளு! சபாவிலே நான் பட்ட அவஸ்தை நீ பட வேண்டாமா?"

டேக் நம்பர் ஒன்."

டேப் சுழலத் தொடங்கியது.

மியூஸிக் டைரக்டர் கடைசி வினாடியில் கன்ட்ரோல் அருகே வந்து சேர்ந்து கொள்ள... 'ஒன் டு த்ரீ ஃபோர்...'

திடீரென்று அந்த ஜூம் ஜூம் எழுந்தது. வயலின்கள் இழைந்தன. புல்லாங்குழல் ஒன்று நடுவில் நழுவி வந்து 'குக்கூ...' என்று குயிலின் குரலாகக் கொஞ்சியது. கிடார் துடித்தது.

'ஊர் உறங்கும் நேரம்...
ஒற்றைக் குயில் கீதம்...'

பின்னணிப் பாடகி பிறந்ததில் இருந்தே இந்தப் பாடலைப் பாடுவதற்காகவே தயார் செய்து கொண்ட மாதிரி குரலில் சோகத்தைக் குழைத்துக் குழைத்துப் பாட, ஸ்ரீநாத்திற்குப் பரம திருப்தி. பிருத்விராஜ் அவனெதிரில் ஒரு பாடல் எழுதப்பட்டு, ஆர்மோனியத்தில் இசை அமைக்கப்பட்டு, உயிர் பெற்றுப் பிரும்மாண்டமாக எழுந்து அவன் நெஞ்சத்தைப் பிசைந்த விதத்தை ஒரு பிரமிப்புடன் பார்த்தான்.

இந்தப் பாடல் நிச்சயம் ஹிட் ஆகப் போகிறது. இந்தப் பாடலுக்கு ஷில்பா சரியான முகபாவம் கொடுத்து நடித்து விட்டால் காட்சி பார்க்கும் அத்தனை ஜனங்களின் மனங்களிலும் 'பச்சக்' என்று ஒட்டிக் கொள்ளப் போகிறது.

"ஹலோ..." என்று மவுத்பீஸில் குரல் கொடுத்து விட்டுக் காத்திருந்தாள் திலகா.

"ஹலோ" என்று எதிர்முனையில் அதிகாரமாய்க் குரல் கேட்டது.

"சந்திரன்?"

"ஸ்பீக்கிங்."

"நான்தான் சந்திரன்..." என்றாள் திலகா குரலில் எதிர்பார்ப்புடன்.

"நான்தான்னா... பேரு கெடையாதா?"

"திலகா.... திலகா சந்திரன்" என்றாள் திலகா கொஞ்சம் ஏமாற்றத்துடனேயே.

"ஓ... நீயா... என்ன விஷயம் திலகா?"

"சௌக்யமா இருக்கீங்களா?"

"ம்."

"ரெண்டு தடவை வரேன்னு சொல்லிட்டு வராமலே ஏமாத்திட்டீங்க..."

"......."

"கேக்கறேன்ல. பப்ளிக் பஸ் ஸ்டாண்ட்ல நீங்க வருவீங்க, வருவீங்கன்னு எவ்வளவு நேரம் காத்திட்டிருக்கிறது. கூட நிக்கறவங்க எல்லாம் ஒரு மாதிரி பாக்க ஆரம்பிச்சிட்டாங்க..."

"நீ பாக்கறதுக்கு ஒரு மாதிரி இருந்திருப்பே. அதான் அப்படிப் பாத்திருக்காங்க..."

"வெளையாடாதீங்க சந்திரன்... ஏன் வரலை?"

"எனக்கு வேலை இருந்தது. வர முடியல... ஸாரி... போதுமா?"

"பரவாயில்லை. ஆனா நாம ரெண்டு பேரும் முக்கியமா பாத்தே ஆகணும் சந்திரன்."

"எதுக்கு?"

திலகா சுற்றிலும் பார்த்துக் கொண்டாள். ராணி சமையல் அறையில் இருந்தாள். ஜூபிடர் ரத்தினம் ஷில்பாவுடன் ஷூட்டிங் போயிருந்தார். அஸ்வின் குமார் தயவில் புதிதாக வந்திருந்த ஃபோன் இன்னும் அதன் கன்னித்தன்மை மாறாமல் பளப்பள என்று இருக்க, திலகா பேசப் போகும் விஷயம் ஒன்றும் அவ்வளவு புனிதமானது இல்லை.

"கையை மீறிப் போச்சு சந்திரன்."

"எனக்குப் புரியலே திலகா."

"நாம அடிக்கடி பாத்துக்கிட்டோம். பாத்துக்கிட்டதோட நிக்காம..."

"சரி... அதுக்கென்ன இப்போ?"

"பீரியட்ஸ் தள்ளிப் போயிட்டது சந்திரன். அக்கா வெச்சிருக்கற ஊறுகா பாட்டிலைத் திறந்து அவளுக்குத் தெரியாமலே நான் சாப்பிட ஆரம்பிச்சுட்டேன்."

"ஏய்... இது என்ன சினிமாவா? வசனம் மாதிரி பேசறே.. உம்மாதிரி எத்தனை பேரை நான் பாத்திருக்கேன். எங்க வீட்டுக்கு இந்த மாதிரி ஏதாவது சொல்லிக்கிட்டு வந்தா எங்கப்பா ஒன்னைக் கழுத்தைப் புடிச்சி வெளியே தள்ளிடுவாரு..."

"சந்திரன்..."

"பின்னே என்ன? என்னை கங்கிராஜுலேட் பண்ணச் சொல்றியா...? நீ ஜாக்கிரதையா இருந்திருக்கணும். உன்னை மாதிரி ஆளுங்களுக்கெல்லாம் இந்த மாதிரி நேரத்தில என்ன மாத்திரை சாப்பிடணும்னு தெரிஞ்சிருக்கணுமே. எந்த டாக்டரைப் போய்ப் பாக்கணும்னு தெரிஞ்சிருக்கணுமே... போ... போய்ப் பாரு.. ஒண்ணும் இல்லைன்னு ஆனப்புறம் எங்கிட்ட வா... பேசறேன்... அதுவரைக்கும்.."

எதிர்முனையில் டெலிஃபோன் தொடர்பு வைக்கப்பட்டது. திலகா பொம்மை போல ரிசீவரை அதனிடத்தில் பொருத்தினாள்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு திரும்பினாள்.

திடுக்கிட்டாள்.

''யார் கிட்டடீ பேசிட்டிருந்தே?'' என்றாள் ராணி.

''ஒனக்கு அவசியம் இல்ல...'' என்றாள் திலகா வெடுக்கென்று.

''ஐயோ... ஐயோ... இப்படி எடுத்தெறிஞ்சிப் பேசியே வீணாப் போய்ட்டியேடி... ஆரம்பத்திலேர்ந்தே நான் அடிச்சிக்கிட்டேனே... கேக்கலியேடி...'' ராணி ஒருமுறை முகத்தில் அறைந்து கொண்டாள்.

திலகா அவள் பேசுவதை உதாசீனம் செய்தாள். அவள் முகத்தில் அறைந்து கொண்டதை உதாசீனம் செய்தாள். மாடிப் படிகளில் ஏறி மேலே போகத் தொடங்கினாள்.

''ஏய் நில்டி...''

திலகா நின்றாள்.

''இதுவரைக்கும் அப்பாகிட்ட, ஷில்பா கிட்ட உன்னைப் பத்தி எதுவும் சொல்லலை. இன்னிக்குச் சொல்லப் போறேன்... ஒன்னை ரெண்டா வெட்டிப் போடணும். ஏதோ எல்லாம் தெரிஞ்சவ மாதிரி என் வாயை அடக்கினியே... இப்ப என்ன ஆச்சு? ஷில்பா லவ் பண்றான்னு குதிச்சியே... என்ன ஆச்சுடி ஓடுகாலி. அவ நல்லாத்தான் இருக்கா... நீ... நீ... ஐயோ வயிறு எரியுதே... அம்மா இருந்திருந்தா முதல்ல என்னைக் கொன்னுருப்பாளே... இவ்வளவு தூரம் உனக்கு எப்படி எடங் கொடுத்தேன்னு கேட்டு என்னைக் கொன்னுருப்பாளே...!''

ராணி மாடிப்படிகளுக்குக் கீழே நின்று திகிலும், கவலையும், ஆதங்கமும், ஏக்கமுமாய்க் குரல் கொடுக்க, திலகா விடுவிடென்று படிகள் ஏறினாள்.

ராணி அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். எவ்வளவு நெஞ்சழுத்தம்? கேட்கக் கேட்கப் பதில் சொல்லாமல்... நிஜமாகவே இவளை வெட்டிப் போட்டால் தான் என்ன?

ராணி வாசல் கதவு திறந்திருப்பதைக் கூட கவனிக்காமல் மாடிப் படிகள் ஏறினாள். திலகா நுழைந்த அறைக்குள் நுழைந்தாள். திடுக்கிட்டாள்.

திலகா மேலே இருந்த ஃபேனின் இறக்கையில் ஒரு புடைவையை நுழைத்து வாங்கிக் கட்டில் மேல் நின்று கழுத்தைச் சுற்றி இறுக்கிக் கொண்டிருந்தாள்.

''திலகா'' என்று அலறினாள் ராணி.

''இனிமே என் வழிக்கு வரமாட்டேன்னு சொல்லு... இனிமே என் வழிக்கு வர மாட்டேன்னு சொல்லு... இல்ல நான் இப்படியே போயிடறேன்.. உனக்கும் நிம்மதி. ஷில்பாவுக்கும் நிம்மதி...''

''சபாஷ்'' என்று பின்னால் இருந்து ஒரு குரல் கேட்டது.

(தொடரும்)

தண்டனை

போட்டிக் கதை — 16

இங்கிலீஷ்காரன் காலத்தில் கட்டின கட்டடம்; வருஷா வருஷம் காவி அடிக்காததால் ஆங்காங்கே திட்டுத் திட்டாய் உவர் படிந்து வெண்மை... கட்டடம் பழசாயிருந்தாலும் நீதிமன்றமாய் இயங்க எல்லா அருகதையும் அதற்கு இருந்தது.

சரோஜினி ஆட்டோக்காரனிடம் மீதிச் சில்லறையை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள். நீதிமன்றம் மாடியில்தான் இயங்கி வந்தது... கீழடுக்கு முழுதும், வக்கீல்கள் அறை, நீதிபதி தனியறை, ஆவணப் பாதுகாப்பறை என இப்படி இத்தியாதி விஷயங்களுக்காக உபயோகப் படுத்தப்பட்டு வந்தது. மாடிப் படிகள் ஏறும் போது, நீதி எப்போதுமே உயரத்தான் இருக்கும், எட்டித்தான் பிடிக்க வேண்டும் என சரோஜினி நினைத்துக் கொண்டாள்..

பார்வையாளர்கள் பகுதியில் சென்று அமர்ந்தாள். என்னவோ தெரியவில்லை. இங்கு வந்தவுடன் அவள் உள்ளமும் உடலும் சோர்ந்து விடுகின்றன. தலையைக் கவிழ்ந்து, கண்களை லேசாகச் சொருகி, மனத்தை அசைபோட விட்டாள்.

அது நடந்து ஒரு வருஷமிருக்கும்; முதலில் அம்மா, அப்பாகிட்டே கூட அதைச் சொல்லவில்லை; திலீபனிடம் சொன்னாள். அவன் மடியில் முகத்தைப் புதைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள்... கறைகள் எல்லாம் கரைந்து புனிதமடையும் வரை அழுதாள்...

முதலில் திலீபன் ஆத்திரப்பட்டாலும், அவளைச் சமாதானப்படுத்துவதுதான் உடனடி அவசியம் என நினைத்திருக்க வேண்டும்.

''சரோ... எதுக்காக அழறே...? உனக்கு நான் ஒருத்தன் இருக்கேன்கிறதை மறந்துட்டியா?''


அவன் என்னென்னவோ சொல்லித் தேற்றினான். வார்த்தைகள் அவளுக்கு ஞாபகமில்லை.

திடீரென்று அவனை அணைத்து முத்தமிட்டாள்.. ''நீ இருக்கிற நம்பிக்கையில் தான்... உனக்காகத்தான் நான் இன்னும் உயிரோட இருக்கேன்.. இல்லைனா அப்பவே செத்திருப்பேன்...'' மறுபடியும் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

நம்பிக்கை நட்சத்திரமாய்த் தன் வாழ்க்கையில் அவன் ஒளிர்வான் என்ற எண்ணத்தில்தான் அவள் திலீபனின் மடியில் முகம் புதைத்து மனத்தைக் கரையவிட்டாள்.

ஆனால், சுற்றியிருந்தவர்கள் சும்மா இருக்கவில்லை. என்னென்னவோ சொன்னார்கள், குழப்பினார்கள். அந்தர்பல்டி அடித்தார்கள். அவர்களுடன் திலீபனும் சேர்ந்து கொண்டு விட்டான் என்பதுதான் அவளுக்குப் பேரதிர்ச்சி...!

''சரோ, எல்லாத்தையும் மறந்திடு... கெட்டக் கனவா நெனைச்சு மறந்திடு... யாருக்கும் எதுவும் தெரிய வேண்டாம்... அவன் தப்பிச்சாக் கூடப் பரவாயில்லை... நாம ஊர் முன்னாடி தலை நிமிர்ந்து வாழணுமில்லையா...?''



அவனுக்கு முதுகில் கம்பளி ஊர்ந்த மாதிரி இருந்தது...

"என்ன சொல்றே திலீபன்?"

"அவன் மேல் கேஸெல்லாம் கொடுக்க வேண்டாம்... கொடுத்ததையும் 'வித்டிரா' பண்ணிடுவோம்... ஏன்னா முள்ளு சேலை மேல் பட்டாலும், சேலை முள்ளு மேல் பட்டாலும் சேதாரம் சேலைக்குத்தான்."

"சபாஷ் திலீபன்... நல்லா தத்துவம் பேசத் தொடங்கிட்டே... கேஸை 'வித்டிரா' பண்ணிட்டு, ஊர் முன்னாடி ஒண்ணுமே நடக்கலைன்னு நிமிர்ந்து நின்னுடலாம்.. நாளைக்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா, உன் முன்னாடி வஞ்சிக்கப்பட்டு, உன் கருணையால் வாழ்வு பெற்ற அற்பப் பிறவியாத்தானே இருக்கணும்...? அந்த எண்ணம் என்னை உறுத்தாதா...?"

"கேஸை நடத்தி அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்திட்டா மட்டும் எல்லாம் சரியாயிடுமா...?"

அவன் ஆத்திரம் வெளிப்படையாகவே வார்த்தையில் தொனித்தது...

"அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தாலும், கொடுக்கா விட்டாலும் என் இழப்பு இழப்புத்தான்... இப்ப எனக்குள் இருப்பதெல்லாம், இந்த மாதிரி கயவர்கள் தப்பிச்சிடக் கூடாதுங்கிற



சொ. பிரபாகரன்

வெறி... அந்த வெறி வெற்றியடையும் போதுதான் என் மனச்சாட்சிக்கு விடு தலை...''

இதைச் சொல்லும் போது அவள் மூச்சு வாங்கியது... உடலெல்லாம் படபடத்து வியர்த்தது...

திலீபன் அவளை வித்தியாசமாகப் பார்த்தான். தனது கடைசி அஸ்திரத்தை யும் உபயோகிக்க யத்தனித்தான்.

''சரோ... உட்கார்... நீ இப்பல்லாம் எல்லாத்துக்கும் சத்தம் போடறே... அந்த சம்பவத்துக்குப் பிறகு நீ ரொம்ப மாறிட்டே. உனக்கு லைட்டா 'ஹிஸ்டீரியா' இருக்கு மோன்னு கூட எனக்குச் சந்தேகம்...''

அவளுக்கு அவமானமாய் இருந்தது... அவளை நோயாளியாக்கி மனத்தை ஊனப் படுத்த முயற்சி செய்கிறான்! அவனிடம் பேசவே வெட்கமாய் இருந்தது. இந்தப் பேடியையா பெரிய வீரன் என நினைத் தாள்?

''நான் 'ஹிஸ்டீரியா' பேஷண்ட்தான்... அவனைச் சிரழிக்கும் வரை என் 'ஹிஸ் டீரியா' குணமாகாது''

அன்றைக்கு அவனைப் பார்த்துப் பேசி யதுதான், பின்னர் எப்போதாவது கோர்ட் டில் தென்படுவான்......

நீதிபதி வந்து விட்டார். செந்தில் வேலவனைக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்தினார்கள். சவரம் செய்யாத அவன் முகம் கோரமாயிருந்தது. இரண்டு வருஷங் களுக்கு முன்னாடிதான் இவனையே தெரி யும்... ஆனால் இப்படி மறக்க முடியாதவ னாக மாறிட்டானே, பாவி!

மேல் போர்ஷனை அவனுக்கு வாட கைக்கு விட்டால், முழுசாக இருநூறு ரூபாய் கிடைக்கும் என்றதால், அப்பாவுக்கு அவனை விட மனசில்லை... 'நமக்கு வய சுக்கு வந்த பொண்ணுங்க இரண்டு பேர் இருக்கிறதை மறந்து கல்யாணமாகாத பைய னைக் குடித்தனம் வைக்கறீங்களே' என்று அம்மா சொன்னாளாம்... ''அதனால் என்னடி? பையன் இன்ஜினியர்தானே... ஒண்ணும் பிரச்னை இல்லை'' என்றாராம் அப்பா.

அம்மா ஒருநாள் அவனிடம் பேசிக் கொண்டு இருந்தாள். அவன் அம்மாவுக்குப் பதில் சொன்ன சத்தம், கீழே வரை கேட் டது. நளினமாக மெல்லப் பேசலாமில் லையா? ஒருவேளை அவள் கேட்கணும் என்பதற்காகத்தான் இப்படி காட்டுக் கத்து கத்துகிறானா?

''தம்பீ... இவ்வளவு கஷ்டத்துக்கு நடு விலே நீங்க படிச்சு ஆளாயிருக்கீங்கன்னா அது பெரிய விஷயம்தான்...''

''என் வெற்றிக்கு அடிப்படையே தோல் வியை என்னால் தாங்கிக்க முடியாதது தான்... நான் மட்டும் ஐந்தாம் கிளாசில் பெயில் ஆகியிருக்காட்டா இப்படியொரு வெற்றி கனவிலும் அடைஞ்சிருக்க முடி யாது...''

அப்பாவும் போர் அடித்தால் அவன் ரூமுக்குப் போய் அரட்டை அடிக்க ஆரம் பித்தார். அவருடன் பேசும் போதும், அவன் சத்தம் போட்டுத்தான் பேசுவான்... அவன் சத்தம் கீழே கேட்க வேண்டும், அவளும் செவிப்பறை அறுந்து, 'என்னைக் கட்டிக்கிங்களேன்' என்று அவனிடம் கதற வேண்டும் என்று நினைக்கிறானோ, என்னவோ.

— போகப் போக அவளது அனுமானம் ஊர்ஜிதமாயிற்று. அவள் கேட்க வேண்டும் என்பதற்காகவே அவன் இப்படிப் பேசுகி றான்... தன்னை வித்தியாசமானவன் என்று காட்டிக் கொண்டு அவளை வென்று விடலாம் என நம்புகிறான்... அவனது வேறு பல சைகைகளும் அதையே உணர்த் தின. அவனுக்குத் திலீபனைத் தெரியாது போலிருக்கிறது. சொல்லிவிட வேண்டியது தான்.

ஒரு நாள் அவள் பேப்பர் படித்துக் கொண்டிருந்தாள். நடிகை மணிரத்னாவை, வீட்டில் வேலை பார்த்த டிரைவரே கொலை செய்து விட்டானாம். அப்போது தான் அவன் வந்தான்... செய்தித்தாளை அவளிடமிருந்து 'சட்'டெனப் பிடுங்கிப் படித்தான்.

''பயங்கரக் கொலை இல்லை... இதைப் பண்ணினவன் எங்க ஊர்க்காரன்...!'' என்றான்.

''அதனால் என்ன?''

''அதனால் என்னவா... எங்க ஊர் ஜனங்க அப்படித்தான் எதுக்கும் துணி வாங்க....''

''அதற்காக நீங்க வெட்கப்படணும்...''

அவன் முகம் சம்மட்டியால் அடிபட்டது

போலச் சுருங்கிக் கருத்தது... அவன் கதையைச் சுவாரசியமாகக் கேட்காத முதல் பெண் அவள்...!

''மிஸ்டர் செந்தில் வேலவன்! நீங்க சொல்றதைக் கேட்டு எங்கப்பா வேணும்னா அசந்து போகலாம்... இல்லை பரவசம் அடையலாம்... ஆனால், நான் அப்படியில்லை! இன்னொரு விஷயம்... நீங்க இனிமே கத்திப் பேச வேண்டாம்... மெதுவா, சாந்தமாகப் பேசலாம்... நான் ஏற்கெனவே திலீபன்ங்கிறவரைக் காதலிக்கிறேன். அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்...''

தனது கற்பனை சாம்ராஜ்யம் உடைந்து, உறைந்து நின்றான். எல்லாம் ஒரு நொடிதான்...

''நான் எப்படியும் உன்னை அடைந்தே திருவேன்...'' வெறி கொண்டு கத்தினான்..

''முட்டாள்தனமான பேச்சு...'' — அவள் சொன்ன இந்தக் கடைசி பதில்தான் அவனை உசுப்பி விட்டிருக்க வேண்டும்.

அடுத்த நாளே, மேல் போர்ஷனிலிருந்து அவனை வெளியேற்றி விட்டார்கள்.

பழி தீர்த்துக் கொள்ள அவன் தவறவில்லை. ஆபீஸிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த அவளை, அந்த அம்பாஸிடர் காருக்குள் இழுத்து, கை கால்களைப் பிடித்து, வாயைத் துணிகளால் அழுத்தி மயக்கப்படுத்தி, அழைத்துச் சென்ற போது ஓர் அடங்காத வெறி...

ஒரு நிமிஷம் அவனது மனச்சாட்சியை யாராவது தட்டியிருந்தால் அவளை அங்கேயே விட்டு, விட்டு ஓடி விட்டிருப்பான்... ஆனால் அதற்கு யாருமில்லை...

நீதிபதி தீர்ப்பை வாசிக்க ஆரம்பித்து விட்டார்... ''ஏழு வருஷம் கடுங்காவல் சிறைத் தண்டனையும், இரண்டாயிரம் ரூபாய் அபராதமும் — அபராதம் கட்டத் தவறினால் கூட ஒரு வருஷம் சிறைத் தண்டனையும் என தீர்ப்பளித்து...''

—நீதிபதி இதைச் சொன்னபோது மட்டும் செந்தில் வேலவனைப் பார்த்தாள்... ஒரு நொடி அவன் அதிர்ந்தாலும், சீக்கிரமே தன் உணர்வுகளைச் சமனப்படுத்திக் கொண்டான். இருந்தாலும் அவனது வலது கண் வழியே, ஒரு சொட்டு நீர்...

முதல் முதலாகக் கோர்ட்டுக்கு வந்த போது இருந்த வெறி... அவனைத் தூக்கில் தொங்க விட வேண்டுமென்ற ஆத்திரம்... இப்போது அடங்கிப் போயிருந்தது. அழுகை மட்டும்தான் வந்தது.

நீதிபதி சென்று விட்டார்... அவனையும் அழைத்துச் சென்று விட்டார்கள்... கூட்டம் கலைய ஆரம்பித்தது.

ஓர் அத்தியாயம் முடிந்து, புது அத்தியாயத்திற்குள் நுழையும் சலிப்பு... கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் பயமாகவும் இருந்தது... 'இனிமேல்' என்பதைப் பற்றி இவ்வளவு நாள் அவள் யோசிக்கவே இல்லையே... மெல்ல வெளியே போன போது ஒரு சிறு கும்பல் அவளைச் சூழ்ந்து கொண்டது.

''நீங்கதானே சரோஜினி?''

''யெஸ்...''

''உங்க வழக்கு சம்பந்தமா, பத்திரிகையிலிருந்து பேட்டி காண வந்திருக்கோம்..''

''நான் பேட்டி கொடுக்கிற 'மூடில்' இல்லை...''

''ப்ளீஸ் மேடம்.. நாங்க உங்களை ரொம்ப 'டிஸ்டர்ப்' செய்ய விரும்பலை... இரண்டு கேள்விகளுக்கு மட்டும் பதில் சொன்னால் போதும்...''

அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. எல்லோருக்கும் பின்னால் திலீபன் நிழலாய்த் தெரிந்தான். அவன் கண்களில் விவரிக்க முடியாத பல உணர்ச்சிகள்... இவர்களிடமிருந்து தப்பித்து, திலீபனைப் பார்த்தால் தேவலாம் போலத் தோன்றியது.

''சீக்கிரம் கேளுங்க... நான் போகணும்...''

திலீபன் அவளை நெருங்கினான்...

''செந்தில் வேலவனுக்கு ஏழு வருஷம் சிறைத் தண்டனை கொடுத்ததினால, இந்த மாதிரி குற்றங்களைத் தடுத்திட முடியும்னு நினைக்கிறீங்களா?''

கேள்வியில் விஷமிருந்த மாதிரி சரோஜினிக்குப் பட்டது.

''தடுக்க முடியாதுதான்.. அதுக்காகக் குற்றவாளியைச் சும்மா விட்டுடணும்னு சொல்றீங்களா?''

''வீ வாண்ட் ஒன்லி யுவர் ரீயாக்ஷன்...''

பத்திரிகை நிருபரல்லவா... தாம் எதிலும் மாட்டிக் கொள்ள மாட்டார்...

''மை ரீயாக்ஷன்... ஓ... கே... நீதி வழங்கும் போது இரண்டு விஷயங்களைக் கவனிக்கணும். ஒன்று: குற்றவாளிக்குத் தண்டனை. மற்றது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம். ஆனால் எனக்குச் சட்டம் எப்படி நிவாரணம் கொடுக்க முடியும்? உண்மையிலேயே எனக்கு நிவாரணம் கொடுக்கணும்னா மொத்த சமுதாயமும் முயற்சி பண்ணினா, ஓரளவு கொடுக்க முடியும்... ஆனால் இன்னைக்கு நம்ம சமுதாயம் இருக்கிற நிலைமையில அது சாத்தியமில்லை...''

அவள் அந்த இடத்தை விட்டு நகர யத்தனித்தாள்...

''மேடம், இன்னொரு கேள்வி...''

அவள் எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் நகர்ந்து விட்டாள்.

திலீபன் அருகில் அவள் சென்றதும், அவன் அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

இருவரும் ஓர் ஓட்டலில், பாமிலி ரூமில் ஒருவரை ஒருவர் பார்த்தவாறு அமர்ந்திருந்தனர்...

''சரோ, இப்படி எல்லாத்தையும் முடிச்



புதிய முதல்வருக்கு உங்கள் யோசனை!

ஜனவரியில் தேர்தல் நடந்து முடிவுகள் வெளியானதும் தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்கப் போகிறவர் யாராயிருந்தாலும் சரி... அவர் கையில்தான் தமிழ்நாட்டின் எதிர்காலம் இருக்கிறது.

புதிய முதல்வருக்கு மூன்றே மூன்று ஆக்கபூர்வமான ஆலோசனைகளைச் சுருக்கமாகத் தெரிவித்து எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள். நீங்கள் எழுதியனுப்பும் ஆலோசனைகள் தமிழ்நாட்டின் மேம்பாட்டுக்கு உதவக் கூடியனவாக இருக்க வேண்டும். 15.1.89 பொங்கல் சிறப்பிதழ் தொடங்கி 'கல்கி'யில் அவை பிரசுரமாகும்.

பிரசுரமாகும் கடிதங்களுக்குச் சன்மானம் உண்டு. தபால் கார்டு அல்லது உறையின் மீது ''புதிய முதல்வருக்கு யோசனை'' என்று மறவாமல் குறிப்பிடவும்.

கடிதங்கள் வந்துசேரக் கடைசித் தேதி: 28.12.88.

சுக்கிட்டு வந்து நிக்கிறியே...?'' என்றான் திலீபன்.

அவன் லேசாகப் புன்னகை செய்தான். 'திலீபன் மாறவே இல்லை; மாறவும் மாட்டான் போலிருக்கிறது...' இருந்தாலும் தன்னையே சுற்றிச் சுற்றி ஏன் வருகிறான்...? குற்றம் அவனை அரிக்கிறதோ?

''நான் எதையும் முடிக்கலை... நீ மட்டும் இந்த ஹிஸ்டீரியா பேஷண்டோட ஒத்துழைச்சா நாம புதுசா வாழ்க்கையை ஆரம்பிக்கலாம்...''

''ஒத்துழைக்கலாம்... நான் மட்டும் தனிக் கட்டையா இருந்தா ஒத்துழைக்கலாம்.. ஆனா நான் தனிக்கட்டை இல்லையே! எனக்கு அப்பா, அம்மா, தம்பி, தங்கைன்னு இருக்காங்க இல்லியா...?''

''எனக்கு அப்பா, அம்மா, தங்கை இப்படி எதுவும் இல்லைங்கிறியா?''

செவிட்டில் அடித்த மாதிரி இருந்தது அவனுக்கு.

''திலீபன், உன்னோட அப்பா, அம்மா, தம்பி, தங்கை இத்தியாதிகளோட, உனக்காகவே சரோன்னு ஒருத்தியும் இருந்தாங்கிறதாவது ஞாபகம் இருக்கா?''

அவன் தலை கவிழ்ந்தான்...

''சுற்றி வளைக்காமல் நேரடியாகக் கேட்கிறேன்... நீ முடிவா என்னதான் சொல்றே, திலீபன்?''

அவன் சிறிது நேரம் சரோஜினியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்...

''சரோ... ஐ லவ் யூ... ஸ்டில் ஐ லவ் யூ... ஆனால் கல்யாணம்... அது மட்டும் முடியாது...!''

சரோஜினிக்கு இந்த வார்த்தைகள் நாராசமாய் ஒலித்தன. 'ஸ்டில் ஐ லவ் யூ... உனக்கு இப்படி ஒரு கேடு நேர்ந்திருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் உன்னை விரும்பறேன்.'

''சரி திலீபன்... நானும் என் முடிவைத் தெரிவிச்சிட வேண்டியதுதான்... ஐ ஹேட் யூ...! உன்னுடைய கோழைத்தனத்திற்காக, ஐ ஹேட் யூ...!''

நாற்காலியை விட்டு எழுந்து, அறையை விட்டு வெளியேறுவதற்குச் சற்று முன், கதவருகே நின்று அவனை ஒருமுறை பார்த்தாள்... சவப் பெட்டியை மூடுவதற்கு முன், கடைசியாகச் சவத்தின் முகத்தைப் பார்ப்பார்களே, அந்த மாதிரி பார்த்தாள்.

''மிஸ்டர் திலீபன்... வாழ முடியாமல், எங்கேயோ விழுந்து செத்திடுவேன்னு மட்டும் என்னை நினைக்காதே.... நானும் வாழ்வேன்... உன்னை மாதிரி கோழைகள், என்னைப் பார்த்து நடு நடுங்குகிற மாதிரி வாழ்வேன்...

வாழ வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு அசுர பலத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அவள் புயலாய்க் கிளம்பிய வேகத்தில், இடையில் தட்டுப்பட்ட அந்த அறையின் கதவு உற்சாகமாய் ஊஞ்சலாடியது.

புதிர்க்கச்சேரி

இங்கே ஒவ்வொரு கட்ட வரிசையிலும், ராகங்களின் பெயர்கள் எழுத்து மாறி உள்ளன. முதலில் எழுத்துக்களை வரிசைப்படுத்தி ராகங்களைக் கண்டுபிடியுங்கள். திருத்தி எழுதிய பிறகு, வட்டத்துக்குள் சிக்குகிற எழுத்துக்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றை இன்னொரு ராகத்தின் பெயர் வருவது போல வட்ட வரிசைக்குள் எழுத வேண்டும். எங்கே, முடியுமா பாருங்கள்.

1

ர	(வி)	பை					
(ம்)	ரா	ர	ங்	ச	ண	க	ப
ஹி	ஜ	மோ	ன்	னி	(க)		
ரு	(ஞ்)	டி	செ	ட்	சு		

○ ○ ○ ○

2

டி	(சு)	ட்	ரு	
(கா)	ர	சா	ங்	
(ம)	தா	ந்	ணி	சி
(ர)	தா	ம்	கே	

○ ○ ○ ○

3

தி	ஜு	ம	(பா)		
த	(நா)	ம்	ம்	ஸ	ஹ
(ன)	கா	டா			
கி	(போ)	ஆ			

○ ○ ○ ○

4

லி	ந்	மா	னி	பி	(து)	
(ரீ)	ப	ரு	தா			
ரு	னி	ம்	அ	(ஹி)	த	வா

○ ○ ○


இங்கே இடம் பெற்றுள்ள இசைக் கருவிகளுக்கு என்ன பெயர் என்று சொல்லுங்கள், பார்க்கலாம்!

நன்றி: சென்னை இசைக் கருவிகள் மைய வெளியீடு.


விடை: 52 – ஆம் பக்கம்.



1




2




3




4




5



6





மந்திரம்



எந்த ஓசை மனிதனை மேல்நிலைக்குக் கொண்டு போகிறதோ அது மந்திரம் எனப் பெயர் பெறுகிறது. மனதை எது உறுதிப்படுத்துகிறதோ மனதை எது தெய்வ சொருபமாக மாற்றி அமைக்கிறதோ அது மந்திரம் எனப் பெயர் பெறுகின்றது. மந்திரங்களுக்கு அளவு இல்லை. மந்திரத்திற்கு ஏற்ற மந்திர சக்தி இருக்கின்றது. மந்திரம் பலப்பல தெய்வங்களாகவும் வடிவெடுத்திருக்கிறது.

இந்து மதத்தில் ஆறு சமயப் பிரிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. அவை ஷண்மதங்கள் எனப் பெயர் பெறுகின்றன. ஷண்மதங்களுக்கும் உரிய ஆறு தெய்வங்கள் உண்டு.





சைவத்திற்கு சிவம் வைஷ்ணவத்திற்கு விஷ்ணு சாக்தத்துக்கு அம்பிகை காணபத்யத்துக்குக்கணேசன் கௌமாரத்துக்கு சுப்ரமணியன் சௌரத்துக்குச் சூரியன் அந்தந்த தெய்வத்திற்கு உரிய நாமம் அந்தந்த தெய்வத்திற்கு மந்திரமாக இருக்கின்றது. மந்திர ஜபத்தின்மூலம் ஜீவ வியக்தியைக் கடந்து தெய்வ சொருபமாகலாம்.

"ஓம் நமச்சிவாய" என்பது ஒரு மந்திரம் " ஓம் நமோ நாராயணாயா" என்பது மற்றொரு மந்திரம். ஓம் நமசிவாய என இடையறாது ஓதுகின்றவர்கள் சிவ சொருபமாக மாறுகின்றார்கள். ஓம் நமோ நாராயணாய என்று இடையறாது ஓதுகின்றவர்கள் நாராயண சொருபமாக மாறுகின்றார்கள்.

ஓசைகளுள் எந்த ஓசை ஜீவனைப் பரம்பொருள் சொருபமாக மாற்றி அமைக்கின்றதோ அந்த ஓசைக்கு மந்திரம் என்று பெயர். மனதைத் திருத்தி அமைத்து உறுதிப்படுத்தி தெய்வ சொருபமாக செய்கின்ற ஜீவன் தெய்வத்தை அணுகத் தகுதியுடையவன் ஆகிறான். மந்திரத்திற்கு அத்தகைய வல்லமை இருக்கின்றது. மந்திரத்தை ஓயாது ஓதி அதில் மூழ்கி இருப்பவர்கள் அந்த மயமாக மாறிவிடுகிறார்கள். மந்திரத்தை ஓதுவதற்கு ஜெபம் என்று பெயர்.

ஜெபம் செய்வதின்மூலம் ஜீவன் மேல்நிலைக்கு வருவதன் அறிகுறி யாது?

முதல் அறிகுறி நாமத்தை உச்சரிக்கும்பொழுது ருசி ஏற்படும் நாமம் உச்சரிப்பதில் சுவையைக் காண்கின்ற மனநிலை வந்துவிட்டால் சாதகனுக்கு ஜபத்தை நிறுத்திவிட மனம் வராது

மனம் எங்கேயோ சுற்றி அலைந்து கொண்டு இருந்தாலும் நாவானது சதா 'நமச்சிவாயா' என்று ஓதிக்கொண்டிருக்குமாயின் சிவ சொருபமாக அமையலாம் (அல்லது) ஓம் நமோ நாராயணாய என்று ஓதிக்கொண்டிருக்குமாயின் நாராயண சொருபமாக மாறி அமையலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுவது யாது?



நாமத்தைச் சொல்லுவதில் விஸ்வாசமில்லாவிட்டாலும் நாமத்தைப் பரிகாசம் பண்ணுகிற பாங்கில் உச்சரித்தாலும் அதற்கு பலன் உண்டு. நாமத்தை ஓதுவது ஒருநாளும் வீணாகப் போய்விடாது. எந்த நிலையில் எப்படி ஓதினாலும் அதற்கேற்ற பலன் உண்டு. எதுபோல என்றால் மருந்தில் நம்பிக்கை இல்லாது அதை உடலுக்குள் வாயின்மூலமோ ஊசி மூலமோ டாக்டர்கள் செலுத்துகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். மருந்தில்

நம்பிக்கை இல்லாவிட்டாலும் அது பலனைக்கொடுக்கும். அதுபோல நம்பிக்கை இல்லாது இறைவனுடைய நாமத்தை கூறினாலும் அதற்கேற்ற பலன் உண்டு.

மனத்தைத் திருத்தி அமைக்கின்ற வல்லமை அதற்கு இருப்பதால் அது மந்திரம் என்றும் பெயர் பெறுகின்றது.




ஓசையின் சக்தி: மிக லேசான தங்கத் தகட்டை எடுத்து அதன்மீது மெல்லிய தூளைப் பரப்பி ஒரு ராகத்தைப் பாடினால் அந்த ராகம் காற்றில் ஓர் அலையை உண்டு பண்ணுகிறது. அந்த அலைக்கு ஏற்ற பிரகாரம் அந்தத் தூள் வடிவெடுக்கிறது. மற்றொரு ராகத்தைப் பாடினால் அதற்கேற்ற வடிவத்தை அந்த மெல்லியத்தூள் எடுக்கின்றது. அந்தத் தூளை துடைத்துவிட்டு அதே ராகத்தை மறுபடியும் பாடினால்மறுபடியும் அதே வடிவம் பெறுகின்றது. ஒவ்வொரு ராகத்துக்கும் ஒரு வடிவம் இருக்கிறது.

அதே விதத்தில் ஒவ்வொரு தெய்வ சொரூபத்தின் பீஜா மந்திரமாக அந்த தெய்வத்தினுடைய நாமம் இருக்கின்றது.

எந்த தெய்வத்தினுடைய நாமத்தை உச்சரிக்கின்றோமோ அந்த தெய்வத்தினுடைய விபூதிகள் நமக்கு வந்துவிடுகின்றன.

உபாசகனுக்கு உபாசனா மூர்த்தியின் விபூதிகள் எல்லாம் சொந்தமாகின்றன. தந்தையுடைய சொத்து தனயனுக்குச் சொந்தமாவது போன்று வழிபடு தெய்வத்தினுடைய விபூதிவழிபடுபவருக்கு சொந்தமாகிவிடுகிறது.



நாமம் பெரிதா?
நாமத்துக்குரிய நாமி பெரியவனா?

கிருஷ்ணாவதாரத்தின் பொழுது கிருஷ்ணனை தராசின் ஒரு தட்டில் வைத்து "கிருஷ்ணா" என நாமத்தைத் துளசிப் பத்திரத்தில் எழுதி அதைத் தராசின் மற்றொரு தட்டில் வைத்தார்கள். கிருஷ்ணனுடைய நாமம் கிருஷ்ணனை விடப் பெரியது என்பதை விளக்கிக் கிருஷ்ண நாமம் இருந்த தட்டு கீழே இறங்கியது. மக்களாகிய நமக்கு இறைவனுடைய நாமம் கிடைத்திருப்பது பெரிய வாய்ப்பு ஆகும்.

விடைகள்:

1. பைரவி, சங்கராபரணம், ஜகன் மோகினி, செஞ்சுருட்டி (ரஞ்சனி)
2. சுருட்டி; சாரங்கா, சிந்தாமணி, கேதாரம் (சாருகேசி)
3. பானுமதி, ஹம்சநாதம், கானடா, ஆபோகி (காம்போதி)
4. பிந்துமாலினி, பகுதாரி, அம்ருத வாகினி (பவானி).



''ஸீஸன் டிக்கெட் வாங்கறவங்களுக் கெல்லாம் என் கச்சேரி கேஸட் இலவ சம்னு அறிவிச்சீங்களே, பிரமாதமா விற்பனையாகியிருக்கணுமே?''

''ஓ! பேஷா விற்பனையாச்சே! ஒவ் வொருவரும் டெய்லி டிக்கெட்டாகவே கேட்டு வாங்கிக்கிட்டுப் போயிட் டாங்க!''

''பாட்டை பாவத்தோடு பாடத் தெரிஞ் சுக்கணும்னு போன கச்சேரிக்குக் கப்புடு விமர்சனம் எழுதினாராம்... அதான்...



1. நாக வீணை,
2. ருத்ர வீணை,
3. ஃபோனோ வயலின்,
4. பாம்பு நாகஸ்வரம்,
5. மாண்டலின்,
6. செங்கோட்டு யாழ்.

தொகுப்பு: மௌஷ்மி

மண மகளே வா

மண மகளே வா



ராதிகாவின் அண்மைக்கால ஃபார்முலாப்படி இதுவும் அவருக்குப் பொருந்திய பழிவாங்கும் படலம்தான்.

பட்டப்படிப்பை முடித்துத் தந்தை வீடு (தாய் இல்லை) திரும்பும் மாடர்ன் ராதிகா, மூன்று முடிச்சுப் போட்டுக் கொண்டு போன அக்காள் சூரியா 'மாமியார் கொடுமை' காரணமாய் மூன்றாம் நாளே பிறந்தகம் திரும்பி விட்டாள் என்றறிந்து, ''அப்படியா சேதி? அதே மாமியாருக்கு நான் இன்னொரு மருமகளாய்ப் போய்ச் சேர்ந்து, அவரைப் பழிவாங்காவிட்டால் என் பெயர் சித்ரா இல்லை' என்று இல்லாத மீசை மேல் இருக்கின்ற கையைப் போட்டு முறுக்கிக் கொண்டு கிளம்புகிறார். ஏதோ ஒரு வகையாய்ப் பழி வாங்கி முடிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அதுசரி, அந்த மாமியார் அப்படி என்ன மகாபெரிய கொடுமை செய்துவிட்டார்? முதன் முதலாகப் புகுந்த வீட்டில் அடியெடுத்து வைக்கும் போது இடது காலை எடுத்து வைக்க, அது பொறுக்காமல் கடிந்து கொண்டது; வீட்டு வேலை செய்ய வேண்டிய பகல் போதிலே வீடியோ பார்க்கிறாயே, இது குடும்பப் பெண்ணுக்கு லட்சணமா என்று கேட்டது; இரண்டாவது நாளே குடும்பத்தை இரண்டாக்கித் தனிக் குடித்தனம் போகலாம் என்று இளிச்சவாய்ப் புருஷன் சின்னிஜெயந்துக்குத் தலையணை மந்திரம் போட, அவரும் தலையாட்டிப் பொம்மையாய் அம்மாவிடம் கேட்க, 'ஏண்டி, எங்க குடும்பத்தைப் பிரிக்கப் பார்க்கிறே?' என்று கேட்டது — இதெல்லாம்தான் மாமியார் கொடுமையாம். ரொம்ப வீக்!

மாமியாரைப் பழி வாங்க அவரது மகனைப் பகடைக் காயாக்கிக் கொண்டது டிராக் மாறினாலும் சுவாரஸ்யம் அதில்தான். இளைய திலகம் விழிப்பிலும் சரி, முழிப்பிலும் சரி; அடிதடியிலும் சரி அசடு வழிவதிலும் சரி செமை தூள்! சீரியஸான ராதிகாவைச் சந்தித்து, இதிலே வேடிக்கையாய், விளையாட்டுத்தனமாய், குடும்பப்பாங்காய் அவரைப்பார்க்கும்போது குளுகுளுவென்றுதான் இருக்கிறது.

வாயாற வாழ்த்துவது என்பது சும்மா சம்பிரதாயம், அதிலே அர்த்தமே இல்லை என்று வலியுறுத்த வருகிறாரோ வசன கர்த்தா கதாசிரிய டைரக்டர்! அருள்வாக்கு சந்திரன் திருவாய் மலர்ந்து, 'நீ நாசமாப் போ, குட்டிச்சுவராப் போ,' என்று சொல்ல மாட்டாரா என்று ஊரே ஏங்கி, விளை பொருள் வகையறாக்கள் மட்டுமல்ல; இடிச்சபுளி, ஒரு கூடை முட்டை (அருள் வாக்குப் பெற்றுச் சேவல் போட்ட முட்டை உள்பட!) வரை கொண்டு வந்து காணிக்கை செலுத்துகிறார்களாம். மாறாக, 'நல்லாரு, அமோகமா வாழ்' என்று கையைத் தூக்கினாரோ, அவன் பூண்டோடு அழிந்து போவானாம்! ஆதாரம்: நாத்திகம் பேசிப் பழித்த உசிலைமணியை அவர், 'உன் ஜவுளிக் கடைகள், மாட்டுப் பண்ணை எல்லாம் நல்லாயிருக்கட்டும்,' என்று வாழ்த்தி வரம் கொடுத்து அனுப்பப் போய், அந்த உசிலைமணி தன் தம்பி ஓமக்குச்சியுடன் இன்னொரு ஓமக்குச்சியாய் உருமாறி வந்து சந்திரனிடம் மன்னிப்புக் கோருகிறாரே அது.

மற்றும் புதிய அம்மா பி. ஆர். வரலட்சுமி — வி. கே. ஆர். ஜோடி (அந்த அம்மாளை ராதிகா தன் காலில் விழ வைத்ததும் கற்பனையில் அப்படியே ஸ்லோமோஷனில் ஓடி வருகிறாரே — தமாஷ்) படு பாந்தம்.

கவுண்டமணியை என்னதான் ஓரம் கட்டினாலும் கொஞ்சம் முண்டிக் காட்டியிருக்கிறார்.

வெ. ஆ. மூர்த்தி 'வெடுக்' 'துடுக்'கைச் சற்று அடக்கி உருக்கம் காட்ட முயன்றிருக்கிறார். பாணி மட்டும் அதேதான்.

பாவம் மனோரமா — ஒரே ஒரு காட்சியில் தம்மை நினைவூட்டியிருக்கிறார். குறை காண முடியுமோ?

மனசுக்கு இதமாய் வாய்விட்டுச் சிரிக்கும்படியாய் இருக்கிறதே, அதற்கு நன்றி சொல்லணும்.

— பி. எஸ். எஸ்.



பாலகிருஷ்ண சாஸ்திரிகள் — இவ்வாண்டின் சங்கீத கலா சிகாமணி விருதை இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் இசைக்கு வழங்குகிறது.

விருது பெறும் கலைஞர்கள்



டி. விஸ்வநாதன்

'பாலா'வின் தம்பி

விஸ்வநாதனின் முக்கியமான ஆராய்ச்சிக் கட்டுரைகள், விமர்சனங்கள், சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பட்டியல் போட்டால், அந்தப் பட்டியலே இருபத்தோரு பக்கங்களுக்கு நீள்கிறதாம்! இருபத்திரண்டாம் பக்கத்தில் முதல் இடம் பெறப் போவது சென்னை மியூசிக் அகாடமி வழங்கும் இவ்வாண்டின் சங்கீத கலாநிதி பட்டம்! ஆனால் இவர் முதன் முதலாக வாங்கிய பட்டம் பொருளாதாரத்தில் டாக்டர் பட்டம்!

அகாடமியின் சரித்திரத்தில் புல்லாங்குழல் கலைஞர் ஒருவருக்குச் சங்கீத கலாநிதி பட்டம் வழங்கப்படுவது இது மூன்றாவது தடவை. முதல் முறை பல்லடம் சஞ்சீவ ராவுக்கு அப்பட்டம் கொடுக்கப்பட்டது. இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளை சங்கீத கலாநிதி; இப்போது மீண்டும் சரியாக இருபத்தைந்து வருடங்கள் கழித்து அவர் சீடரான டி. விஸ்வநாதனுக்கு விருது! வீணை தனம்மாளின் பேரனும் பாலசரஸ்வதியின் தம்பியுமான விஸ்வநாதன் பாவம் சொட்டச் சொட்டப் பாடிவிட்டுக் குழல் வாசிப்பதில் வல்லவர்.

அமெரிக்காவிலேயே வசிக்கும் இவரது கச்சேரிகள் இந்தியாவில் அபூர்வமாகவே நடைபெறுகின்றன. ரசிகர்கள் ஏங்கிப் போகிறார்கள்.

ஜான் ஹிக்கின்ஸ் உள்பட பல சிறந்த சிஷ்யர்களை உருவாக்கியிருக்கிறார் 'விஸ்வா.'

செம்மங்குடியின் சீடர்

ஆரம்பத்தில் தமது தந்தை மிருதங்கம் மகாலிங்கம் பிள்ளையிடமே இசை பயின்று வந்த டி. எம். தியாகராஜன், 1940 – இல் செம்மங்குடியின் சீடரானார். அடுத்த ஒரு வாரத்துக்குள் நாட்டரசன் கோட்டையில் ஒரு கச்சேரி இருந்தது செம்மங்குடிக்கு. தியாகராஜன் அக்கச்சேரியில் தம்முடன் பாட வேண்டும். என்று உத்தரவு போட்டுவிட்டார் செம்மங்குடி. ''மளமளவென்று பத்து கீர்த்தனைகளைப் பாடம் பண்ணி அந்தக் கச்சேரியில் குருவுடன் சேர்ந்து பாடியதை மறக்கவே முடியாது'' என்று கூறும் டி. எம். டி., இன்று தாமே பல சிறந்த வித்வான்களுக்குக் குருவாகத் திகழ்கிறார். 'தஞ்சாவூர் மியூசிக் டிரெடிஷன்' (டி. எம். டி.) என்ற தமது அமைப்பின் ஆதரவில் தம் சிஷ்யர்களைப் பாடச் செய்து, விளம்பரமும் வாய்ப்பும் அளித்து வருகிறார்.



டி. எம். தியாகராஜன்

சென்னை இசைக் கல்லூரி துணை முதல்வராகவும், மதுரை சத்குரு சங்கீத வித்யாலயாவின் முதல்வராகவும் பணியாற்றியுள்ளவர். ஏற்கெனவே 'சங்கீத கலாநிதி'யான இவர், இவ்வாண்டு 'சங்கீத கலாநிபுண'ராகிறார். பட்டத்தை அளித்து மகிழ்வது மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ்.

வயலினில் உரையாடுபவர்



குன்னக்குடி

அரியக்குடி, செம்மங்குடி, மகாராஜபுரம் விசுவநாதய்யர் போன்ற ஜாம்பவான்களுக்குப் பக்க வாத்தியமாக வயலின் வாசித்தவர் குன்னக்குடி — எல்லாம் தமது பன்னிரண்டாவது வயதில்!

இவ்வாண்டுக்கான 'சங்கீத சாகரம்' விருதை 'கல்சுரல் சென்டர் ஃபார் பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ்' என்ற அமைப்பு குன்னக்குடிக்கு வழங்குகிறது. சென்னையில் கடும் தண்ணீர்ப் பஞ்சத்தின்போது புழலேரியில் நின்று கொண்டு இந்த சங்கீத சாகரம் அமிர்தவர்ஷிணி வாசித்ததை இன்னும் யாரும் மறக்கவில்லை. அவருடைய விறுவிறுப்பான பாணி சர்ச்சைக்குரியது என்றாலும் அவர் இசை ஞானம் கடல் போன்றதே.

வயலினில் உரையாடலே கூட நிகழ்த்திவிடும் வல்லமை படைத்தவர் குன்னக்குடி. நினைவிழந்து கிடந்த தமது தந்தையாரை இவர் தம் வாசிப்பினால் விழித்தெழச் செய்ததாகவும், கவிஞர் கண்ணதாசனின் ரத்த அழுத்தத்தைத் தமது இசைத் திறனால் கட்டுப்படுத்தியதாகவும் சொல்வதுண்டு. (சிலருக்கு அதிகரித்துவிடும் என்பது வேறு விஷயம்!)

குன்னக்குடி இசையமைத்து எண்ணூறு இசைத் தட்டுக்கள் வெளியாகியுள்ளன. ரிகார்டுகளில் ரிகார்ட் அல்லவா இது!

தலைவர்களின் கலைஞர்

தேசத் தலைவர்கள் ராஜன்பாபு, நேருஜி, ஜாகிர் உசேன், காமராஜர், இந்திரா காந்தி எல்லோர் முன்னிலையிலும் தனிக் கச்சேரிகள் நிகழ்த்திப் பாராட்டுதல்கள் பெற்றவர் ஏ. கே. ஸி. நடராஜன்.

நாகப்பட்டினத்தில், திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை முன்னிலையில் நீலாயதாட்சி ஆலயத்தில் வழங்கப்பட்ட 'கிளாரிநட் எவரெஸ்ட்'; என்ற பட்டத்தையே ஏ. கே. ஸி. நடராஜன் மிகவும் மதிக்கிறார். பட்டத்தில் அந்தச் சிகரத்தைத் தொட்ட வேளையோ என்னவோ, ஆன்மீகச் சிகரம் — சுவாமி சிவானந்தர் — ரிஷிகேசத்தில் வழங்கிய 'கிளாரிநட் சாம்ராட்'; மைசூர் மன்னர் ஜெயசாமராஜ உடையார் தசராவின் போது கொடுத்த 'கிளாரிநட் சக்கரவர்த்தி' என்று பல பட்டங்களும் வந்து சேர்ந்தன. இப்போது தமிழிசைச் சங்கம் 'இசைப் பேரறிஞர்' விருதை வழங்குகிறது.

நடராஜன் அரசவைக் கலைஞர்; காஞ்சி காமகோடி மடத்து ஆஸ்தான வித்துவானும் கூட.



ஏ. கே. ஸி. நடராஜன்

லட்சப்பா பிள்ளையிடம், ராஜராஜன் காலத்துத் தந்த நாதஸ்வரம் இருப்பது போல் ஏ.கே.ஸி. யிடம் தங்க கிளாரிநட் இருக்கிறது! வழங்கியவர்கள், திருச்சி வைசிய கன்னிகா பரமேசுவரி ஆலயத்தினர்.

நல்ல இசையைத் தெரிந்து ரசிப்பவர்; அந்த விஷயத்தில் ஏ. கே. ஸி. ஒரு டி. கே. சி.

முதல் பாட்டு



* லட்சப்பா பிள்ளை

தாங்கள் கற்றுக் கொண்ட முதல் கீர்த்தனையைப் பற்றிச் சில வித்வான்கள் இங்கே நினைவு கூர்கிறார்கள்......

களாக குளிக்கரை விஸ்வலிங்கமும் நானும் சகோதரர்களைப் போலச் சேர்ந்தே கச்சேரிகள் செய்து வருகிறோம்.

எப்படி மறப்பது?

கருணா புருஷோத்தமன்:

கர்நாடக இசைக்கான தேசிய ஸ்காலர்ஷிப்புக்கு மனு செய்திருந்தேன். இந்த ஸ்காலர்ஷிப் கிடைத்தால் முசிறி சுப்ரமண்ய அய்யர் அவர்களிடம் மாணவியாகச் சேர்ந்து பயில முடியும். தில்லியில் நேர்முகத் தேர்வு நடந்தது. முதல் முறை இத்தேர்வில் எனக்கு வெற்றி கிட்டவில்லை. சென்னை திரும்புமுன் நாக்பூரில் ஒரு சிறிய கச்சேரி. அங்கு ரசிகர்கள் 'நகுமோமு' பாடச் சொல்லி என்னைத் துளைத்தெடுத்து விட்டார்கள். எனக்கோ அந்தக் கீர்த்தனையே தெரியாது!

சென்னை திரும்பி, முசிறி சுப்ரமண்ய அய்யர் அவர்களிடம் நேர்முகத் தேர்வில் வெற்றி கிட்டவில்லை என்பதைத் தெரிவித்த போது அவர் அதைப் பொருட்படுத்தாமல் பெருந்தன்மையுடன் தமது வகுப்புகளுக்கு இடையே எனக்கும் கற்றுத் தர நேரம் ஒதுக்கினார்! முதல் முதலாக அவரிடம் சென்ற போது, 'என்ன பாட்டு கற்றுக் கொள்கிறாய்' என்று கேட்டார். அப்போது நான் அவருடைய வயதுக்கும், வித்வத்துக்கும் உரிய மதிப்புக் கொடுத்து, 'நீங்கள் எந்தப் பாட்டைச் சொல்லிக் கொடுத்தாலும் கற்றுக் கொள்கிறேன்' என்றுதான் கூறியிருக்க வேண்டும். ஆனால் நாக்பூர் அனுபவமும், ஏதோ ஒரு துணிவும் கலந்து உந்த 'எனக்கு 'நகுமோமு' கற்றுக் கொடுங்கள்' என்று பளிச்செனக் கூறிவிட்டேன்! முசிறி சிரித்தார்.

கேள்வி ஞானம்

ஆல் இந்தியா ரேடியோ, நிலையக் கலைஞர் திருவாரூர் எஸ். சேதுராமன்:

எங்கள் குடும்பமே இசைக் குடும்பம் என்பதால் சதா சர்வகாலமும் ஏதேனும் ஒரு கீர்த்தனை சிறுவனான என் காதில் விழுந்து கொண்டேயிருக்கும். கேட்டுக் கேட்டே பல பாடல்களை நான் கற்றுக் கொண்டு விட்டேன். என் சகோதரிகள், எனது தாய்மாமாவான ஃபிடில் வித்வான் சுப்பய்யரிடம் முறையாகப் பாட்டுக் கற்றுக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு மாமா சொல்லித் தந்த 'கோடினதுலு தனுஷ்கோடி' என்ற தோடி ராகக் கீர்த்தனையைக் கேட்டுக் கேட்டுப் பழகி, நானே ஒரு நாள் பாடிக் கொண்டிருந்தேன். இதைக் கேட்டுவிட்ட எனது பெற்றோர், அன்று முதல் நானும் மாமாவிடம் பாட்டுக் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தார்கள். எனது எட்டாவது வயதில் நடந்த சம்பவம் இது. பன்னிரண்டாவது வயது முதல் மேலும் பல பெரிய வித்வான்களிடம் பயிற்சி பெற்று, பதினெட்டாவது வயதில் முதல் முறையாக மேடைக் கச்சேரி செய்தேன். கடந்த இருபது ஆண்டு

அடுக்கடுக்கான சங்கதிகளுடன் கூடிய இக்கீர்த்தனை முசிறி அய்யர்வாளின் 'ஸ்பெஷாலிடி.' முதல் வகுப்பிலேயே அதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டது அதிகப்பிரசங்கித்தனம்தான். ஆனால் என் ஆசையை மதித்து இயல்பாக, 'நகுமோமு'வில் எனக்குப் பாடத்தை ஆரம்பித்தார் அய்யர்வாள்! சில வாரங்களுக்கு 'நகுமோமு'வையே நான் கற்றுக் கொண்டிருந்ததை எப்படி மறக்க முடியும்...?!

அச்சாரம்

சென்னை, இசைக் கல்லூரியின் விரிவுரையாளர், நாதஸ்வர வித்வான் லட்சப்பா பிள்ளை:

பாலவினோத சங்கீத சபா நாடகக் கம்பெனியில்தான் நான் முதன் முதலில் சேர்ந்தேன். எனக்கு லக்ஷ்மணன் வேடம்; டி. எம். தியாகராஜன்தான் ராமர்! அப்போது எனக்கு வயது ஐந்து அல்லது ஆறுதான் இருக்கும். மேடையில் பாடியும், வசனம் பேசியும் நடித்து வந்தேன். திடீரென்று நாடகக் கம்பெனி கலைந்துவிட்டது. இந்தத் தருணத்தில்தான் என் தந்தைவழி நெருங்கிய உறவினரான கோட்டை சுப்பராய பிள்ளையின் மகன் நடராஜ சுந்தரம் பிள்ளை எங்கள் வீட்டுக்கு வருகை தந்தார். நான் நாடகங்களில் பாடி, நடித்து வந்ததை அறிந்து "ஒரு பாட்டு கத்துக்கறியா?" என்றார். நானும் உற்சாகத்துடன் ஹரிகாம்போதி ராகத்தில் அவர் கற்றுத் தந்த 'வினதாசுதவாஹனுடை' என்ற கீர்த்தனையைப் பாடம் செய்தேன். ஏழு வயதுச் சிறுவனான எனக்கு நல்ல இசை ஞானம் இருக்கிறது என்று அங்கீகாரம் கொடுத்துவிட்டுக் கிளம்பிப் போய்விட்டார். என் தகுதிக்கு அச்சாரமாக அமைந்தது இந்த நிகழ்ச்சி. இது நடந்து சில வருடங்கள் கழித்து, என் தாயார் காலமானபோது, மீண்டும் நடராஜ சுந்தரம் பிள்ளை வந்தார். இம்முறை என்னைத் தம்முடனேயே திருவாரூருக்கு அழைத்துச் சென்று நாதஸ்வரம் வாசிக்கக் கற்றுக் கொடுத்து, என்னை ஆளாக்கினார்.

வாழ்க்கைத் தத்துவம்

வீணைக் கலைஞர் நிர்மலா பார்த்தசாரதி:

கல்கத்தாவிலிருந்து என் கணவருக்கு பம்பாய்க்கு மாற்றலானதில் எனக்கு மிகவும் சந்தோஷம் — காரணம், அங்கே, ஷண்முகானந்த சபாவில் கே. எஸ். நாராயணசாமி நடத்தி வரும் வீணை வகுப்பில் சேரலாம் என்பதுதான். வீட்டிற்கும் வகுப்புக்கும் இடையே இருந்த தொலை தூரத்தையும் போக்குவரத்துப்பிரச்னைகளையும்பொருட்படுத்தாமல் வகுப்பில் சேர்ந்து விட்டேன். ஏற்கெனவே வீணை ராகவன் அவர்கள் கொடுத்த பயிற்சி காரணமாக உயர் வகுப்பிற்கே தேர்வு செய்யப்பட்டேன். கே. எஸ். நாராயணசாமி அவர்கள் எனக்குக் கற்றுக் கொடுத்த முதல் கீர்த்தனை கமலா மனோகரி ராகத்தில் அமைந்துள்ள 'கஞ்சதளாயதாக்ஷி' என்ற கிருதி. இக்கிருதியைக் கற்றுத் தரும்போதே, வித்வத்தைக் காட்டிலும் அடக்கம் முக்கியமானது என்பதை என் குரு எனக்கு உணர்த்தினார். பாடாந்திர சுத்தமும் கமக நுட்பமும் நிறைந்த அவரது வாசிப்பு, மன அமைதியையும் நிறைவையும் தந்த அதே சமயத்தில், மானிட சாரீரத்தினால் வழங்கக்கூடிய இசையையே இசைக் கருவியிலும் வழங்கவேண்டும்; அதனை மீறும் அனாவசியங்களைப் புகுத்தி ஜாலம் காட்டக் கூடாது என்பதையும் உணர்த்தியது. ஒரு வாழ்க்கைத் தத்துவத்தையே அந்தக் கிருதியின் மூலம் நான் அன்று கற்றுக் கொண்டேன்.

— எஸ். ஆர்.



• நிர்மலா பார்த்தசாரதி



• கருணா புருஷோத்தமன்



• திருவாரூர் சேதுராமன்

துக்கடா:

டக்கா ராகமும் டக்கரான நிகழ்ச்சியும்!

சுந்தர மூர்த்தி ஸ்வாமிகளின் மீது தீக்ஷிதர் ஒரு கிருதி இயற்றியுள்ளார். "ஸுந்தர மூர்த்திம் ஆச்ரயாமி" என்றே தொடங்கும் இப்பாடல் டக்கா என்ற அபூர்வ ராகத்தில் அமைந்தது - டக்கா ராகம் பற்றி ஒரு சுவையான நிகழ்ச்சி. முத்துஸ்வாமி தீக்ஷிதரின் இளமையில் அவருடனும் அவரது சகோதரர்களுடனும் தந்தையார் ராமஸ்வாமி தீக்ஷிதர் சென்னையை ஒட்டியுள்ள மணலியில் தர்மப் பிரபுவான முதலியாரின் விருந்தினராகத் தங்கியிருந்தனர். அப்போது அவர்கள் மெய்யாகவே வேங்கட மகியின் சிஷ்ய பரம்பரைதானா என்று பரீட்சை பார்ப்பதற்காக ஒரு வித்வான் வந்தார். அவர் மேற்படி சிஷ்ய பரம்பரைக்கு மாத்திரமே பரிச்சயமான இந்த டக்கா ராகத்தைக் கொஞ்சம் பாடிக் காட்டி விட்டு, 'இது என்ன ராகம் என்று சொல்வீர்களா? இதில் ஆலாபனை செய்வீர்களா?' என்று கேட்டார். அந்தக் கணமே ராமஸ்வாமி தீக்ஷிதர் "நநு பரீக்ஷிஞ்சநேல?" ("என்னைப் பரீக்ஷிப்பது என்ன?") என்று டக்கா ராகத்திலேயே சொந்த சாஹித்தியம் பாடி, வாதுக்கு வந்த வித்வானை வெட்குறச் செய்தார். (தீக்ஷிதரின் தம்பியான பாலு ஸ்வாமி தீக்ஷிதரே இவ்விதம் பாடிக் காட்டியவரென்றும் சொல்வதுண்டு.)



* இரட்டிப்புத் துணிச்சல்: வெள்ளைக்குயில் நாடகக் காட்சி.

•

சீர்காழிக்கு அருகிலுள்ள திருக்கோலக்காவில் சிவபெருமானுக்கு சப்தபுரீச்வரர் என்றும் அம்பிகைக்கு ஓசை கொடுத்த நாயகி என்றும் பெயர். காரணம் என்ன தெரியுமா? ஞானசம்பந்தர் இங்கே கையாலேயே தாளம் போட்டுக் கொண்டு பாடுவது கண்ட இறைவன், 'குழந்தை பட்டுக் கை சிவக்கத் தாளம் போடுகிறதே!' என்று உருகினான். பஞ்சாக்ஷரம் பொறித்த பொற்றாளத்தை (ஜாலராவை) ஆளுடைய பிள்ளைக்கு அளித்து சப்த புரீச்வரனானான். தேவியும் போட்டி போட்டுக் கொண்டு, சம்பந்தர் எந்த சுருதியில் பாடினாலும் அதே சுருதியில் ஒலிக்குமாறு அதற்கு நாதம் அளித்து 'ஓசை கொடுத்த நாயகி' ஆனாள்.

•

ஸரஸ்வதியுடைய வீணையின் பெயர் கச்சபி. ஃபிலிப்பைன்ஸில் தற்போதும் உள்ள வீணை போன்ற தந்திக் கருவி 'கட்ஜ்யபி' என்றே வழங்குகிறது.

நாரதருடைய வீணையின் பெயர் மஹதி.

பெருங்கதைத் தலைவனான உதயணனுடைய வீணை அல்லது யாழின் பெயர் கோஷவதி. இதை வாசித்துத்தான் மத யானையையும் சொக்க வைத்து அடக்கினான்.

மஹேந்திர பல்லவன் சுயமாகக் கண்டுபிடித்த வீணைக்குப் பரிவாதினி என்று பெயர்.

•

அறந்தாங்கி வைத்யநாதய்யர், நாகப்பட்டினம் வேங்கடேசய்யா என்பவர்கள் முழு நேர சம்பிரதாயக் கச்சேரியாகவே சீட்டி

(சீழ்க்கை) அடித்துப் பெயர் வாங்கியுள்ளனர்.

கச்சேரி என்பது உருது வார்த்தை. இவ்வார்த்தை வழக்குக்கு வருமுன் தமிழறிஞர்கள் இசை, நடன நிகழ்ச்சிகளை 'வினிகை' என்றே குறிப்பிட்டு வந்தனர்.

*

டீவி மோகம் காரணமாக நாடகம் அரங்கேற்றவே அசாத்தியத் துணிச்சல் தேவைப்படுகிற இந்நாளில், வி. கோபால கிருஷ்ணன், இரட்டிப்புத் துணிச்சல் காட்டித் தமது கோபி தியேட்டர்ஸில் கர்நாடக இசைக்கு முக்கியத்துவம் தந்து ''வெள்ளைக் குயில்'' நாடகத்தைத் தயாரித்திருக்கிறார்!


ஒரு கர்நாடக இசைக் கலைஞர், தமது குரு மீது வைத்திருக்கும் பக்தி காரணமாகக் குருவின் மகனையே குருவின் வேண்டுகோளுக்கு இணங்கத் தமது சீடனாக்கிக் கொள்கிறார். இதன் விளைவாக எழும் பிரச்னைகள், மனப் போராட்டங்கள் என்று வளரும் கதைக்குக் கிளுகிளுப்பான ஒரு காதல் ஜோடியும் சுவை சேர்க்கின்றனர். மிகையில்லாத நல்ல நடிப்புக்கு கோபி, ஏ. கே. வீராசாமி இருவரையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். பின்னணி இசையின் இனிமைக்குப் பாராட்டு பூவை மணிக்கு.

*

'குறவஞ்சி' என்ற பெயரிலிருந்தே அது தமிழகத்தின் சிறப்புச் சொத்து என்று புரிந்து கொள்ளலாம். சரபோஜி மன்னர் தமது தாய்மொழியான மராத்தியில் 'தேவேந்திரக் குறவஞ்சி' என்று இயற்றியிருக்கிறார்! சாதாரணமாகக் குறத்தி தன்னுடைய பிறப்புச் சீமையை மட்டுமே வர்ணித்துப் பாடுவது வழக்கம். ஆனால் சரபோஜியோ தம் குறவஞ்சியில் பூகோள நாடுகள் முழுவதையுமே 'வர்ணிக்கச்' செய்திருக்கிறார்! அதை பூகோள கீதம் என்றே சொல்வதுண்டு!

*

அமெரிக்கத் தத்துவஞானி எமர்ஸனின் பெயரில் ஒரு ராகம் உள்ளது! சாஹித்ய கர்த்தா லக்ஷ்மணப் பிள்ளைக்கு எமர்ஸனிடம் மிகுந்த ஈடுபாடு. ஆகையால் நீதிமதி என்ற அறுபதாவது மேளத்தின் ஜன்யமாக





அவர் ஒரு புது ராகம் சிருஷ்டித்த போது 'எமர்ஸன்' என்ற பெயரைத் தழுவுவதாக 'அமரஸேனா' என்று அதற்குப் பெயரிட்டார்.

*

பாபநாசம் சிவன், நீலகண்ட சிவன் இருவருக்குமே சிவன் என்பது இயற்பெயரல்ல. முன்னவரின் பெயர் ராமையா. பின்னவரின் பெயர் சுப்ரமணியம்.

*

நாயனாப் பிள்ளையின் கச்சேரியொன்றின் போது உடையவர்லு செட்டியார் என்ற தனிகர் குறுக்கிட்டு அசம்பாவிதமாக ஜோக் அடித்தார். உடனே பிள்ளையவர்கள் ''மரியாத காதையா'' என்று பைரவ ராக பாட்டைப் பாடியே அவரைக் கண்டித்தார். இதைக் கேட்டுச் சபையோர் செய்த ஆரவாரம் கச்சேரிக்கு மேலும் இடையூறு விளைத்தது. பிள்ளைவாள் ''புத்தி ராது'' என்று சங்கராபரணத்தில் ஆரம்பித்தார்!


நாயனாப் பிள்ளையின் பெரிய தாயாரான தனகோடி அம்மாள் தம் காலத்தில் பிரபல வித்வஷியாயிருந்தவர். அவரது இசை வினிகையின் இடையே ஒரு 'மைனர்' பிரபு ''ராம நாடகக் கீர்த்தனை பாடு'' என்று ஏக வசனத்தில் கூறினார். தனகோடியம்மாள் பனிச்சென்று கேதாரகௌள ராகத்தில்,

ஆரடா குரங்கே, இங்கே வந்த நீ
ஆரடா குரங்கே?


என்ற — ஹனுமாரைப் பார்த்து ராவணன் பாடுவதான — பாடலைப் பாடினார்!

*


மணலி முதலியார் குடி இசையைப் போற்றிப் போஷித்த பெருமையே பெருமை! மணலி முத்துகிருஷ்ண முதலி



''தவில்வேளை, தலைக்கு வந்தது, தம்பூராவோட போச்சு!''



''பிச்சு உதறிடுவார், அக்கு வேறு ஆணி வேறாக்கிக் காட்டிடுவார்னு சொன்ன போது சந்தோசப்பட்டுக்கினேனே, இப்பவாவது நம்புரீங்களா!''



''பாகவதர் பக்கவாத்தியத்துக்கு மோர்சிங் சேர்த்துக்கிட்டது தப்பாப் போச்சு: மோஹராசிங்னு ஒரு பயங்கர வாதி இந்தப் பக்கம் வந்திருக்கிறதா நம்ம வி. ஐ. பி.க்குத் தகவல் கிடைச்சதாம்!''

யார் அருணாசலக் கவிராயருக்குக் கனகாபிஷேகம் செய்திருக்கிறார். முத்துகிருஷ்ணரின் புதல்வரான சின்னையா முதலியார் முத்துஸ்வாமி தீக்ஷிதரின் தந்தையான ராமஸ்வாமி தீக்ஷிதருக்குக் கனகாபிஷேகம் செய்திருக்கிறார். இக் குடும்ப மூதாதையொருவர் அருணகிரி நாதருக்குக் கனகாபிஷேகம் செய்ததாகவும் செய்தி உண்டு.

*

கச்சேரிக்கு டிக்கெட் வைத்து ரஸிகர்களை அநுமதிக்கும் சங்கீத ஸபைகள் தோன்றியதற்கு முற்பட்ட காலம். மஹா வைத்யநாத சிவன் திருவல்லிக்கேணியில் அன்பர்கள் ஏற்பாடு செய்திருந்த ஓரிடத்தில் கச்சேரி செய்ய வந்திருந்தார். கட்டணம் அளிப்பவர்கள் மட்டுமே உள்ளே அநுமதிக்கப்படுவதை அவர் கவனித்துவிட்டார். உடனே உரத்த குரலில் அறிவிப்புச் செய்தார்: ''இன்று இங்கு கச்சேரி செய்ய இயலவில்லை. நாளைக்கு எல்லோரும் பார்த்த சாரதி கோவிலுக்கு வாருங்கள். அங்கே கச்சேரி நடக்கும்.''

சொன்னபடியே செய்தும் காட்டினார், தமது இசையைக் கட்டாயக் கட்டண வசூலுக்கு வழங்க ஒப்பாத அப் பெரியார்.

*

காஞ்சி மடம் சென்னை நுங்கம்பாக்கத்தில் முகாமிட்டிருந்த போது, ஒரு சிவராத்திரியன்று இசைக் கலைஞர்களையெல்லாம் வருவித்துப் பரமாசார்யர்கள் ஒரு கேள்வி எழுப்பினார்: ''தியாகராஜரின் 'நாத தநுமநிசம்' கிருதியில் பரமசிவனின் ஐந்து முகங்களிலிருந்து ஏழு ஸ்வரங்கள் பிறந்ததாக உள்ளதே! ஐந்திலிருந்து ஏழு எப்படி வரும்?''

மைசூர் வாசுதேவாசாரியர் உள்ளிட்ட வித்வான்களாலும், டாக்டர் வே. ராகவன் உள்ளிட்ட இசையறிஞர்களாலும் பதில் கூற முடியவில்லை!

கடைசியில் ஆசார்யர்களே, தமக்கே உரிய அடக்க குணத்தோடு பதிலையும் கேள்வியுருவிலே கேட்டார்கள். ''ஸ, ப இரண்டும் ஸ்வயம்புவான (தாமே தோன்றிய) பிரகிருதி ஸ்வரங்கள் என்பதால் அவை பரமசிவனின் முகத்தில் தோன்றியதாகக் கூடக் கொள்ளலாகாது என்றும் மற்ற ஐந்து, விக்ருதி ஸ்வரங்களே அவரது ஐந்து முகத்தில் தோன்றியதாகவும் வைத்துக் கொள்ளலாமோ?''

அப்படித்தானிருக்க வேண்டுமென்று இசையுலக மேதாவிகள் அனைவரும் ஒரு மனதாகக் கூறினார்கள்.

*

— தன்யா;

எஸ். வி. என்.

சந்தானத்தின் சபதம் -வெற்றிகரமான வாபஸ்!

'வெற்றிகரமான வாபஸ்' என்று கிண்டலாகப் பேசுவதுண்டு. ஆனால் சந்தானத்தின் சபதம் வாபஸானது மெய்யாலுமே வெற்றிதான்! அது ரசிகர்களின் வெற்றி மட்டுமல்ல; சந்தானத்துக்கும் வெற்றியே! எப்படி?

'சந்தானத்தின் சபதம்' என்று இந்த வருட ஆரம்பத்தில் கல்கியில் ஒரு பேட்டி. அதில் டிசம்பர் சீசன் இசை விழாக்களில் எதிலுமே தாம் இனி பாடப் போவதில்லை என்று சந்தானம் அறிவித்திருந்தார்.

தகுதியுள்ள இதர இளம் வித்வான்களுக்கு வழி விட்டு விலகுவது என்பது ஒன்று; பிறருடைய நல்ல கச்சேரிகளைக் கேட்கத் தமக்குச் சமயம் கிடைக்கும் என்பது இரண்டு. இந்த இரு காரணங்களையும் சந்தானம் கூறியிருந்தார்.

இப்போது தமது முடிவை மாற்றிக் கொண்டிருக்கிறார். காரணம், இவருடைய சபதத்துக்கு ஏற்பட்ட எதிர்பாராத எதிர்ப்புத்தான். அந்த எதிர்ப்பு நாலா திசைகளிலிருந்தும் ரசிகர்கள், சபாக்கள், விமர்சகர்கள், இதர கலைஞர்கள் என்று பல தரப்பிலிருந்தும் கிளம்பியிருக்கிறது: எல்லாரும் சந்தானத்துடன் சண்டை போட்டிருக்கிறார்கள். பாடாமலிருப்பதற்கு அவர் கூறியுள்ள காரணங்கள் வலுவான காரணங்கள் அல்ல என்று வாதாடியிருக்கிறார்கள். இசை விழா என்றால் அதில் முக்கியமான பிரபல வித்வான் பாடவில்லையென்றால் களை கட்டாது என்று சபாக்காரர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ரசிகர்களோ கொடி பிடித்து மறியல் செய்வோம் என்னுமளவுக்கு மிரட்டியிருக்கிறார்கள்!

விமர்சகர் சுப்புடு சொல்கிறார்: "ஸ்வர சுத்தமும் சுருதி சுத்தமும் சாகித்ய சுத்தமும் பாவப் பொலிவும் பன்மொழிப் புலமையும் ஒருங்கே அமைந்தவர் சந்தானம் தான். பதறாமல் பாடிப் பரவசப்படுத்தும்' பக்குவம் அவர் பாட்டில் உண்டு. இசை விழாவின் போது அஞ்ஞாத வாசம் பூண அவருக்கு அதிகாரம் இல்லை. விழா சோபை குன்றும். மகாராஜபுரம் மக்கள் சொத்து. தட்டிக் கேட்க உரிமை அவர்களுக்கு உண்டு. அவரை வரும்படி செய்தால் சபாக்களுக்கும் வரும்படி உண்டு! முயற்சி திருவினையாக வேண்டும்!"

சந்தானத்தைப் பார்த்துக் கேட்டோம்: "சரி, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"நான் பாடப் போவதில்லை என்று தீர்மானம் செய்து உங்களிடம் சொன்ன பிறகு



முக்கியமாக ஒன்று புரிந்தது: நான் இந்தத் தீர்மானத்தை எடுக்க எனக்கே உரிமையில்லை. இதை உணர்ந்த பிறகு சபதத்தை வாபஸ் பெறுவதுதான் நியாயம்!"

விழாவில் பாடவில்லையென்றால் ஏதோ தனிப் பெருமை என்ற அர்த்தத்தில் கல்கிக்கு சந்தானம் ஜனவரியில் பேட்டி கொடுக்கவில்லை. அடக்கத்துடன்தான் சொன்னார். இப்போது தவறான சபதம் என்று உணர்ந்த பிறகு வரட்டுக் கௌரவம் பாராமல் வாபஸ் பெறுவது அவருக்குத் தோல்வியல்ல; தார்மீக வெற்றியே. ரசிகர்களுக்குப் பெரு வெற்றி என்று கூறத் தேவையில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக இசை உலகுக்கு மகத்தான வெற்றி!

— நமது நிருபர்

ராயல் பூடான் அரசு

500-வது பம்பர்

வென்றிடுவீர்!

1வது பரிசு நா/ரூ.

50 லட்சம்


2 வது பரிசு

நா/ரூ. **1 லட்சம் X (500)**

முதன் முறையாக மிகச் சிறந்த
பரிசுகளைப் பெறுங்கள்.


500வது குலுக்கல் 15.1.89

**3வது பரிசு : 500
இலவச பயணம்**



**டிக்கட் விலை
நா/ரூ. 50/-**

நேரில் டிக்கட் பெற விரும்புவோர், ஆர்கனைசர்கள்/மொத்த விற்பனையாளர்/ பம்பர் விற்பனை நிலையத்திற்கு மணிஆர்டர் அல்லது டிமாண்ட் டிராப்ட் அனுப்பி டிக்கட்டுகள் பெறலாம். தபால் செலவு இலவசம்.




லைபாரி பிக்னிக் செட்

இலவச பரிசு
ஒவ்வொரு
5 கூப்பன்களுக்கும்.

- பரிசுத் தொகையை உடனுக்குடன் அளிக்கிறது.
- குலுக்கல் தேதிகளில் மாற்றம் கிடையாது.
- வருமானவரி பிடித்தம் கிடையாது.
- பரிசுத் தொகைக்கு ராயல் பூடான் அரசு உத்தரவாதமளிக்கிறது.

இலவச பரிசு
ஒவ்வொரு
20 கூப்பன்களுக்கும்



வெள்ளி தட்டு

ஜிதேந்திரா லாட்டரி ஏஜென்ஸி,
98/1, அவ்வை சண்முகம் சாலை,
சென்னை-600 014. போன்: 470444
டெலக்ஸ்: 6014 Code: 041 LUCK-IN

துணைச் செயலாளர், ராயல் பூடான்-
அரசு லாட்டரீஸ், பண்ட்ஷோலிங், பூடான்.



• சம்பிரதாயவில்...

மரபைக் காக்க ஒரு மகத்தான பணி

இளைஞர்கள் நாடும் இசை நூலகம்

இசையைப் பொருத்தமட்டில் ஒலி பெருக்கி என்பது ஓர் அனுகூலமாக இருப்பதற்குப் பதில் பல காரணங்களால், பல சந்தர்ப்பங்களில் அவஸ்தையாக முடிந்து விடுவதை அனுபவித்திருக்கிறோம். ஆனால் பெரிய அரங்குகளுக்கு மைக் இன்றியமையாததாகி விட்டது. சிறிய, அடக்கமான அரங்கில் அளவான ரசிகர் கூட்டத்திற்கு முன் ஒலிபெருக்கி இன்றி நடக்கும் கச்சேரிகள் 'மைக் தொல்லையால்' பாழாவதில்லை என்பது ஒருபுறமிருக்க, பாடகருக்கும் ரசிகர்களுக்குமிடையேயான இணக்கம் அதிகரித்து அதனாலேயே கச்சேரி இருசாராருக்கும் அதிக திருப்தி தருவதாக அமைகிறது.

இத்தகைய ஒலிபெருக்கியற்ற கச்சேரிகள் பலவற்றை நடத்தி ஆத்மார்த்தமான ரசிகர்களின் ஆதரவையும் பாராட்டையும் பெற்று வரும் அமைப்பு சம்ப்ரதாய.

சம்ப்ரதாயவின் ஆதரவில் நடந்த கச்சேரிகள் யாவும் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. டேப்புகளில் நவீன ஒலிப்பதிவு சாதனங்களின் துணையுடன் செய்யப்பட்ட ஒலிப்பதிவிலிருந்து காஸெட்டுகளுக்கு மறு ஒலிப்பதிவு செய்து, அவற்றைப் பொது மக்கள் வந்து போட்டுக் கேட்பதற்கு வசதியாக பல வாக்மென்களை வாங்கி வைத்திருக்கிறார்கள். இவர்களே நடத்திய கச்சேரிகள் தவிர, அந்தக் காலத்து தண்டபாணி தேசிகர் பாட்டு, காரைக்குடி சாம்பசிவையர் வீணை, பல்லடம் சஞ்சீவ ராவ் புல்லாங்குழல், பாலசரஸ்வதி, ஜெயம்மாள் பதங்கள் போன்றவற்றையும் இசைப் பிரியர்கள் இங்கே கேட்டு மகிழலாம். ஆனால் எந்த காஸெட்டையும் சம்பிரதாயவின் இசை நூலகத்திலிருந்து வெளியே கொண்டு போக



• லுட்விக் பேஷ்



• பரிமளா ராவ்

முடியாது.

சம்ப்ரதாய'வுடைய ஒலிப்பதிவுகளின் சிறப்பம்சம் — அவை நிகழ்ச்சிகளின் நேரடி ஒலிப்பதிவு என்பது மட்டுமல்ல, ஒலிப்பதிவு நிறுவனங்கள் செய்வது போல் மிருதங்கத்தையோ வயலினையோ மிகைப்படுத்தியோ, **special effects** சேர்த்தோ கச்சேரியின் ஜீவனை இவர்கள் மாற்றுவதில்லை என்பதும்தான்.

ஞாயிற்றுக் கிழமையானால், 'சம்பிரதாய' இயங்கி வரும் பழங்காலக் கட்டடத்தில் இளைஞர்கள் சிறு தேனீக் கூட்டமாக மொய்ப்பார்கள். ஒரு கோயிலுக்குள் நுழையும் பயபக்தியுடன் காலணிகளை வெளியே விட்டு விடுவார்கள். சிலர் பழங்கால கிராம்ஃபோனில் எம்.எல்.வி.யின் 'எல்லாம் இன்ப மயத்'தை ரசிக்க, வேறு சிலர் ஏதேனும் ஒரு காஸெட்டைத் தேர்ந்தெடுத்து வாக்மனைக் காதில் மாட்டிக் கொள்வார்கள். இன்னும் சிலர் தாங்கள் கேட்கும் பாட்டோடு தொடர்புடைய ஏதேனும் ஒரு புத்தகத்தையும் பிரித்து வைத்துக் கொள்வார்கள். இசை ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளவர்கள், 'சம்பிரதாய' அகர வரிசைப்படுத்தி வைத்துள்ள இசை மற்றும் இசைக் கலைஞர்கள் சம்பந்தமான கோப்புகளைப் புரட்டிக் குறிப்பு எடுத்துக் கொள்வார்கள்; அல்லது பதிவு செய்து வைக்கப்பட்டுள்ள இசைக் கலைஞர்களின் பேட்டிகளைப் போட்டுக் கேட்டும் அவர்களது புகைப்பட ஆல்பங்களைப் புரட்டியும் பயனுள்ள பல விஷயங்களை அறிந்து கொள்வார்கள்.

கர்நாடக இசைக்கு ஓர் ஆவணக் காப்பகத்தையே ஏற்படுத்தியிருக்கிறது சம்பிரதாய. அதனைக் கருத்தோடு பாதுகாத்து வருவதோடு, ஆர்வமுள்ளவர்களுக்கு அந்த ஆவணங்கள் பயன்படும்படியும் செய்து வருகிறது. சம்பிரதாயவை நாடி வருபவர்கள் இளைஞர்களும், இசை மாணவர்களும் மட்டும் அல்ல. தஞ்சாவூர் சங்கரய்யர், சேஷகோபாலன், ரவிகிரன், சந்தியாவந்தனம் சீனிவாசராவ், நெய்வேலி சந்தான கோபாலன் போன்ற வித்வான்களும் கூடத்தான்.

பாரம்பரிய இசை தொடர்பான பின்னணிச் செய்திகளைப் படிப்படியாகச் சேகரித்துத் தொகுத்து இந்த ஆவணக் காப்பகம் உருவாக உதவியவர் பரிமளா ராவ். ஆனால் இதனை அமைக்க வேண்டும் என்ற யோசனை முதன் முதலில் தோன்றியது, லுட்விக் பேஷ் என்ற ஜெர்மானிய இளைஞருக்கும் தற்போது அமெரிக்காவில் வசிக்கும் மைக்கேல் நிக்சனுக்கும்தான்.

ஹெச். ராமச்சந்திர சாஸ்திரியிடம் எட்டு வருடங்களாகப் புல்லாங்குழல் பயின்று வருகிறார் பேஷ்.

"கர்நாடக இசையின் அழகும் அமைதியும் பாங்கும் இயல்பாகவே என்னைக் கவர்ந்தன. சவுக்க காலத்தில் நிறுத்தி, நிதானமாகப் பாடும் போது, அதில் மனம் லயித்துப் போய்க் கரைந்து விடுவதை அனுபவித்து உணர்ந்தேன். புராதனமான இந்த இசையின் மகத்துவம் எனக்குப் புரிந்தது. இதில் கிடைக்கும் ரசானுபவத்தை ஒவ்வொருவரும் தாமாகவேதான் அனுபவித்து உணர வேண்டும். கர்நாடக இசையைப் போற்றிப் பாதுகாக்கவும் அதே சமயத்தில் அதன் பெருமைகளைப் பரவலாக்கவும் 'சம்பிரதாய' போன்ற அமைப்பு உதவும் என்று நினைக்கிறேன்" என்று கூறும் பேஷ் தமக்குத் தாய்நாடு திரும்பும் எண்ணமே தோன்றவில்லை என்கிறார்! அவருக்கு ஒரு 'பலே பேஷ்' போட்டு, தில்லியிலுள்ள ஃபோர்ட் ஃபவுண்டேஷன் 'சம்பிரதாய'வுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

சென்னை, மயிலாப்பூரில், நெ 1, சுப்பிரமணியம் சாலையில் 'சம்பிரதாய' இயங்கி வரும் பொருத்தத்தை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.

— **சாருகேசி**

அட்டை வண்ணப்படம், புகைப் படங்கள்: **யோகா**

(அட்டையில்: இசை கேட்க வந்திருப்பவர்கள் நந்தினி — லலிதா சகோதரிகள். 'வயலின் ட்ரியோ' எல். வைத்தியநாதன், எல். சங்கர், எல். சுப்ரமணியம் ஆகியோரின் மருமகள்கள். தாத்தா லட்சுமி நாராயணனிடம் வயலின் கற்றுக் கொண்டு இவர்கள் இப்போது அரங்கேறி, சிறப்பாக வாசித்து வருகிறார்கள்)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157: ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



அறிமுகம்
International Lux
International Lux BEAUTY SOAP
LUX
"70 நாடுகளிலே பெரிதும் விரும்பப்படும் மேனியெழில் பராமரிப்பு சோப்புதான் எனக்கும் பெருவிருப்பம்!" ஸ்ரீதேவி
70 நாடுகளிலுள்ள மிக அழகான சினிமா நட்சத்திரங்கள் தேர்ந்தெடுக்கும் ஒரே மேனியெழில் பராமரிப்பு சோப்—இன்ட்டர்நேஷனல் லக்ஸ்.
ஏனெனில், செழுமையான, செறிவான நுரையும், உலகே விரும்பும் நறுமணமும் உள்ளது இன்ட்டர்நேஷனல் லக்ஸ் மட்டுமே.
இப்போது, இந்த சர்வதேச தரமேன்மையுள்ள மேனியெழில் பராமரிப்பு உங்களுக்கும் கிடைக்கிறது, இந்தியாவில்.
International Lux
உலகெங்கும் சினிமா நட்சத்திரங்களின் அழகு சோப்.
HTA 1953
இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமிக்க தயாரிப்பு.

REGISTERED

